ஓம்

பிரசண்ட விகடன்

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் "

மலர் 4. சென்னை, 1936ஞு ஜூலைமீ 1௳ இதழ் 7.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	தேவதாஸிகளும் கவனிக்க	2
2.	காலச் சக்கரம்	4
3.	கலியாண வயது	5
4.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	9
5.	கட்டிடமும் நிர்மாண வேலையும்	17
6.	' எங்கள் பாட்டி '	21
7.	கலியாணப் பரீக்ஷை	24
8.	ஹாஸ்டல் கொலை	26
9.	நாகரிக மோகினி மிஸ். லீலா	32
10.	குருட்டு ஜோஸியம்	35
11.	தேவலோகத் தபால்	38
12.	ஜன்னிப் பிதற்றல்	41
13.	ஆடல் பாடல்	49

" விகடனி "ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

தேவதாஸிகளும் கவனிக்க

"விபசாரம் செய்வது தீமை" என்று முழங்காத சமய சாஸ்திரங்கள் இல்லை; நீதி நூல்கள் இல்லை. உலகத்திலுள்ள ஒழுக்கநூல்களும் சமய நூல்களும் விபசாரக் கொடுமைகளைப்பற்றி சாங்கோபாங்கமாக விரித்துரைத்திருக்கின்றன. அரசாங்கச் சட்டமும் விபசாரத்தைக் குற்றமாகத் தடை செய்கிறது. விபசாரத்தால் மக்கள் சமூகமே நோய்க்களஞ்சியமாய் அழிகிறது என வைத்திய நூல் வல்லார் அநுபவத்தில் கண்டறிந்து எச்சரிக்கை செய்து வருகின்றனர். விபசாரம் உலக முழுவதிலும் பாவியிருக்கும் தீமையாதலால் ஜினிவாவில் உள்ள சர்வதேச சங்கமும் விபசாரத்தைத் தடை செய்ய முயன்று வருகிறது. சென்னை மாகாணமும் இதில் சிரத்தை காட்டி வருகிறது. சென்னையிலுள்ள உஷார் சங்கம் விபசாரத் தீமையை நீக்க அரும் பாடுபட்டு வருகிறது. இச் சங்கத்தின் தீவிர முயற்சியினாலேயே இங்கே விபசாரத் தடைச் சட்டமும் இயற்றி வைக்கப்பட்டது. அச் சட்டம் முதலில் சென்னை நகர அளவில் அமலில் இருந்தது. நாளாவட்டத்தில் வெளி நகரங்களிலும் அமலுக்குக்கொண்டு வரப்பட்டுவருகிறது. விபசாரத் தடைச் சட்டத்தால் கருதிய பயன் கைகூடி வரவில்லை என்றே கூறவேண்டும். சென்னை முதலிய நகரங்களில் விபசாரிகள் பட்டப் பகலில் பகிரங்கமாய்த் தெருவில் நின்று அழைக்கும் நிலைமை ஒருவாறு மாறியிருக்கிறதே யொழிய மற்றப்படி ரகசிய வியாபாரம் ஒரு சிறிதும் குறையவே இல்லை எனலாம். சட்டம் இயற்ற விரும்பியவர்கள் மீட்கப்படும் பெண்கள் தங்கித் தங்கள் வாழ்க்கைக்கு வழிகாண மீட்சி விடுதிகட்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பணம் இல்லை என்ற சாக்குப் போக்குக் காட்டப்பட்டு வருகிறது. இதைப்பற்றி விரிவாக விவரிப்பது இத் தலையங்கத்தின் நோக்கம் அன்று.

ஒன்று மறியாத இளம் பெண்கள் வயிற்றுக் கொடுமையால் விபசாரக் குச்சக்காரர்களின் ஏமாற்ற வலைகளில் எளிதில் மாட்டிக் கொள்கின்றார்கள். விபசாரத் தரகர்கள் பெண்களை ஏமாற்றிக் கொண்டுவந்து நரக வேதனைக்கொப்பான விபசாரத் தொழிலில் ஈடுபடுத்திவிட்டுச் சென்று விடுகின்றனர். பிறகு பேதைப் பெண்கள் வேறு உய்யும் வழியறியாது அக் கொடுந்தொழிலில் ஈடுபட வேண்டியவர்களாயிருக்கின்றனர். இதே நிலைமை இந்தியா வெங்கும் இருக்கிறது. விபசாரத்தில் ஈடுபடுவதற்கு வயிற்றுக் கொடுமையே முக்கிய காரணம். மானம் பெரிதா? உயிர் பெரிதா? என்ற பிரச்னை எழும்போது உயிரைவிட மானமே பெரிது என்பதை எவரே மறுக்கத் துணிவார்? விபசாரம் செய்து வயிறு கழுவுவதைக் காட்டிலும் பட்டினி கிடந்து உயிர் துறப்பதுமேல் என்னும் உயரிய உண்மை நாட்டில் பரவினால் விபசாரக்கொடுமைக்கு ஒருவாறு பரிகாரம் கிடைக்கும். முன்னர் நமது தமிழ்நாட்டில் தெய்வங்களின் பெயராலும் சமய சாஸ்திரங்களின் பெயராலும் வெளிப்படையாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விபசாரத்தை ஒழிக்க ஒரு சிலர் முயன்றனர். அவர்களுள் டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார் தலைசிறந்தவராவர். அதாவது தேவதாஸி முறையையே அடியோடு ஒழித்து விடவேண்டும் என்று டாக்டர் அம்மையார் தீவிரமாக முனைந்து நின்றார். ஆனால் அதற்கு எதிர்ப்பு வெகுபலமாகக் கிளம்பி விட்டது. கோவில்களில் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி விடும் வழக்கம்

வேண்டாம் என்றவுடன் வைதிகர்கள் சமயம் போச்சு! சாஸ்திரம் போச்சு! கடவுள் போச்சு! என்று கூக்குரல் போடத் தொடங்கி விட்டனர். சிறந்த அரசியல் தலைவர்கள்—முற்போக்கானவர்கள் என்று கருதப்பட்டவர்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு டாக்டர் அம்மையாரின் நன்முயற்சியைத் தகர்த்தெறிந்தார்கள். தேவதாசிகளில் ஒரு சில முக்கியஸ்தர்களும் பலமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கூக்குரலிட்டார்கள். எனவே டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையாரின் நன்முயற்சி வீணாயிற்று என்பதை விரிக்கவேண்டியது அநாவசியம்.

பெண்களுக்குத் தூய கடவுளர் சந்நிதியில் பொட்டுக் கட்டி அவர்களை விபசாரிகளாக்குவது கூடாது என்றதற்கு என்ன சமாதானம்? கோயில்களில் விடப்பட்டிருக்கும் மானிய வருவாய் போய் விடும் என்பதொன்றே சமாதானம். எனவே வயிற்றுப் பாட்டுக்கு விபசாரம் செய்வோம் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டவாறாயிற்று. இதற்கென்ன சமாதானம் கூறுவது? மானியப் பொருளை இழக்காமல் இருந்தால் பொட்டுக் கட்டுவதை நிறுத்துவார்களா என்றால் அதுவும் சந்தேகம் என்னும் உண்மை அப்பொழுதே வெளியாகிவிட்டது. சமீபத்தில் பம்பாய் விபசாரிகட்கு டாக்டர் அம்பெத்கார் செய்துள்ள உபதேசத்தைத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா வகையான விபசாரிகளும் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்பது "விகட"னது ஆசை. அது வருமாறு:—

"நீங்கள் (விபசாரிகள்) எங்களுடன் சேர்ந்திருக்க வேண்டுமானால் உங்களுடைய அவமானகரமான வாழ்க்கையை விட்டுவிடவேண்டும். நீங்கள் மகர் சமூகத்திற்கே பெரும் களங்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய முறைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால் நாங்கள் உங்களுக்கு எந்த விதத்திலும் உதவியாக இருக்க மாட்டோம்"—தென்னாட்டில் உள்ள தேவதாசிகளைப் பார்த்துச் செல்வாக்குள்ள நம்முடைய அரசியல் சமூகவியல் தலைவர்கள் இவ்வாறு கூறினால் உண்மையில் எவ்வளவோ நன்மை விளையும். கூடிய விரைவில் தேவதாசி முறையையே இருந்தவிடம் தெரியாமல் செய்துவிடலாம். இப்பொழுது திருவனந்தபுரம் முதலிய சுதேச சமஸ்தானங்களில் கோயில்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் ஒழிக்கப்பட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும். ஆனால் நம்முடைய தலைவர்கள் என்பவர்கள் இங்ஙனம் துணிவுடன் கூற முன்வருவார்கள் என்று கனவிலும் கருதமுடியவில்லையே. விபசாரத்தை விட்டால் வயிற்றுக்கு இல்லையேயென்னும் வாதத்தை டாக்டர் அம்பெத்கார் ஒரு சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் அங்கே கூறியதைப்பாருங்கள் "விபசாரத்தை விட்டால் எப்படி வாழ்வது என்று நீங்கள் கேட்பீர்கள். அதை நான் சொல்லப் போவதில்லை. வயிறுவளர்க்க நூறுவித முறைகள் இருக்கின்றன. நீங்கள் விபசார வாழ்க்கையை விட்டு மற்றப் பெண்களைப்போல் விவாகம் செய்து சாமானிய குடும்பப் பெண்களைப்போல் வாழ முயலுங்கள். விபசாரத்தில் கொண்டு போய் விடும்படியான நிலைமையில் வாழாதீர்கள்"—இந்த உபதேசத்தை நமது நாட்டில் உள்ள சாதாரண விபசாரப் பெண்களும், தேவதாசிகளும் சிரத்தையுடன் கவனிக்கவேண்டும் என்று "விகடன்" விரும்புகின்றான். வயிற்றுப் பாட்டுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது மானவுணர்ச்சியும் அறிவும் உடையோர் கூற்றாகாது. எனவே புத்துணர்ச்சியும் புது வேகமும் மேலோங்கிவரும் இக்காலத்தில் தேவதாசிகள் மானிய வருவாய்க் காரணங்காட்டி விபசாரத்திற்கு ஆக்கந் தேடிக்கொண்டிருப்பது எவ்வகையிலும் நியாயமாகாது. டாக்டர் அம்பெத்கார் கூறியதுபோல் தேவதாசிகளும் தங்கள் பெண்களுக்குக் கலியாணம் செய்து ஒழுங்கான வாழ்க்கைக்கு ஆதரவு தேடவேண்டும். இன்றேல் பெண்ணுலகிற்கே பெருங் களங்கமாயிருக்கும் பழி தேவதாசிகளைச் சேரும்.

காலச் சக்கரம்

பர்மாவுக்கு அதிர்ஷ்டம்?

பல நாட்கள் முயற்சியின் பயனாக பர்மா இந்தியாவிலிருந்து பிரிவினையாகி விட்டது பர்மியர்களிலேயே மிக முக்கியஸ்தர்களாக இருப்பவர்கள் இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரிக்கக்கூடாது என்று எதிர்த்துவந்தும், பிரிட்டிஷ் சர்க்கார் விடாப்பிடியாய் அதைப் பிரித்துவிட்டதின் இரகசியம் என்னவென்று "விகடனு"க்குப் புலப்படவில்லை. வேறென்ன அந்தரங்க நோக்கம் இருக்கப்போகிறது? பிரிட்டிஷ் சர்க்கார் பிரித்தாளும் தந்திரத்தில் பேர் போனவர்களல்லவா? அவர்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தியாவைப் பல பாகங்களாகப் பிரித்து ஒன்றோடொன்றை முட்டவிட்டால்தான் சௌகரியமாக இருக்கும் போலும்! எப்படியோ பர்மியர்களுக்குச் சுயாட்சி கிடைத்துவிட்டது. புதிய அரசியல் சீர்திருத்தமும் அங்கு கூடியசீக்கிரம் அமுலுக்கு வரப்போகிறது. வருகிற நவம்பர் மாதத்தில் பொதுத்தேர்தல் நடக்குமெனத் தெரிகிறது. இனி பர்மியர்களுக்கு என்ன குறை?

* * *

திவான்பகதூர். முதலியார்

நமது திவான்பகதூர் இராமசாமி முதலியாரைத் தமிழ் நாட்டாருக்கு அறிமுகப் படுத்தவேண்டியதில்லை. ஏன்? இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும், இங்கிலாந்திலும் அரசியல் சம்பந்தப் பட்டவர்களுக்கு அவரை நன்கு தெரியும். அவர் சிறந்த அரசியல் நிபுணர்; ஆற்றொழுக்கு போல் சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் மிகவுடைய நாவலர்; ஒப்பற்ற பத்திராசிரியர். இத்தகைய பேரறிஞர் அவரது ஆற்றலுக்கு ஏற்ற அளவு நல்ல பெயரும் பிரசித்தியும் பெறாதற்குக் காரணம் அவர் சேர்ந்திருக்கும் அரசியல் கட்சியேயாகும் என்றால் யாரும ஆச்சரியப்பட மாட்டார்கள். அவர் பட்டம் பதவிகள் பெறுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாது, தேச நன்மைக்காகவும் பாடுபடும் கட்சியில் சேர்ந்து, சிறந்த தியாக வுணர்ச்சியுடையவரா யிருந்திருப்பாரானால், இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்க பிரமுகர்களில் ஒருவராய் விளங்குவார். என்னமோ அவரது ஜாதகம் வேறுவிதமாய்ப் போய்விட்டது. இப்போது அவர் ஏதோ முக்கிய பதவிகளைப் பெற்று வருகிறாரென்றால் அதற்கு அவரது தன்முயற்சியும் அறிவாற்றலும் காரணமே யொழிய, அவர் சேர்ந்திருக்கும் கட்சியாலோ பிறவற்றாலோ என்று கூறமுடியாது.

* *

இந்தியா கவுன்ஸிலில் பதவி

திவான்பகதூர். இராமசாமி முதலியாருக்கு இப்போது, லண்டனிலுள்ள இந்தியா மந்திரி சபையில் மெம்பர் பதவி கிடைத்திருப்பதைக் கேட்டு "விகடன்" மகிழ்கிறான். அப்பதவியில் இது வரை ஸர் அதுல்சாட்டர்ஜி இருந்து வந்தார். இப்பதவியில் இவருக்கு முன் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் இருவர் இருந்திருக்கிறார்கள். இப்பதவி வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதிவரையில்தான் நீடித்திருக்குமென்றும், பின் இந்தியா மந்திரி சபை கலைக்கப்பட்டு விடுமென்றும், அச்சபைக்குப் பதிவாக இந்தியா மந்திரிக்கு யோசனை கூற மூவருக்குக் குறையாமலும் ஆறு பேருக்கு மேற்படாமலும் உள்ள ஆலோசனைசபை ஏற்படுத்தப்படுமென்றும் கூறப்படுகிறது. இப்போதுள்ள சபையில் ஸ்தானம் பெற்ற திவான்பகதூர் முதலியார், அச்சபையிலும் அங்கம் வகிக்காமலிருக்க மாட்டார். இவர் இப் பதவி பெறுமுன் 'டாரிப் போர்ட்' மெம்பர்கள் மூவரில் ஒருவராய் இருந்து வந்தார் என்பது பலர்க்குந் தெரியும். லங்காஷயர் ஜவுளிகள் மீதுள்ள இறக்குமதி வரி சம்பந்தமாக அப்போர்டார் செய்துள்ள சிபார்சும் வெளியாய்விட்டது. அச்சிபார்சை, சர்க்கார் அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தெரிகிறது. இப்போர்டாரின் சிபார்சு இந்திய ஜவுளி வியாபாரத்துக்குப் பாதகம் விளைக்கக் கூடியதாக இருக்கிறதென புகார் கூறப்படுகிறது. அது வேறு விஷயம். எப்படியோ திவான்பகதூர் முதலியாரின் வாழ்க்கை லட்சியம் ஒருவாறு நிறைவேறிவிட்டது.

கலியாண வயது ("சித்திரகுப்தா"வின் விருந்து)

—(0)—

"எனக்கு நீங்கள் எல்லாரும் ஒரு சின்ன டீபார்ட்டி கொடுக்க வேண்டும். நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி தெரியுமா?" என்று சிரித்துக் கொண்டே ஹாலுக்குள் நுழைந்தாள் குமாரி நிர்மலாதேவி.

அந்த ஹால் ஒரு பெண்கள் கலாசாலையைச் சேர்ந்த போர்டிங் ஹௌஸ் மேட்ரனுக்குரியது. அதில் ஒரு அழகான வட்டமேஜை போடப்பட்டிருக்கிறது. சுற்றிலும் மூன்று ரோஸ்வுட் நாற்காலிகள். ஒரு சாய்வு நாற்காலி கொஞ்சம் தள்ளியிருக்கிறது. பின்னும் சிறிது தூரத்தில் ஒரு கேம்ப்காட் இருக்கிறது.

அச்சமயத்தில் நான்கு பெண்மணிகள் உல்லாசமாக உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஹாலுக்கு அதிகாரியாக இருப்பவள் சுசீலாதேவி எம். ஏ. சற்றுக் குள்ளமாகவும் பருமனாகவும் இருக்கிறாள். மாநிறம். முகத்தில் பருத்தழும்புகள் துலாம்பரமாகத் தெரிகின்றன. ஒளிமிகுந்த சிறிய கண்கள், ரோல்டு கோல்டு கட்டடம் அமைந்த கண்ணாடி—அவளுக்கு ஒரு விநோத அழகைத் தந்து கொண்டிருக்கின்றன. அவளுக்கு வயது 25. ஆனால் பார்ப்பவர்களுக்கு 35 வயதானதுபோல் தோன்றுகிறாள். சுசீலாதேவி கேம்ப் காட்டில் உட்கார்ந்திருக்கிறாள்.

அவளுக்கு இடது பக்கத்தில் பாக்கியவதி தேவி பி. ஏ. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் முகம் அழகு செறிந்து ஆனந்தம் அளிக்கிறது. கன்னங்கள் கண்ணாடிபோல் ஒளிர்கின்றன. அவள் அணிந்துள்ள கண்ணாடி ஒருவித சோபை

தந்து நிற்கிறது. தனக்கு வயது 26 என்று தோழிமாரிடம் சொல்லிக் கொண்டாலும் 35 வயதுக்குக் குறையாது என்று எல்லாரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

சுசிலாதேவிக்கு எதிரில் கமலாதேவி எம். ஏ. உல்லாசமாய் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். கோமளாகாரமான கோல முகம். பாந்த கண்கள். கையில் உயர்ந்த வாட்ச் அழகு செய்து கிடக்கிறது. அவள் தனது வயது 22 என்று இறுமாப்புடன் சொல்லிக் கொண்டாலும் நம்ப முடியவில்லை,

சுசிலாதேவிக்கு வலது பக்கம் மாளினிதேவி பி. ஏ. ஒரு நாற்காலியில் வீற்றிருக்கிறாள். பொலிவுடன் விளங்கும் பாந்த கண்கள். உயர்ந்த வமிசத்தில் பிறந்தவளைப்போல் காட்சி அளிக்கிறாள். பார்ப்பவர்கள் 23 வயது மதிக்கிறார்கள். அவள் தனக்கு 26 வயது என்று சொல்லுவதை யாரும் நம்புவதில்லை.

குமாரி நிர்மலாதேவி ஹாலுக்குள் பிரவேசித்தவுடன் அவர்கள் கைகளில் வைத்துக் கொண்டிருந்த சீட்டுக்களை எறிந்து விட்டார்கள். மேஜைமீது சில சீட்டுக்கள் சிதறிக் கிடக்கின்றன. நிர்மலா உற்சாகமாய் "என் கலியாணம்—என் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. மாப்பிள்ளை யார் தெரியுமா? அந்த ரமேஷ்!—அந்த ரமேஷ்!! ஐ. சி. எஸ், எங்கள் அப்பாவிடமிருந்து காகிதம் வந்திருக்கிறது."

அந்த நான்கு கன்னிகைகளும் நிர்மலாவை வியப்புடன் நோக்கத்தலைப்பட்டனர். புன்முறுவலின் பூரிப்பு அவளுடைய கன்னங்களில் புடைத்துக் கொப்புளித்துக் கொண்டிருக்கிறது. சிறிது நேரம் அந்த ஹாலில் நிசப்தம் குடிகொண்டது. சுசிலாதேவி முதலில் நிசப்தத்தைக் கலக்கத் தொடங்கினாள். "இந்த சுபச் செய்தியைக் கேட்டு நான் மகிழ்கின்றேன். எனது ஆசீர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்" என்றாள். இந்த வார்த்தைகளை வெளியிட்ட போது சுசிலாதேவியின் தொனி கடினமாயும் கம்பீரமா யிருந்தது. பாவம் நிர்மலாவின் புன்முறுவல் மாயமாய் மறைந்து விட்டது. மிகவும் வியந்தவளாய் முகமெடுத்துப் பார்த்து இதென்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? என்று மெதுவாய்க் கேட்டாள்.

"காரணம் தெரிந்து கொள்ள விரும்புகின்றாயா? அப்படியானால் கொஞ்சம் கேள். நீ இவ்வளவு படித்தும், இவ்வளவு பயிற்சி பெற்றும் எத்தனையோ பெண்களுக்கு வித்தை போதிக்கும் உபாத்திமைப் பதவி பெற்றும் இளம் பெண்களுக்கு கல்வியறிவு விவேகம் புகட்டக்கூடிய நீ கடைசியில் ஒருவனுக்குப் பொண்டாட்டியாக இருக்கத் துணிந்துவிட்டாயே! கலியாணம்பண்ணி, பிள்ளைகுட்டிகளைப் பெற்றுச் சம்சார சாகரத்தில் விழுந்து தத்தளிக்கவா நீ இவ்வளவு படித்தாய்? உனது எதிர்கால வாழ்வு என்னவது? உனது முன்னேற்றத்திற்கு—க்ஷேமத்திற்குச் சிறிதும் வழியின்றிச் சுற்று மதில் கட்டிவைத்து விட்டாயா? நீ இப்பொழுது சுயநல மற்ற நல்ல தொண்டாற்றி வருகிறாய். தொண்டே உயரிய தருமம் என்று கடைப்பிடித்திருக்கிறாய். எப்பொழுது நீ உனது உயர்ந்த கல்வியை மறந்து கலியாணத்தில் கருத்தூன்றினையோ அப்பொழுதே உன் உயர் கல்வியும் அறிவும் வீணாயின. சுயநலப் பிராணியாகிய மனிதனுக்கு அடிமையாயிருந்து பிள்ளைகளைப் பெறுவதற்கு இந்தப் பாந்த உலகில் ஆயிரக்கணக்கான பாமரப் பெண்கள் கிடைப்பார்கள். மகாவிவேகவதியான நீயுங் கூடச் சேவாதருமத்தைக் கைவிட்டுக் கலியாணத்திற்கு ஆசை வைப்பது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. பரிதாபகரமாகவும் இருக்கிறது"—சுசிலா தேவியின் முகத்தில் ஆவேசத்தால் தோன்றிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். குமாரி நிர்மலாதேவி துக்கங் கொண்டவளாய்ச் சுசிலாதேவி உட்கார்ந்திருந்த கேம்பகாட் மீது உட்கார்ந்தவுடன் பாக்கியவதி தேவி தனது உபந்நியாசத்தைத் தொடங்கி விட்டாள்.

"நான் கற்பனையாகச் சொல்லவில்லை. எதற்கு, எந்த விதத்தில் ஒரு பெண் ஒருவனது ஆன்மாவாக இருக்கிறது? அதிக்கிரமக்காரனாகிய புருஷனுக்கு அடிமையாயிருக்க விரும்புகின்றாயா? வெட்கம்? வெட்கம்!! புருஷன் பதியா? ஸ்வாமியா? அதிகாரியா? பெண் மனைவியா? அடிமையா? வேலைக்காரியா? ஐயோ! எவ்வளவு அநியாயம். நாம் எவ்வளவு தூரம் அழிந்து பாழாகி விட்டோம்? நமக்குப் போதிய கல்வியைக் கொடுக்காமல் அடிமைகளாகச் செய்து வருகின்றார்கள். இப்பொழுது நம்மிலும் அநேக கல்வியறிவுள்ளவர்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் அவர்களோடு எல்லா விதத்திலும் சரியாவதற்கு முயன்று கொண்டிருக்கின்றோம். சரி செய்துவிட்டோம். நாம் இப்பொழுது அவர்களோடு சமானமாக இருக்கின்றோம். சமானம் என்ன! விசேஷமாகவே இருக்கின்றோம்"

கமலாதேவி சிரித்துக் கைகொட்டிக் கொண்டே "வெல்ஸெட்! வெல்ஸெட்!! (Well said! well said!!) நீங்கள் ஒரு வார்த்தையை மறந்து விட்டீர்கள். உங்கள் யோசனை என்ன யோசனை! நீங்கள் ஒரு புருஷனுக்கு வேலைக்காரியாக இருங்கள். அப்பொழுது நீங்கள் இனிமேல் பத்து ஆடவர்களை அடிமைகளாகச் செய்துகொண்டு "தேவி" போல் பூஜிக்கப்படுங்கள். "ராணி"யைப்போல் அவர்கள்மீது அதிகாரம் செலுத்துங்கள்" என்று ஹாஸ்யமாகக் கூறினாள்.

மானினிதேவி அப்பொழுது பேசாதிருந்தால் நன்றாயிராது என்று எண்ணிக் கொண்டு சிறிய பிரசங்கம் செய்தாள். "கமலா! நீ சொன்னதெல்லாம் உண்மை! உண்மை!! முற்றிலும் உண்மை! எனது சங்கதியைக் கேள். என்னுடைய தாய் தந்தையர்கள் சிறு வயதிலே எனக்குச் சிறப்பாகக் கலியாணம் செய்து வைத்தார்கள். எனக்கு நன்றாய் விவேகம் உதயமான பிறகு நான் புருஷனை உதறித் தள்ளிவிட்டேன். ஏன் என்பீர்களோ? அவன் அழகுடையவனாயிருந்தால் என்ன! ஆடம்பரமுடையவனாயிருந்தால் என்ன! அவன் எஜமானனாம். நான் அவனுடைய பாதங்களில் விழுந்து கிடக்கவேண்டிய ஒரு அடிமையாம். என்ன நீதி பாருங்கள்! எனவே நான் அவனை விட்டொழித்தேன். இன்றைக்கு என் நிலைமை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு "தேவி"யாக இருக்கிறேன். பூஜிக்கத்தக்க விதமாய் இருக்கிறேன்."

நிர்மலாவின் தைரியம் குன்றிப் போய்விட்டது. விம்மி விம்மி அழுதவண்ணம் "நீங்கள் எல்லாரும் மோசக்காரர்கள்—இருதயம் இல்லாதவர்கள்" என்று சொல்லிக்கொண்டே ஹாலைவிட்டு வெளியேறினாள். சிறிதுநேரம் வரை அந்த நால்வரும் மௌன விரதம் பூண்டிருந்தார்கள். மணி ஐந்தடித்தது. சுசீலாதேவி "உலாவப் போவோம் வருகிறீர்களா? புறப்படலாம்" என்று அவர்களைக் கேட்டாள்.

கமலாதேவி "எனக்குக் கொஞ்சம் தலைவலியாயிருக்கிறது. உலாவ வரமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே ஏதே யோசித்தவாக்கில் தன் அறைக்குள் சென்றாள். அறைக் கதவைத் தாழிட்டுக் கட்டிலில் படுத்துப் புரண்டாள். படுக்கைக்கு அடியில் வைத்திருந்த ஒரு புகைப்படத்தை எடுத்தாள். குமுறிக் குமுறி அழுது அந்த இளவாலிபன வடிவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் புகைப்படத்தின் கீழ் நல்ல கையெழுத்தில் "ஸுபோத் நவம்பர் 20" என எழுதப்பட்டிருந்தது. "ஸுபோத்! என்னைப் பிரிந்து சென்றாய்! நான் பெரிய குற்றம் செய்து விட்டேன். என்னை மன்னித்து மறுபடியும் அங்கீகரிக்கமாட்டாயா? நான் அற்ப ஆவேசத்திற்கு ஆளாகி உன்னை வெறுத்தேன். என்னைக் காதலிக்கின்றவர்கள் இப்போது யாரும் இல்லை. யாரும் இல்லை" என்று அழுது தலையணையைக் கண்ணீரால் நனைத்தாள்.

சுசிலாதேவி மானினிதேவியைப் பார்த்து "உலாவப் போவோம் வருகிறீர்களா?" என்று கேட்டாள். மானினி தேவி ஈன சுரத்தில் "மன்னியுங்கள். நான் சில கடிதங்களைப் பார்க்கவேண்டியிருக்கிறது. இப்பொழுது வெளியே வர முடியாது" என்று சொல்லிக்கொண்டே தனது அறைக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக்கொண்டாள். பிறகு அவள் கட்டிலில் படுத்துத் தலையணையில் முகத்தை வைத்து அழத்தொடங்கினாள். "இப்போது அவர் என்னை அங்கீகரிப்பாரா?......................அங்கீகரிக்க மாட்டார். தெய்வமே! என்னை மன்னி........ சாந்தியை அளிப்பாயாக" எனப் பிரலாபித்தாள்.

நிராசையான ஏமாற்றப் பார்வையுடன் சுசிலாதேவி பாக்கியவதி தேவி பக்கமாகத் திரும்பி "சரி! உங்களுக்குக்கூட வேலை இருக்கிறதா" என்று வினயமாய்க் கேட்டாள். பாக்கியவதி மெதுவாய் நாற்காலியைவிட்டு எழுந்து "இல்லை..................... ஆனால் .... ஆனால்...............ஒரு வேலையும் இல்லை. வருகிறேன். பாருங்கள். நாம் நிர்மலாவிடம் மிகவும் கடுமையாகப் பேசிவிட்டோம். கலியாணம் நாம் சொல்லுவது போல் அவ்வளவு கெடுதலானதில்லை. பாவம்! நிர்மலாவை அவசரப்பட்டு என்ன என்னமோ பேசிவிட்டோம். நாம் நம்முடைய மனங்களை முதலில் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்" என்றாள்.

பாக்கியவதி தேவியின் கைகளைச் சுசிலாதேவி கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டே உலாவப் போனபோது இவ்வாறு கூறினாள். "நீங்கள் இப்படி கம்பீரமாகவும் யோசனையுடனும் கூறிய வார்த்தைகள் நன்றாகவே இருக்கின்றன. ஆனால் காரியம் மீறிவிட்டது. மீறிவிட்டது. அந்த வார்த்தையை விட்டுவிடுங்கள். இப்பொழுது கலியாணத்திற்கு முயற்சிப்பது பயனற்ற வேலை. நம்முடைய கலியாண வயது வெகு காலத்திற்கு முந்தியே கடந்துபோய் விட்டது"

[ஹிந்தியில் ஸ்ரீஜத் பகவதிசரண வர்ம என்பவர் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு]

ஸ்ரீ வல்லப கணபதி ரக்ஷை.

இந்த வல்லப கணபதிரக்ஷை ஆகம சாஸ்த்ரோக்தமாய் மூலமந்திர பீஜங்களடக்கி லக்ஷம் கணக்கான ஜபதப ஹோமங்கள் செய்து அன்னசாந்தி செய்து அன்பர்கள் கோரிக்கை அனுகூலம் பெரும்படி இதை வெளியிடப்பட்டது. புத்ரசந்தானம், வ்யாபாரம், உத்யோகம் உண்டாகும். நவக்கிரஹ தோஷ நிவாரணை, குடும்பத்தில் கலஹங்கள் நீங்கி ஒத்துமை உண்டாகும். நம்பினவர்கள் சந்தோஷத்தை அடையலாம்.

இதன் விலை ரூ. 1. வி. பி. சார்ஜ் அணா 5.
ஸ்பெஷல் ரக்ஷை ரூபா 10—0—0 வி. பி. சார்ஜ் அணா 5.

ம-ா-ா-ஸ்ரீ T, சுப்பிரமணிய குருக்கள்,
தேவஸ்தானம்-ஸ்தானீகம், திருத்தணி போஸ்டு, சித்தூர் ஜில்லா.

ஸர்ட்டிபிகேட்:—T. S. ராமநாத அய்யர் எழுதிக்கொண்டது. தங்கள் கணபதி ரக்ஷை அணிந்ததினால் நான் நினைத்தது அனுகூலமாச்சுது.
T. S. ராமநாத அய்யர், P. W. D. சூப்பர்வைசர், N. A. Dt., திருப்பத்தூர்.

சீமாட்டி கார்த்தியாயினி

ஐந்தாவது அதிகாரம்.

கள்ளக்காதலை கணவனறிதல்.

காலை எட்டுமணியி லிருந்தே மவுண்டுரோட் வாலாஜா ரோட்டை நோக்கிக் கலாசாலை மாணவர்களும், மற்றும் உத்தியோகஸ்தர்களும் பொதுமக்களும் கூட்டங் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தனர். அன்று சென்னை நகரே சுறுசுறுப்பாக இருந்ததென்றால் மிகை யாகாது. உலகைச் சுற்றுப்பிரயாணஞ் செய்து போகு மிடமெல்லாம் வெற்றிமாலை சூடிக்கொண்டு வரும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாரும், இந்தியாவில் அக் கோஷ்டியாரோடு போட்டி போட்டு ஆடித் தங்கள் திறமையைக் காட்டிக்கொண்டு வரும் இந்திய கிரிக்கெட் கோஷ்டியாரும், நமது சென்னைமா நகருக்கு விஜயஞ் செய்திருக்கின்றனர். இவர்களது வருகையை முன்னிட்டு, 'மதராஸ் கிரிக்கெட் கிளப்'பில் ஒரு கிரிக்கெட் டோர்னமெண்டு (Tournament) ஏற்படுத்தப்பட்டிருந்தது. கடந்த மூன்று நாட்களாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாருக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டியாருக்கும் போட்டி யாட்டம் நடந்தது. அதில், மேஜர் டி. ஜி. பிள்ளை, ராமநாத், ஸ்ரீ நகரம் குமாரராஜா முதலியவர்கள் கிரிக்கெட் பந்தாட்டத்தில் தங்களுக்குள்ள தேர்ச்சியையும் ஆற்றலையும் காட்டி ஆடியும் முடிவில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாரே வெற்றி பெற்றனர். இம் முடிவு இந்திய இளைஞர்களிடையே ஒருவித தீவிர உணர்ச்சியையும் பரபரப்பையு முண்டுபண்ணி விட்டது.

நான்காவது நாள் சென்னை கிரிக்கெட் கோஷ்டியார் ஆஸ்திரேலிய கோஷ்டியாரோடு ஆட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னை கிரிக்கெட் கிளப் முக்கியஸ்தர்கள் எப்படியும் ஆஸ்திரேலிய கோஷ்டியாரை வென்று பெரும்புகழ் பெறவேண்டுமென்ற எண்ணத்தோடு, தங்கள் கிளப் மெம்பர்களில் திறமையாக ஆடக் கூடியவர்களோடு, சென்னை மாகாணத்தைச் சேர்ந்த மற்ற வெளியூர்களிலிருந்த நல்ல ஆட்டக்காரர்களையும் வரவழைத்து ஒரு கோஷ்டியாகச் சேர்த்திருந்தனர். ஆகவே இன்று ஆட்டம் பார்ப்பதற்கு மிகவும் ருசிகரமாக இருக்கு

மென்பது பந்தாட்டங்களில் வழக்க முடைய வாலிபர்களது கருத்து. எனவே, கடந்த மூன்று நாட்களைக் காட்டிலும் இன்று கூட்டம் மிக அதிகம்.

இக் கிரிக்கெட் பந்தாட்ட பந்தயத் துக்காகச் சர்க்கார் காரியாலயங்களும், மற்றும் பிரபல ஆபீஸ்களும் மூடப்பட்டு விடுமுறை விடப்பட்டது. ஆதலால், அந்த ஆபீஸ்களின் பெரிய உத்தியோகஸ் தர்கள் முதல் சாதாரண குமாஸ்தா வரை இதைக் காண வந்திருந்தனர். பிரமுகர் கள் வரிசையில் சென்னை கல்விமந்திரி திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை யும், அவரது மனைவி சிமாட்டி கார்த்தி யாயினியும் அமர்ந்திருந்தனர். கார்த்தி யாயினி உற்சாகத்தோடு காணப்பட்டாள். திவான்பகதூர் பிள்ளையவர்களோடு பக் கத்திருந்த ஆங்கிலேயப் பெண்மணி யொருத்தி ஏதோ உரையாடிக் கொண்டி ருந்தாள். அவள் சர்க்கார் உத்தியோகத் தில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒருவரது மனைவிபோலக் காணப்பட்டாள். அவ் வாங்கில மாது இடையிடையே கார்த்தி யாயினி யுடனும் பேச்சுக் கொடுத்து கொண்டிருந்தாள். ஆனால் கார்த்தியா யினியின் கவனமெல்லாம், வேறெங்கோ சென்றிருந்தது. அவளது நீலவிழிகள் அப்போதுதான் ஆட்ட மைதானத்துக் குச் சென்று கொண்டிருக்கும் சென்னை கோஷ்டியாரை ஒவ்வொருவராக ஆராய் ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு பந் தாட்டக்காரரும் மைதானத்தை நோக்கி வரும் போதெல்லாம் ஜனங்கள் கை கொட்டி ஆவாரஞ் செய்யலாயினர்.

ஆட்டம் ஆரம்பமாயிற்று. முத லிலேயே ஆஸ்திரேலிய கோஷ்டியாரும், சென்னை கோஷ்டியாரும் தீவிரமாக ஆட லாயினர். முதலில் சென்னை கோஷ்டியார் முதல் இன்னிங்கிலேயே 'ரன்'கள் அதிக மெடுத்தனர். பின்னர், ஆஸ்திரேலிய கோஷ்டியார் கை வலுத்தது. ஆஸ்தி ரேலிய 'போலர்' (Bowler) கையை முறுக்கிக்கொண்டு பந்தைத் தீவிரமாக எறிய லானார். எனவே, சென்னை கோஷ்டி 'பேட்மென்'கள் ஒருவர் பின் ஒருவராய் 'அவுட்' ஆகிக்கொண்டே வந்தனர்.

பின்னர் சென்னை கிரிக்கெட் உலகி லேயே பிரசித்தி பெற்றவரும், இந்திய கிரிக்கெட் கோஷ்டியோடு சேர்ந்து திக் விஜயஞ் செய்து வருபவருமான ஸ்ரீ. வி. வி. ஜெயபாலன் 'பேட்' டைக் கையில் தாங் கிக்கொண்டு கம்பீரமாக நடந்து வந்தார். ஜனங்கள் குதூகலம் சொல்லி முடியாது. ஜெயபாலன் வந்து 'பேட்'டைப் பிடித்து நின்றதும், ஆட்டம் மீண்டும் ஜோராக இருந்தது. ஆஸ்திரேலிய கோஷ்டியார் இவரை 'அவுட்' செய்துவிட முஸ்தீப்பு செய்யலாயினர். கோபாலன் 3 விக்கெட் களுக்கு 52 ரன்கள்தான் எடுத்தார். அதற் குள் ஆஸ்திரேலிய போலர் அவரை 'அவுட்' செய்து விட்டார்.

அதற்குப் பிறகு ஜனார்த்தனம் என் பவர் வந்திருந்தார். அவரும் சிறிது நேரமே யாடினார். நாலைந்து 'ரன்'க ளெடுப்பதற்குள் 'அவுட்'டாகி விட்டார்.

இவருக்குப் பின்னர், மற்றொரு வாலிபன் கையில் 'பேட்'டுடன் ஆட்ட மைதானத்துக்குக் கம்பீரமாக நடந்து வந் தான். இதென்ன! இவ்வளவு பெரிய முழக்கம்! ஜனங்களின் ஆரவாரமும் கா கோஷமும் வானமுகட்டை யூடுருவிச் சென்று தவிடு பொடியாக்கும்போ லிருக் கிறதே! இவ்வாலிபன் வருகைக்கா இவ் வளவு ஆர்ப்பாட்டம்? இவன் என்ன அவ்வளவு சிறந்த ஆட்டக்காரனா? அது ஏன் கார்த்தியாயினி அவ்வளவு ஆர்வத் தோடும் துடி துடிப்போடும் அவ்வாலிப னைப் பார்க்கிறாள்! இவ் வாலிபன் யார்? —ஏன் சந்தேகப் படுகிறீர்கள்? கம் சிவசைலம் தான். இவன் கிரிக் கெட் பந்தாட்டத்தில் நிபுணன் என்பது இதுவரை தெரியாதே என்கிறீர்கள். ஆமாம். சமயம் வரும்போது தானே தெரியும்.

அவன் தூத்துக்குடி வாசியா யிருந் தாலும் உயர்தர படிப்பைச் சென்னையி லேயே முடித்தானாகையால், அதாவது கிறிஸ்தவ கலாசாலையில் படித்து வந்தவ

னுகையால், கிரிக்கெட் முதலிய பந்தாட்டங்களில் பழகி நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான். அத்துடன் பெரிய பெரிய ஜதைகளோடு சேர்ந்து பல 'டோர்னமெண்டு'களிலும் விளையாடித் தன் திறமையைப் பல சந்தர்ப்பங்களிலும் காட்டி வந்தமையால், 'கிரிக்கெட்'டிலும், 'ஹாக்கி'யிலும் முதல் தரமான ஆட்டக்காரன் எனப் பலராலும் மதிக்கப்பட்டு வந்தான். சாதாரணமாக, அவன் ஒரு 'டீமோடு' சேர்ந்து ஆடுகிறான் எனக் கேள்விப்பட்டால், ஜனங்கள் அவனது ஆட்டத் திறமையைப் பார்க்க ஏராளமாகக் கூடி விடுவார்கள்.

இத்தகைய நிபுணத்துவமும், புகழும் சிவசைலத்திற்கு இருந்ததனால் தான் 'சென்னை கிரிக்கெட் கிளப்'பார் அவன் உத்தியோகம் பார்த்து வரும் திருவனந்தபுரத்துக்குத் தந்தி மூலமாகச் செய்தியும், பணமும் அனுப்பி வரவழைத்திருக்கிறார்கள். எனவே, அவன் இங்கு திடீரென எப்படி வந்தான் என ஆச்சரியப் படுவதற்கு இடமில்லை.

தேவகியின் விவாகத்தை முன்னிட்டு சென்னைக்கு வந்திருந்த சிவசைலம் அது சம்பந்தமான காரியங்களெல்லாம் முடிந்ததும், ஸர். பரமேஸ்வரன் பிள்ளையுடனேயே திருவனந்தபுரத்துக்குச் சென்று விட்டான். எதற்காக வந்தானோ அந்த காரியம் முடிந்த பிறகும் அவன் சென்னையில் தங்கியிருந்தால் அது வீண் சந்தேகத்துக்கு இடமாகவன்றோ முடியும்? இது அவனுக்குத் தெரியும். மேலும், அவன் கார்த்தியாயினியின் அந்தரங்கக் கருத்து இன்னதென்பதையும், அவள் தன்மீது அளவுகடந்த காதல் கொண்டிருக்கிறாள் என்பதையும், சந்தர்ப்பம் இடங் கொடாதிருப்பதை யொட்டியே அவள் தன் காதலை வெளிப்படையாகக் காட்டாது இருந்து வருகிறாள் என்பதையும் அவன் பல வகையிலும் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆகையால், தான் அவளது காதலை எப்படியும் ஒரு நாளாயினும் பெறுவது நிச்சயம் எனத் தீர்மானித்து மனந் தேறிச் சென்றான். இருந்தாலும், திருவனந்தபுரத்துக்குப் போன பின்னர், அவன் கார்த்தியாயினியைக் காண முடியாதிருப்பதனால் உண்டாகும் மனக் கவலையையும், துன்பத்தையும் முன்னைக் காட்டிலும் அதிகமாக உணர்ந்தான். முன்னர், அவன் கார்த்தியாயினியைக் கண்டு காதல் கொண்டிருந்தாலும் அந்நியனாகவே இருந்து வந்தான். இப்போதோ மிகவும் அந்நியோந்நியமாய் விட்டானல்லவா! முன் ஒரு நிமிடம் பார்த்தான்; ஒரு சில மணி நேரந்தான் தூர நின்று பேசிப் பழகினான். தேவகியின் விவாகத்தின் போதே சுமார் ஒரு மாதத்துக்கு மேல் இரவு பகல் என்றில்லாது உடனிருந்து அவளழகைக் கண்களால் பருகி, அவளது இனிய மொழியைச் செவியாரக் கேட்டு மெய் தொட்டு நெருங்கிப் பழகினானல்லவா! ஆகவே முன்னைக் காட்டிலும், பிரிவாற்றாமையின் கொடுமை அவனுக்கு அதிகமாகத் தோன்றுவது இயற்கையேயன்றோ!

இவ்விதம் வருந்திக் கொண்டிருந்த சிவசைலத்துக்குச் 'சென்னை கிரிக்கெட் கிளப்' பாரது அழைப்பு பெருமகிழ்ச்சியை யளித்ததென்றால், அதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஏனென்றால், இதன் காரணமாகவாவது அவன் சென்னையில் மீண்டும் கார்த்தியாயினியைக் கண்டு மகிழ்தற்குச் சந்தர்ப்ப மேற்படுகிறதல்லவா! அத்துடன் அவனுக்குக் 'கிரிக்கெட் பந்தாட்ட'த்தில் தனக்குள்ள திறமையைக் காட்டுவதற்கு இதை விடச் சிறந்த வாய்ப்பு எங்கிருந்து கிடைக்கப் போகிறது. அதிலும், உலகிலேயே மிகப் பிரசித்தி பெற்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியோடு சரிசமானமாக இருந்து ஆடுவதென்றால், அது சாதாரணமாக எல்லாருக்கும் வாய்க்கக் கூடியதா!

இவ்வளவு எண்ணங்களுடனே சிவசைலம், ஆபீஸுக்கு லீவு எழுதிப் போட்டு விட்டு சென்னைக்கு உடனே புறப்பட்டு விட்டான். இவ் விஷயத்தி

லெல்லாம் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை இவனுக்கு விசேஷ சலுகை காட்டி வந்தார். ஏனென்றால், தன் சாதியைச் சேர்ந்த ஒருவன் உத்தியோகத்திலும், மற்ற விஷயங்களிலும் முன்னேற்றமடையட்டும் என்ற நல்லெண்ணமே அதற்கு முக்கிய காரணமாகும்.

சென்னைக்கு வந்த சிவசைலம், திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளையின் பங்களாவில் தான் தங்கினான். அவன் சென்னை வந்த காரணத்தைக் கேட்ட பிள்ளையவர்கள் மிக மகிழ்ந்து அவனுக்கு ஊக்க மூட்டினார். அவரைக் காட்டிலும் கார்த்தியாயினி அதிகமாகக் குதூகலித்தாள் எனக் கூறினால் மிகையாகும். பொதுவாக, பெரிய பதவியிலுள்ளவர்களும், செல்வந்தர்களும் கேளிக்கைகளுக்கும், களியாட்டங்களுக்கும் செல்வது வழக்கமாயிருந்தாலும், கார்த்தியாயினி இப் பந்தயத்துக்கு வந்தது முக்கியமாகச் சிவசைலத்தை முன்னிட்டே எனச் சொல்ல வேண்டியதில்லை.

சிவசைலம் பந்தய மைதானத்துக்கு வந்து 'பேட்'டைப் பிடித்து நின்றதும், ஜனங்களிடையே மிகுந்த பரபரப் பேற்பட்டது. கார்த்தியாயினி ஆவலோடு துடி துடித்துக் கொண்டிருந்தாள். தன் காதலன் இவ் வாட்டத்தில் நல்ல புகழ் பெற வேண்டுமென்றும், அவன் சேர்ந்திருக்கும் கோஷ்டிக்கே வெற்றி கிடைக்க வேண்டுமென்றும் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்தாள். சிவசைலம் முதலிலேயே தன் ஆட்டத் திறமையைக் காட்டி ஆஸ்திரேலிய கோஷ்டியாரைப் பிரமிக்கச் செய்தான். அவன் 'போல'ரால் எறியப்படும் பந்தை மிக இலாவகமாகத் தன் 'பேட்'டினால் தடுத்து அடித்து விட்டு 'ரன்'களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தான். அரை மணி நேரத்துக்குள் 5 விக்கெட்களுக்கு 350 ரன்கள் எடுத்தானென்றால், அவனது ஆட்டத் திறமையை என்னென்று புகழ்வது! அவன் பந்தை வெகு தூரத்துக்கு அடித்தும் எதிரிகளை ஏமாற்றி விட்டு ஓடும்போது, "Well done, Sivasailam!—Hurry up!" என்று ஜனங்கள் கூவினர். இவ்வித சமயங்களிலெல்லாம் கார்த்தியாயினி தன் பக்கத்தில் கணவன் அமர்ந்திருப்பதையும் மறந்து அளவுகடந்த ஆனந்தத்தோடு கரகோஷஞ் செய்வதும், எழுந்து எழுந்து கூத்தாடுவதுமாக இருந்தாள். கார்த்தியாயினியின் இவ் வார்ப்பாட்டம் திவான்பகதூர் காந்திமதி நாதம் பிள்ளையின் முழுக் கவனத்தையும் ஒருங்கே ஈர்த்து விட்டது. அதற்கப்புறமே அவர் சிவசைலத்தின் ஆட்டத்தையும், கார்த்தியாயினியின் மெய்ப் பாட்டையும் மாறி மாறிக் கவனிக்கலானார். இச் சமயம் அவருக்குத் தேவகியின் விவாக தினத்தன்று இந்திராணி கூறிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. இப்போதும், இந்திராணி, கார்த்தியாயைப் பற்றி யிடித்துக் கூறுவதாக மனக்கண் முன் நாடக மாடியது. இவ் விஷயம் இப்போதே அவர் மனதில் சுருக்கென்று தைத்தது. இந்திராணி கூறியது போல் தன் மனைவிக்கும் சிவசைலத்துக்குந் தொடர்பிருக்கலாமோ என்றும் யோசிக்கலானார்.

சிவசைலம் வெகு தூரம் ஊடாடி ஆடிக் கொண்டிருந்தான். ஆஸ்திரேலிய கோஷ்டியார் இன்றைய ஆட்டத்தில் தாங்கள் தோல்வி யுறுவோமோ எனவுந் திகில் கொள்ளலாயினர். எனினும், கடைசி முறையாக ஒரு கை பார்த்து விடுவதென்று தீர்மானித்து அவர்கள் மிக மும்முரமாக ஆடலாயினர். இந் தடவை 'போலர்' (இத்தாலியர் எதியோபியர் மீது வெடிகுண்டு வீசியது போல்) பந்தைக் 'கோலை' (Goal) நோக்கி அடித்தான். சிவசைலமும் வெகு வேகமாகச் சுழன்று வரும் பந்தைத் தடுத்து அடிக்க ஆயத்தமாகக் குனிந்து 'பேட்'டைத் தரையில் தட்டிக் கொண்டிருந்தான். கடைசியாக, மிகவும் நெருங்கிவிட்ட அப்பந்தை இலாவகமாகத் தட்டிவிட எண்ணிப் பதுங்கிய சிவசைலம் 'பேட்'டை மேலே ஓங்குகையில் துரதிர்ஷ்டவசமாக, அப்பந்து மேலேவந்து அவனது தலையில் மோதிவிட்டது. அப்பந்து வந்த வேகத்

தில் அவன் தலையில் எவ்வாறு தாக்கி யிருக்கு மென்பதை விவரித்துக் கூற வேண்டியதில்லை. சிவசைலம் எதிர் பாராது பட்ட கல்போன்ற உறுதியாக வுடைய அம்மரப்பந்தின் அடியைத் தாங்க மாட்டாது உடனே தலை கிறுகிறுத்து மயங்கித் தரையில் விழுந்தான். அவன் நெற்றிமீதிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. இதே சமயத்தில், பிரமுகர்கள் வரிசையிலமர்ந்திருந்த சீமாட்டி யொருத்தி 'ஆ'வென்றலறி மூர்ச்சையாகி விழுந்தாள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், செல்வச் சீமாட்டிகளும் அம் மங்கையைச் சூழ்ந்து கொண்டனர். மூர்ச்சையாகி விழுந்த அப் பெண்மணி யார்? வேறு யாராக இருக்க முடியும்? நமது கதாநாயகி சீமாட்டி கார்த்தியாயினிதான். சிவசைலம் பந்தடி பட்டு விழுந்ததைக் கண்டதும் இவளும் மனம் பதறி மூர்ச்சித்து விழுந்தாள்.

இதைக்கண்டு திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளை திடுக்கிட்டுவிட்டார். அவருக்கு ஒருவிநாடி ஒன்றுமே தோன்ற வில்லை. மற்றவர்கள் வந்து கார்த்தியாயினியைத் தூக்கி ஆஸ்வாசப் படுத்த முயன்ற பிறகே, இவரும் அவளை மூர்ச்சை தெளிவிக்கும் முயற்சியில் ஈடுபடலானார். முகத்தில் தண்ணீர் தெளித்து சைத்தியோபசாரஞ் செய்த பிறகு, சில விநாடிகளுக்கெல்லாம் கார்த்தியாயினி மூர்ச்சை தெளிந்தெழுந்தாள். தன்னைப் பெண்மணிகளும், ஆடவர்களும் சூழ்ந்து கொண்டு ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், கார்த்தியாயினி வெட்கத்தால் தலை குனிந்தாள். தான் உணர்ச்சிவசப்பட்டு அதை வெளிப்படுத்தி விட்டதற்காக அவள் தன்னையே மனதுக்குள் நொந்து கொண்டாள். சில நிமிடங்களில் அவள் தன்னைச் சமாளித்துக்

"சும்மா இல்லை. ஜவுளி வாங்குவதற்கு! ஒரு கடைக்கு பத்து கடையைப் பார்த்துத்தான் வாங்கவேண்டி யிருக்கு!"

"ஆமாம் கடன் கொடுக்கிற கடையிலேதானே வாங்கவேண்டும்!"

கொண்டு, "எனக்கு ஏற்கனவே மயக்கமாயிருந்தது. திடீரென இச்சம்பவம் ஏற்படவே, மன அதிர்ச்சியுற்று தலை சுற்றி விழுந்தேன். அவ்வளவுதான். வேறொன்றுமில்லை." என்று மற்றவர்களுக்குச் சமாதானங் கூறினாள். அங்கிருந்தவர்கள் அதனால் திருப்தியடைந்தார்களாயினும், பிள்ளையவர்களுக்கு மட்டும் அது சரியான காரணமாகத் தோன்றவில்லை.

இச் சமயத்தில் ஒருவர் அங்கு தோன்றி, "சிவசைலம் மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டார் சார்! பந்து நெற்றியில் தாக்கிய அதிர்ச்சியில் விழுந்தாரேயொழிய, காயம் பலமாக ஒன்றும் படவில்லை. நெற்றி முனையில்தான் சிறிது இரத்தம் கசிகிறது! அதற்கு மருந்து வைத்து கட்டப்பட்டிருக்கிறது. அவர் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் மீண்டும் ஆட்டம்ஆடத் தொடங்கிவிட்டார் சார்! இந்த வாலிபாது துணிச்சலை என்னென்று கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை சார்!" என்று சிவசைலத்தைப் பாராட்டிப் பேசினார். இத்தகவலைக் கேட்டதும் கார்த்தியாயினியின் முகம் மலர்ந்தது.

சிவசைலம் அடிபட்ட பிறகும் நன்ருகவே ஆடினான். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் 'அவுட்'டாகி விட்டான். அதற்குப் பிறகு ஆஸ்திரேலியர் ஆட்டமுறை வந்தது. இராமசாமி 'போல'ராக வந்து இவர்களை அழவைத்தான். அதனால் அவர்கள் சில 'ரன்'களையெடுத்தனர். முடிவில் அன்றைய ஆட்டத்தில் 'சென்னை கிரிக்கெட் கிளப்' கோஷ்டிக்கே வெற்றியேற்பட்டது. அவ்வெற்றிக்கு மூல காரணமாயிருந்த சிவசைலம் யாவராலும் பாராட்டப்பட்டான். பெருந்தன்மையும், நற்குணமும் வாய்ந்த காந்திமதி நாதம் பிள்ளையும், அவனைப் பாராட்டினார். எனவே, கார்த்தியாயினியும் அவனைப் பாராட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள் எனத் தனியாகக் கூற வேண்டியதில்லை. கடைசியாக, சிவசைலம், காந்திமதி நாதம்பிள்ளை தம்பதிகளோடு காரில் சென்ருன். பிள்ளையவர்கள் மனதில் ஆட்டமைதானத்தில் நடந்த சம்பவம் வேரூன்றிப் பதிந்துவிட்டது. 'சிவசைலத்தினிடம் கார்த்தியாயினிக்கு எவ்வளவு தூரம் பற்று இல்லாது, அவள் அவன் அடிபட்டு விழுந்ததைக் கண்டதும் மூர்ச்சித்து விழுவாள்? ஆகவே இவ்விருவரிடையே ஏதோ நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விட்டதென்பது நிச்சயம்' என்று அவர் சிந்தனை செய்தவண்ணஞ் சென்ருர்.

* * *

அன்று இரவு எட்டுமணியிருக்கும். திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை

ரூபாய் 5-க்கு 200 விடைகள் வீதம் அனுப்பும் நபருக்கு நேரில் சீல் விடை திறந்து விலாசத்துடன் பிரசுரம் செய்யப்படும். சீல் விடை சினிமா நேசன் ஆபீஸில் டிபாசிட் செய்துள்ளோம்.

முதற் பரிசு ரூ 2500. ரொக்கப் பரிசு ரூ. 4000. 2-வது பரிசு ரூ. 1300.

முதலில் வரும் இரண்டு சரியான விடைகளுக்கு ரு. 75, 25.

2-எழுத்து எடு கொடு போட்டி.

நெ.	குறிப்புகள்.	வார்த்தைகள்.	எழுத்து
1	பிரமன்	முகன்	2 கொடு
2	சிறுமை	அசிசொற்பம்	2 எடு
3	இராவணன் தங்கை	ஞர்ப்ப	2 கொடு
4	உலகம்	தாஞாதலம்	2 எடு
5	ஆற்றல்	த்தல்	2 கொடு

எண்ணிக்கையில் அதிக விடை அனுப்பும் 2-நபர்களுக்கு ரு. 60, 40. முடிவு தேதி 18-7-36.

கட்டத்தில் கண்ட 5-வரிகளும் சேர்ந்தே ஒரு கூபனுக பிரவேசக் கட்டணம் அணு 4. M.O. ரசீதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரில் அனுப்பலாம். முடிவு தெரிய விரும்புவோர் ½ அணு ஸ்டாம்புடன் அனுப்புக. இப்போட்டிக்காக அனுப்பும் பணம் எக்காரணத்தைக் கொண்டும் வாபீஸ் செய்யப்படமாட்டாது. மானேஜர் தீர்ப்பே முடிவானது.

S. R. சாமி, மானேஜர், R. S. பாணி அண் கோ., கீழக்கண்டித் தெரு, பீமநகர், திருச்சி. S.I.

எங்கேயோ வெளியே போய்விட்டு வந்தவர், நேராக கார்த்தியாயினி இருக்கும் அறையை நோக்கி நடந்தார். இவர் வரவை வேலையாள் மூலமாக அறிந்த கார்த்தியாயினி, தன் கணவரை எதிர்கொண்டழைக்க விரைந்து வந்தாள்.

அறையில் நுழைந்த பிள்ளையவர்கள் அங்கிருந்த சோபாவிலோ நாற்காலியிலோ எதிலும் உட்காராமல் நின்ற வண்ணமே கார்த்தியாயினியை நோக்கினர். அவளும் அவரது நோக்கத்தை யறியாது அவர் முகத்தைப் பார்த்து நின்றாள்.

பிள்ளையவர்களே முதலில் பேசலானர்:—"கார்த்திகா! நான் இப்போது எதற்காக உன்னிடம் வந்திருக்கிறே னென்பது உனக்குத் தெரியுமா?"

"தாங்கள் கூறினால்தானே தெரியும்," எனக் கார்த்தியாயினி தனது இயற்கையான உற்சாகத்தோடேயே பேசினாள்.

"கார்த்திகா! இப்போது உன்னை எச்சரிக்க வேண்டியது அவசியமென்று உணர்கிறேன்"

"என்னை எச்சரிப்பதா! எதற்காக!"

"நீ தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறாய். சிவசைலத்தி னிடம் நீ காட்டி வரும் மனோபாவம் மற்றவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது."

"தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை." எனச் சிறிது திகைப்புடனேயே கார்த்தியாயினி கூறினாள்.

(தொடரும்.)

15-7-36-தேதிக்குள் வந்து சேரும் எல்லா விடைகளுக்கும் 4 அணு விலையுள்ள "குடும்ப வைத்திய பொக்கிஷம்" என்னும் புத்தகம் ஒவ்வொன்று அனுப்பப்படும்.

ரூ. 6000. ஆறுயிரம் ரூபாய்கள் 6000 ரூ.

1-ம் பரிசு ரூ. 4000. போட்டிப் பரிசு. 2-ம் பரிசு ரூ. 2000.

போட்டி எண் 3/35.

1. பாலப் பருவம்	ம — —
2. ஆடு	— — ம்
3. ஓர் சாதியார்	— — — ர்
4. எச்சில்	சே — ம்
5. மலை	— —
6. காளி	— — ரி
7. யானை	க — —

பக்கத்து கட்டத்தில்—இம்மாதிரி கோடிட்டிருக்கும் இடங்களில் விடுபட்டிருக்கும் எழுத்துக்களைப் பூர்த்திசெய்து ஒரு விடைக்குப் பிரவேசக் கட்டணம் 8-அணுவுடன் 25-7-36உக்குள் வந்துசேரும்படி அனுப்பவேண்டும். (7வார்த்தைகளும் சேர்ந்ததே ஒரு விடை) ரூ. 2-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். காரியாலயத்தில் சீல்செய்து வைத்திருக்கும் விடைக்குச் சரியாய் அனுப்புவோருக்கு முதல் பரிசம், குறைந்த தவறுள்ள விடைகளுக்கு முறையே மற்ற பரிசுகளும் வழங்கப்படும். சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. ரூ. 2-க்கு விடை அனுப்புவோர் கண்டுபிடித்த வார்த்தைகளை வரிசைக் கிரமமாய் எழுதி அனுப்பலாம். தனித்தனி கூபன் அவசியமில்லை. அனுப்பும் விடைகளுக்கு சரியான நகல் வைத்துக்கொள்ளவும். சந்தேகக் கடிதமெழுதவோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கெல்லாம் இராமசாமியும்-கதரும் என்னும் புத்தகம் ஒவ்வொன்று இனமாய் அனுப்பப்படும். எமது போட்டியில் கோர்வையாய் ஒவ்வொரு மாதமும் கலந்துகொள்ளும் அநேக மெம்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கம்ளீட் கட்டணம் 2 ரூபாயாக செய்துள்ளோம். பரிசு முடிவும், சரியான விடையும் 30-7-36ந் தேதி எல்லோருக்கும் துண்டு பிரசுர மூலம் அறிவிக்கப்படும்.

மானேஜர்:—எஸ். நடேசன், தமிழ் வார்த்தை நிலையம், பெரம்பூர் பேரக்ஸ், சென்னை.

230-வருஷங்களுக்கு முன்பு வெற்றிக் கொடியுடன் பஞ்ச கல்யாணியை நடத்திச் சென்ற வீரன் யார் ?

செஞ்சித் தலைவன்

ராஜா தேசிங்கு

செஞ்சி, கோலாப்பூர், பான்ஹாலாக் கோட்டை, பம்பாய் பிலிம் சிடி முதலிய இடங்களில் தத்ரூபமாய் படம் பிடிக்கப்பட்டது.

இத்துடன் உலகப் பிரசித்திபெற்ற
ஸ்ரீ ருக்மணி தேவியின் (அடையாறு)
பரத நாட்டியமும்

தியாஸபிகல் சங்கத் தலைவர்
டாக்டர் ஜி. எஸ். அருண்டேலின் பிரசங்கமும்.

சென்னை கிரௌன் டாக்கீஸில்

ராஜேஸ்வரி டாக்கீஸ், ஈரோடு.

தென்னாடெங்கும் பார்த்து மகிழ்ந்த திருப்பூர் யூனிவர்ஸல் டாக்கீஸாரின் அரிய படக்காக்ஷி!

அலிபாதுஷா

சென்னை ராயபுரம் பிரைட்டன் டாக்கீஸில் முதன் முதலில் வருகிறது.

என்றும் காணாத காக்ஷி !	இனிமையான சங்கீதம்!!
ஸ்ரீமதி பங்கஜம்மாள்	ரங்கநாதன், வரதராஜன்
ஸ்ரீ C. S செல்வரத்தினம் பிள்ளை	ஐ. கே. சாரி

முதலியவர்கள் நடித்தது

என்று வருமென எதிர்பாருங்கள்.

கட்டிடமும் நிர்மாண வேலையும்

:(o):

(ஆர். ராஜாமணி.)

ஸ்ரீமான் சந்திரசேகரன் பி. ஏ. ஆழ்ந்த யோசனையில் மூழ்கி யிருந்தான். அவன் முன்னால் வீற்றிருந்த அவனது நண்பன் கோபாலனும் மேஜையின்மீது முகவாய்க்கட்டையை வைத்துக்கொண்டு தலையைச் சொறிந்து கொண்டிருந்தான். அவர்கள் முன்பாக, ப்ளான்கள் வரையப்பட்ட சில கடுதாசுகளும், பென்சில் ரப்பர் அடிக்குச்சி வகையறாக்களும் வைக்கப்பட்டிருந்தன.

இந்த இருவரும் சிறிது நேரத்தில் ஒரு பெரிய மாளிகையை நிர்மாணித்தனர். மூன்றடுக்குள்ள பெரிய மெத்தை வீடுகளும் பெரிய ஹால்களும், அடுக்குள்களும், சமையலறைகளும் கட்டப்பட்டன. திடீரென்று அவைகளெல்லாம் அழிக்கப்பட்டன. சிறிது நேரத்தில் மற்றொரு மாளிகையும் கட்டப்பட்டது. அதுவும் அழிக்கப்பட்டது.

இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்களல்லவா? ஆம்! இந்த மாளிகைகளெல்லாம் பேபரளவில்தான் நிர்மாணிக்கப்பட்டன. அவைகளின் ப்ளான்கள் பல தடவை எழுதப்பட்டு, பிறகு சுக்கல் நூறாக கிழித்தெறியப்பட்டன.

இதற்கிடையில் பத்மாவும் அங்கு வந்து சேர்ந்தாள். அங்குள்ள நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, "என்ன இது! சிறு குழந்தைபோல் காகிதங்களைக் கிழித்துக் கொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்டாள்.

"நாங்கள் இருவரும் வீடுகட்ட பிளான் போட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று கோபாலனிடமிருந்து பதில் வந்தது.

"நன்றா யிருக்கிறது! வயற்றுக்கே தாளம் போடுகிறது; இந்த அளவில் வீடு வேறயா லட்சணம்?" என்று வாயை ஒரு மடிப்பு மடித்து உதட்டைப் பிதுக்கினாள் பத்மா.

உடனே சந்திரசேகரன் தட்டிவிட்டவன்போல் எழுந்தான். சென்ற மாதம், தான் 'ரிட்ரெச்மெண்டில்' — வேலையிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டது அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இதற்கிடையில் சிறிது சமாளித்துக்கொண்டு "இல்லை பத்மா! நமக்கு பணம் கிடைத்தவுடன் எந்தவிதமாக வீடு கட்டலாமென்று யோசிக்கிறேன்" என்று மழுப்பினான்.

"நன்றாயிருக்கிறது! பணம் கிடைத்த பிறகல்லவோ அதைப்பற்றி யோசிக்க வேண்டும்" என்றாள் பத்மா.

"ஆம்! பணம் கிடைத்தவுடன், அதை ஒரு பணக்கார கண்ட்ராக்டரிடம் கண்மூடித் தனமாகத் தள்ளாமல், நாமே மேற்பார்த்துக் கொள்வதற்காக, முன்

கட்டியே ஏற்பாடு செய்கிறேன்"-என்று கூறினான் சந்திரசேகரன்.

* * *

பணம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, சந்திரசேகரன் பெயரளவில் மாளிகையை நிர்மாணித்தபோதிலும் அவன் முடிவு கட்டிய தீர்மானத்தில் ஆழ்ந்த உண்மை இருக்கிறது!

* * *

1914-ல் மகாயுத்தம் ஏற்பட்டதல்லவா? இந்தியாவில் அதற்கு முன்பாக தொழிலாளர் சங்கங்கள் கிடையா. யுத்தகாலத்தில் ஆலைப்பண்டங்களின் விலைவாசிகள் உயர்ந்தன. ஆனால் அதற்கேற்றவாறு தொழிலாளரின் சம்பள விகிதாசாரங்கள் உயர்த்தப்படவில்லை. அதனால் ஜனங்களிடையே 'வாங்கும் சக்தி' குறைந்தது. இதன் மூலம் பாதிக்கப்பட்டது பெரும்பாலும் தொழிலாளர்கள்தான்.

சென்னையில் அனிபெஸண்டு அம்மையின் 'ஹோம்ரூல்' கிளர்ச்சியில் ஈடுபட்ட பி. பி. வாடியா என்பவர், 1918-ல் பக்கிங்ஹாம் கர்னடிக் மெசவாலைத் தொழிலாளர்களை ஒரு சங்கமாகச் சேர்த்தார். இதுதான் இந்தியாவில் ஏற்பட்ட முதல் தொழிற்சங்கம். இது முதல் தங்கள் உரிமையைப் பாதுகாக்க தொழிலாளர்கள் போராடி வந்திருக்கின்றனர். இதனால் பெரிதும் திகிலடைந்த முதலாளிகள் தங்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு, இக் கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிட பெரும் முயற்சி செய்தனர்.

கி. பி. 1918, தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமானதோர் வருஷம் என்று சொல்லலாம். அதே வருஷத்தில்தான் 'சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம்' (International Labour Organisation) நிறுவப்பட்டு, இந்தியாவும் தன் பிரதிநிதியை அச் சங்கத்திற்கு அனுப்பியது. வார்சேல்ஸ் உடன்படிக்கையில் தொழிலாளருக்கு உபகாரச் சம்பளம், தொழிலாளரின் குழந்தைகள், மாதர் வயோதிகர் முதலியோர்களுக்கு, பாதுகாப்பு கல்வி வசதி முதலியவை அளிக்கப்பட்டன. தொழிலாளிகளுக்கு மேற்படி உரிமைகளை பூரணமாகக் கொடுப்பதாக, இந்தியாவும் அவ்வுடன்படிக்கையில் கைச்சாத்து இட்டிருக்கிறது.

ஆனால் இது எவ்வளவு தூரம் காரியாம்சத்தில் நடைபெற்றது என்பது மற்றொரு பிரச்னை. 1921-ல் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் இந்தியாவில் வெகு வேகமாகப் பரவி வந்தது. மேலும் ரஷ்யாவில், முடியரசையும், முதலாளித்வத்தையும் தொழிலாளர்கள் ஒரேயடியாகக் கவிழ்த்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்றியிருந்தனர். இதனால் முதலாளி சர்க்கார்கள், பெரும் பீதியடைந்து பூரண உரிமையை அளிக்கத் தயங்கினின்றனர்.

1928-ல் நாடெங்கும் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக, இந்தியத் தொழிலாளரின் நிலைமையை ஆராய்ச்சி செய்து அறிவிக்க, இங்கிலாந்தில் அப்போது ஆட்சி புரிந்த தொழிற்கட்சி சர்க்கார், ஓர் ராயல் கமிஷனை நியமித்தது. அக் கமிஷனும் நாடெங்கும் சுற்றி, நாட்டின் நிலைமையை ஆராய்ந்து, சில முக்கியமான சிபார்சுகளைச் செய்தது. ஆனால் சமீபகாலம் வரை அச் சிபார்சுகளை சர்க்கார் கவனிக்கவில்லை. காரணம் என்னவென்றால் (1) தொழிலாளர் இயக்கம் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினாலும், அடக்கு முறையினாலும் பலவீனப்பட்டுப் போயிற்று.

(2) இங்கிலாந்தில் தொழிற்கக்ஷி சர்க்கார் கவிழ்ந்து, மற்றொரு சர்க்கார் ஏற்பட்டது.

இதுவரையில் இந்தியத் தொழிலாளர் எவ்வளவு தூரம் போராடியும், பிறநாடுகளில் ஏனையோர் அநுபவிக்கும் சுதந்தரம் அவர்களுக்குக் கிட்டவில்லை. சர்க்காரும் அவர்களை ஆதரிக்கவில்லை.

புதிய அரசியலின் கீழ் மாகாண சர்க்கார்களே, தொழிலாளர் பிரச்னைகளெல்லாம் கவனிப்பார்கள். ஆகையால் சட்டசபைகளில் மற்ற முற்போக்கு

கட்சிகளின் பூரண ஆதரவு தொழிலாளருக்கு கிடைக்கவேண்டியது அத்யாவசியமானது.

இதுவரை காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் தொழிலாளர்பால் மிகுந்த அநுதாபம் காட்டி வந்திருக்கிறது. புது அரசியலின் கீழ் உண்மையான தொழிலாளர் அநுதாபிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால் காங்கிரசின் ஆதரவைத் தேடுவது அவசியமாகிறது. காங்கிரஸ் அவர்களோடு ஒத்துழைக்க ஒரு தனி போர்டும், வேலைத்திட்டமும் தயாரித்திருக்கிறது. இனி காங்கிரஸ் மேற்படி திட்டத்தை கூடியவரை நிறைவேற்றி வைக்கப் பாடுபடும்.

* * *

மேற்கண்ட சம்பவங்களில் பெரும்பாலும், முதலாளி–தொழிலாளர் இருவருக்கும் ஏற்பட்டுள்ள சச்சரவுகளைக் கவனித்தால் கீழ்க்கண்ட விஷயம் புலனாகும்.

(1) தற்போது உலகம் பூராவும் பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் முதலாளிகள் தங்கள் லாபத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றனர். அவ்வாறு லாபமடைய, தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்து, விற்பனை விலையை அதிகப்படுத்துகிறார்கள். ஆனால் தற்போதுள்ள பொருளாதார நிலை இதற்கு இடம் கொடுக்கவில்லை. அமோகமாக இருக்கும் வியாபாரப் போட்டிதான் இதற்குக் காரணம்.

(2) மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டுமானால், கூடுமான வரை அவர்களுக்கு அதிகச் சம்பளங்களும், குறைந்த விலையில் பொருள்களும் கிடைக்கவேண்டும். இதற்கு வேறு மாற்று கிடையாது. ஆனால் இதன்மூலம் லாபம் குறையும். பணக்கார ஆதிக்கம் நாளுக்குநாள் பெருக முடியாது. ஆகையால் என்றென்றும் லாபத்தை பெருக்கி, தங்கள் இனத்தை பெருக்க விரும்பும் முதலாளிகள் இதை விரும்புவார்களா! எக்காலத்தும் மாட்டார்கள். இந்த இரண்டு பிரச்னைகளும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவை. ஆகையால் இவையிரண்டும் ஒரே காலத்தில் எவ்வாறு நடைபெற முடியும்? உலகப் பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமும் இதேதான். சர்க்கார் இதைக் கவனித்து கூடியவரையில் இருசாராருக்கும் சமரஸம் உண்டுபண்ண முயற்சிக்கவேண்டும். ஆனால் சர்க்காரோ என்றும் முதலாளிகளை ஆதரிப்பதாய் இருக்கிறது. ஆகையால் மக்கள் இதுவிஷயத்தில் சர்க்காரின் ஆதரவை எதிர்பார்ப்பது பெரிய ஏமாற்றமாகும். தற்போது மக்களும் இதை உணர்ந்துவிட்டனர்.

இப்பொழுது நாட்டு மக்களின் ஒரே பிரதிநிதி காங்கிரஸ்தான்! வரப்போகும் புது அரசியலில் அது எவ்வளவு தூரம் காரிய திட்டத்தை நடத்திவைக்கும் என்பது தேர்தல்களில் அது பெரும் வெற்றியைப் பொறுத்து இருக்கிறது.

தற்பொழுது பிரான்சில் அபேதவாத சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. சென்ற சில தினங்களாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் கோரும் 40 மணி நேர வேலைத் திட்டமும் பூரணமாக அளிக்கப்பட்டது. இம்மாதிரி முறையால் உலகில் பல தேசங்கள் அரசியல் சுதந்தரங்களை அடைந்திருக்கின்றன.

காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் தமது பஞ்சாப் சுற்றுப் பிரயாணத்தின்போது இந்தியாவின் கதி மோட்சம் அபேதவாதத்தில்தான் இருக்கிறது என்று கூறினார். மேலும் 'இந்தியா அரசியலில் பூரண சுயராஜ்யம் அடைந்த பிற்பாடுதான் அது சாத்தியமாகு மென்றும், பின்னால் ஏற்படும் நிலைமை முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு போகுமுன், மக்களிடையே அபேதவாதத்தை முன் கூட்டியே பரப்பவேண்டு மென்றும்' சொல்கிறார். முதலாளிகள் தங்கள் லாபம் இதன்மூலம் பாதிக்கப்படுவதை அறிந்து 'லபோ, லபோ' என்று அடித்துக்கொள்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அபேதவாதத்தின் தன்மை எப்

படி? அதனால் எவ்வளவு லாபம் அடையலாமென்பதை, மக்கள் முன்கூட்டியே உணரவேண்டுமென்று தலைவர் சொல்வது அறிஞர் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயமாகும்.

சுதந்தா தேவி எனும் சீதை இருக்குமிடம் தெரிந்துவிட்டது. காங்கிரஸ் என்னும் ராமன் தக்க பலத்துடன் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டான். பணக்கார ஆதிக்கம் என்னும் அரக்கன் மாண்டு போவது என்னமோ நிச்சயம். அவனை அண்டிப் பிழைக்கும் அரக்கர்கள் தங்கள் சுகவாழ்வு பறிபோவதை சகிக்காமல் ராமனின் பலத்தைக் கண்டு அஞ்சி கூக்குரல் இடுவது சகஜமே. துஷ்டனான அரக்கனின் பாந்தவ்யத்தை அறுத்தெறிந்து விட்டு, தன் சுயநலத்தைக் கவனியாது, ராமனை அண்டின விபீஷணனும் சுகவாழ்வு எய்தினான். ஆயிரக்கணக்கான மக்களின் சுக வாழ்விற்கு பாதகமாயிருக்கும் ஒரு தனிப்பட்ட நபர்களின் சுயநலத்தை விடுவது அவ்வளவு பெரிதாக தியாகஞ் செய்தால் எவ்வளவோ நன்மை உண்டு. ஆனால் அழியப்போகும் அரக்கனுக்கு அந்த எண்ணமேது? எப்படியானாலும் நாம் சுதந்திர தேவியை அடையும் நன்னாள் நெருங்கிவிட்டது. நாம் அதை நிச்சயம் அடைந்தே தீருவோம்.

"ஏது நீ சொல்றாப்போல அவன் திருடனாயிருந்தால் இந்த இடத்தில் காலை வைக்கவிடக்கூடாது!"

'இங்கே நான் பயப்படுவதில்லாம் அவன் எங்கேனும் கையை வைத்து விடப்போகிறானே என்றுதான்!"



'எங்கள் பாட்டி'

—:(0):—

(பியர்ஸ்.)

நான் பீச்சுக்குப் போகப் புறப்பட்ட போது என் பாட்டியும் என்னுடன் கூட வருகிறேன் என்ருள். கிராமாந்திரத்திலிருந்து வந்திருந்தவளாதலால் பீச்சைப் பார்க்க ஆவல் கொள்வது சகஜம் தானே என்று நினைத்து அவளையும் அழைத்துக் கொண்டு போனேன். பீச் ரோட்டைத் தாண்டி சமுத்திர ஜலத்தருகே அழைத்துச் சென்றேன். என் பாட்டி உடனே சமுத்திர ஜலத்தைக் கொஞ்சம் எடுத்து ஆசமனம் செய்து ஏதேதோ மந்திரங்களை முணு முணுக்கத் தொடங்கினுள். இதைக் கண்ட பக்கத்திலிருந்த செம்படவச் சிறுவர்கள் 'டேடேய், வெள்ளெ பாப்பாத்தி சந்தியானம் பண்ணுங்க பாருடோய்' என்று சொல்லி கொக்கரிக்க வாரம்பித்தனர். என் பாட்டி, அவர்கள் பக்கமாகத் திரும்பிப் பார்த்தாள். உடனே சந்தேகமான குரலில் 'ஏண்டாப்பா, நீங்கள் எல்லோரும் குடித்தனக்காரர்களா—தீண்டாதவர்களா?' என்ருள். அச் செம்படவச் சிறுவர்கள் விளையாட்டாக 'நாங்கள் பறையர்கள்' என்றனர். வந்து விட்டது கோபம் பாட்டிக்கு. 'அட ஒங்களெ வாரிண்டு போக. என் கிட்டெ வந்துட்டிங்களே. போங்கடா தூர' என்று இரண்டு கைகளா

லும் ஜலத்தை அள்ளி அள்ளி அவர்கள் மேல் இறைத்தாள். அச் சிறுவர்களைப்

பற்றி சொல்ல வேண்டுமா? பதிலுக்குப் பதில் பாட்டியின் மேல் தண்ணீரைத் தெளித்து தொப்பமாக நனைய வைத்ததுடன் மணலையும் வாரி வாரி அவள் மேலிறைத்தனர். பாட்டியும் தனக்குத் தெரிந்த வசைமொழிகளையெல்லாம் வரிசைக் கிரமமாக ஒப்பித்துக் கொட்டினாள். வெகு சிரமப்பட்டு அவளை அச் சிறுவர்களிடமிருந்து மீட்டு, வேறு பக்கமாக அழைத்துக் கொண்டு போனேன்.

அங்கு சில ஐரோப்பியர்கள் ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த ஸ்நான உடை, என் பாட்டி கண்ணுக்கு உடையாகவே தோன்றவில்லை போலிருக்கிறது! "இதென்ன ஜனங்கோ — அவிழ்த்துப் போட்டுட்டு அம்பல மாட்டாதுகோ?' என்றாள் பாட்டி. நான், 'அவர்கள் குளிக்கும் போது பனியன் போன்ற உடையைத்தான் அணிவார்கள்—அதுதான் நாகரிகம்' என்றேன். "ஒரு முழம் துணியெ இடுப்பிலே சுத்திண்டு குளிச்சு தொலெக்கப் படாதோ? ஆணான்னும் பொண்

ணான்னும் தெரியாதெ என்ன நாகரிகம் வேண்டிருக்கு?' என்றாள் பாட்டி. அப்பொழுது ஒரு ஆங்கிலேய மாது தன் குழந்தைகளுடன் உலவிக் கொண்டே அங்கு வந்தாள். அவள் தலைமயிர் வெட்டிவிடப்பட்டு குட்டையாயிருந்ததைக் கண்ட பாட்டி 'ஒனக்கு ஏண்டீ'ம மயிரே வளராமெ கட்டையா சுருட்டிண்டு சுருட்டிண்டு இருக்கு? பிரதி வெள்ளிக் கெழமெ செவ்வாக் கெழமெ எண்ணெ தேச்சு குளிச்சிண்டு வந்தையானா மயிர் கரு—கருன்னு நன்னா வளர்ந்து தொடை வரையிலும் இடிக்கும்' என்றாள். அந்த ஆங்கிலமாது திடுக்கிட்டுப் போய் 'கிழவி என்ன சொல்கிறாள்' என்று என்னை ஆங்கிலத்தில் கேட்டாள். எனக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. இருந்தாலும் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு நீங்கள் மயிரை வெட்டிக் (Bob பாப் செய்து) கொண்டிருப்பது மிகவும் அழகாக இருக்கிறதென்று சொல்கிறாள்' என்று ஒரு உடான்ஸ் விட்டேன். அவளும் தன் கட்டை மயிரைப் பெருமையுடன் தடவி விட்டுக் கொண்டே அப்பால் நகர்ந்தாள்.

பாட்டியை அழைத்துக் கொண்டு சமுத்திரக்கரை ஓரமாகவே போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது இயல்வன சதிபதிகள் கைகோத்துக் கொண்டு உலவிக் கொண்டே வந்தனர். பாட்டி அவர்களைப் பார்த்து விட்டாள். 'ஹூம். ஐயையோ—இந்தக் கண்ராவியெ கண்ணாலேயே பார்க்க முடியலேயே. ஆம்பிடியான் பொண்டாட்டி அன்னியோன்னியமா இருந்தா இப்படித்தான் பத்து பேர் நடுவிலே கையெ கோத்துண்டு கல்யாணப் பொண்ணும் பிள்ளையும் ஊர் கோலம் போரமாதிரி திரியணுமான்னு?' என்று தலையிலடித்துக் கொண்

டாள். நல்ல வேளையாக அத் தம்பதிகள் இதைக் கவனிக்க வில்லை.

இன்னும் கொஞ்ச தூரம் போனதும் வடதேச வாலிப கனவானொருவர் தன் மனைவியுடன் எதிரே வந்து கொண்டிருந்தார். அந்த ஸ்திரீ தன் தேசாசாரப்படி, மேலாக்கினால் தலைமயிரை மூடிவிட்டுக் கொண்டிருந்தாள். என் பாட்டி சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்துவிட்டு என் பக்கம் திருப்பி 'என்டாப்பா, அவள் என்ன சுமங்கலியோ—அமங்கலியோ?' என்று கேட்டாள்.

நான்: 'நல்ல சுமங்கலியைப் பார்த்து ஏன் பாட்டி அப்படி கேட்கிறாய்? அவளுடன்கூட வருகிறவர்தான் அவள் கணவன்' என்றேன்.

பாட்டி:—'இல்லே போடா. அவ ஒரு அமங்கலிதான். மூக்குலே மூக்குப்



பொட்டு இல்லே பாரு. முட்டாக்கு போட்டுண்டிருக்காளே — அதலேருந்தே தெரியலையா. ஹூம், அந்தப் பொண்ணு ஒரு அசட்டுப் பொணம் போலேருக்கு. கூழுக்கும் ஆசெ-மீசெக்கும் ஆசெங்கிற மாதிரி, மயிரையும் வளக்கணும்-முட்டாக்கும் போட்டுக் கணும்னு பார்க்கிறதாக்கும்.................................."

பாட்டியின் வாயைக் கடிந்து கொண்டே விளையாட்டு மைதான வழியாகத் திரும்பினேன். அங்கு கலாசாலை மாணவர்கள் கால் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். என்னுடன் கூடவே வந்துகொண்டிருந்த பாட்டி தட்டென்று அங்கு நின்றுவிட்டாள். 'இந்தப் பசங்க ஏன் இப்படி சண்டை போட்டுக்கிறதுகொ? அதோ பாரு. அந்த குண்டை தூக்கி அவன் தலேமேலே போட்டானே அட இதுகளெ கட்டேலெவைக்க! நம்ம சேதுகூட அதிலெ இருக்கான் போலேருக்கே—அடா சேது' என்று கூவத்துடங்கினாள். நான் உடனே அவள் வாயை அடக்கி, அவர்கள் சண்டை போடவில்லையென்றும் விளையாடுகிறார்களென்றும் தெரிவித்தேன். "என்ன விளையாட்டு வேண்டிருக்கு? வெளியாடினா இப்படித்தான் ஈயகுண்டையும் இருப்பு குண்டையும் ஒத்தன்மேலே ஒத்தன்போட்டு மண்டையெ உடைச்சிக்கணுமா என்ன? அட இதுகள் நாசமாய்ப்போக' என்று பாட்டி அடுக்க வாரம்பித்தாள். கலாசாலை மாணவர்களின் காதில் இது விழுந்தால், முன் செம்படச் சிறுவர்கள் செய்ததுபோல் இவர்களும் எங்கு ஆரம்பித்து விடுகிறார்களோ வென்று நான் பயந்து, வெகு கஷ்டப்பட்டு அவள் வாயையடக்கி வீட்டிற் கழைத்துப் போனேன்.

கலியாணப் பரீக்ஷை

—:(0):—

(ஸ்ரீமதி. செங்கம்மாள்.)

பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் பரீக்ஷையில் தேறியவர்களுக்குத்தான் வேலை கொடுக்கலாம் என்ற நியாயப்படி மாப்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே பரீக்ஷை வைத்து பரீக்ஷையில் தேறினால்தான் கலிடாணம் செய்து கொள்ள அருகர் என்னும் விதி சட்ட பூர்வமாக ஏற்படின் தற்கால பால்ய விவாகங்கள் தடைபடுவதுடன் ஜோஸ்யர்கள் வாயிலும் மண் விழுந்துவிடும். வெறுங் காகிதப் பொருத்தம் பார்த்து முடிப்பதும் பின்னர் மணமக்களுள் வாழ்க்கையில் பலவித அசம்பாவிதங்கள் ஏற்படுவதும் நாம் காணும் முக்யமானதும் உண்மையான சம்பவமும் அல்லவா? மனப் பொருத்த மல்லாத மணமும் மணம் வீசுமா? நாகரிக முதிர்ந்த இக்காலத்திலும் இக்குறைகள் காணப்படுவது மிகவுங் கேவலம்.

கேள்விப் பேப்பர் எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டுமென்பதற்கு உதாரணமாகசில கேள்விகளைக் கீழே தருகிறேன். அக்கேள்விகளுக்கு விடையளிப்பதினின்றே அன்னாருடைய திறமையும் மனப்போக்கும் எத்தகையது என்பதும் கலியாணஞ் செய்துகொள்ள அருகரா இல்லையா என்பதும் தெள்ளென விளங்கும். எழுதப்படிக்கத் தெரியாத ஆண், பெண்களை அவர்களுக்குத் தக்கபடி கேள்விகள் கேட்டு சொல்லச் செய்து பரீக்ஷை செய்யப்படவேண்டும். பரீக்ஷைக்கு ஆஜராகு முன் புகைப்படமும் டாக்டர் சர்டிபிகேட்டும் ஆஜர் செய்யவேண்டும். பின்னர் வது அல்லது வரனை தேடுங்கால் மேற்கூறிய பரீக்ஷையில் தேறிய சர்டிபிகேட்டும் அனுப்புதல்வேண்டும். இதனால் பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார்தான் பெற்ற இம்மூன்று சர்டிபிகேட்டுகளையும் அனுப்பவும் பெண் வீட்டாரும் அவ்வாறே தன்னுடைய சர்டிபிகேட்டுகளை அனுப்பவும் கலியாணம் நிச்சயிக்க சாத்யமாவதுடன் அனாவசியமான ஜோஸ்யர் புரோகிதர் போக்கு வரத்து முதலானவைகளும் வரதக்ஷிணையும் மிச்சமாகும். வதுவரர்களின் உண்மையான யோக்யதாம்சங்கள் இதனால் நன்கு வெளியாகவும் ஹேதுவாகிறது.

(கலியாணப் பரீக்ஷை)

4-மணி] 1935-36. [ஆண்களுக்கு

1. உம்முடைய கலியாணத்திற்காக

நீர் (கடன் வாங்காமல்) சேமித்து வைத்திருக்கும் தொகை எவ்வளவு! உம்முடைய ஸிகா ஆஸ்தியின் மதிப்பு எவ்வளவு? தொகை சேர்க்கப்பட்ட உண்மையான விபரமும் ஜாதி-மதம் முதலியவைகளையும் எழுதுக?

2. பூர்வீக சொத்து இல்லையானால் கலியாணஞ் செய்துகொள்ள ஏற்படுஞ் செலவுகளுக்கு நீர் என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்? கலியாணத்திற்கு எவ்வளவு செலவு செய்வதாக உமக்கு உத்தேசம்? விபரமாக எழுதவும்.

3. உமக்கு தொழில் என்ன? மாதங் குறைந்தது எவ்வளவு சம்பாதிப்பீர்? உத்தியோகமானல் வேலையைவிட்டு நீக்கிவிடுவதாக வைத்துக்கொள்ளும். குடும்ப சம்ரக்ஷணையின் பொருட்டு அப்போது என்ன செய்வீர்?

4. நீர் வைதீகமாயும் உமது மனைவி லௌகிகமு மானவளானல் உம்முடைய பாதையில் அவளைத் திருத்துவது எப்படி?

5. உமக்கு மக்கள் அதிகமானலும் மனைவியின்மீது மாரு அன்புடனிருப்பீர் என்பதற்கு என்ன ஆதாரம்?

6. பெண்கல்வி அவசியமா? உமது குமாரத்திகளைப் படிக்கவைப்பீரா-மாட்டீரா? ஏன்?

7. நீர் உமது புத்திரர்களுக்கு பிற்கால வாழ்க்கையின் பொருட்டு என்ன ஏற்பாடுகள் செய்வதாக உத்தேசம்?

8. உமக்கு மனைவி இருக்கிற போதே மறு மணம் செய்ய உத்தேசமுண்டா? செய்துகொள்வது சரியா?

9. எமது மனைவி உமது அபிப்பிராயத்துக்கு விருத்தமாக நடந்துகொண்டால் அவளை உமதிஷ்டப்படி நடக்கும்பொருட்டு நீர் என்னென்ன பிரயாசை யெடுத்துக்கொள்வீர்?

10. உமது மாமனர் தமது பெண்ணை உம்மீது அபாண்டமான சில புகார்களை சொல்லி அனுப்பமாட்டேனென்கிருர். இதற்கு நீரென்ன செய்வீர்?

11. பெண்களை அடித்து மிரட்டுவதும், அடிமையாகப்பாவிப்பதும் சரியா! அத்தகைய பெண்களைத் திருத்த நீர் கொள்ளப்போகும் மார்க்கங்கள் என்ன?

12. உமது மனைவிக்கும் உமது தாயாருக்கும் யுத்தம் சேர்ந்து விடும்போது நீர் அவர்களை எவ்வாறு திருத்துவீர்? யாருக்காகப் பரிவீர்?

B. பெண்கள் சினிமா டிராமா ஷர்க்கஸ் முதலியவைகளைப் பார்க்க வேண்டுவது அவஸ்யந்தானு?

(கலியாணப் பரீக்ஷை)

3-மணி] 1935-ம். [பெண்களுக்கு

1. பாடத்தெரியுமா? தெரியுமானல் தெரிந்த பாட்டுகளில் சிலவற்றை பாடத் தயாரா யிருக்கவேண்டும்.

2. உன்னுடைய புருஷன் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும். குணத்தை விரும்புகிருயா? அழகை விரும்புகிருயா? (அல்லது) பணக்காரனக இருக்க வேண்டுமென்று நினைக்கிருயா, ஏன்?

3. உன் கலியாண சம்பந்தமாக உன் பெற்ரேர்கள் எவ்வளவு ரூபாய் செலவு செய்யவேண்டுமென்று நீ விரும்புகிருய்? விபரமாக காரணத்துடன் குறிப்பிடுக.

4. உனக்கு கோலம் போடத்தெரியுமா? தெரியுமானல் சிலவற்றைப் போடுக.

5. உனக்குத் தெரிந்த உயர்ந்த பக்ஷணம் ஒன்றைச் செய்யும் விதம் கூறுக.

6. உன்னுடைய ட்ரஸ் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்? உன் புருஷர் எத்தகைய ட்ரஸ்ஸுடன் இருக்க நீ விரும்புகிருய்? அவர் என்ன தொழில் செய்யக் கூடியவரா யிருக்க வேண்டும்? காரணம் கூறுக.

7. நீ எதுவரையிலும் படித்திருக்கிருய்? உனக்குத் தெரிந்த இதர படிப்பு (யோக்ய தாம்சங்கள்) என்னென்ன?

ஹாஸ்டல் கொலை

(எஸ். முத்துசுவாமி.)

நடுநிசிக்கு மேல் சுமார் ஐந்து நாழிகை இருக்கும்; மணி இரண்டு; நல்ல தூக்க நேரம்; மழை 'பொச' 'பொச' வென்று தூறிக் கொண் டிருக்கிறது. வில்ஸன் ஹாஸ்டலில் 123-ம் நெம்பர் அறையி லிருந்து ஓர் உருவம் வெளியே வந்து மெத்தைப்படி வழியாகக் கீழே இறங்கியது. இதற்குள் அதே அறையினின்று மற்றோர் உருவம் வெளியில் வந்து நின்று கொண்டு சுற்று முற்றும் பார்த்தது. மூன்றாவது உருவமொன்று எங்கிருந்தோ ஓடி வந்து இவ்வுருவத்தினருகு வர, அவ்விரு வுருவங்களும் அறைக்குட் சென்றன. இருபது நிமிடங்கட் கெல்லாம், 'ஆ' என்ற அடக்கப்பட்ட ஓர் குரல்; இன்னும் பத்து நிமிடங்களில் ஓர் உருவம் அவ் வறையி னின்றும் வெளிவந்து எங்கோ மறைந்தது. ஐந்து நிமிடம் நிசப்தம். முதலிற் சென்ற உருவம் அறையினுட் சென்று தாழிட்டுக் கொண்டது.

மறுநாட் காலை ஏழு மணிக்கு 123-ம் நெம்பர் அறையில் ஒரே இரைச்சல்; இன்ஸ்பெக்டர் வெங்கடரமணியும், ஒரு டாக்டரும், ஒரு வாலிபனைப் பிடித்துக் கொண்டு இரண்டு போலீஸ் வீரர்களும் இருந்தனர். அன்றியும், அவ் வறையின் மாணவரோ குழுமி யிருந்தனர். அறை

சர்டிபிகேட்டுக்கு காப்பி ஆஜர் செய்ய வேண்டும்.

8. உன் புருஷருக்கு அகாரணமாய் கோபம் வருவதாக வைத்துக்கொள். எவ்வாறு தணிவிக்கலாம்? (பத்து வரிகளில்)

9. தெய்வபக்தி தேச பக்தியில்லாத உன் புருஷனை எப்படித் திருத்துவாய்?

10. குழந்தைகள் அதிகமானால் பாதுகாப்பது பற்றியும் சம்பந்தஞ் செய்து கொள்வதைப் பற்றியும் இரண்டு பக்கங்களில் எழுதவும்.

பின் ஒரு பாகத்தில் சுவரோரமாக ஓர் கட்டிலின் மீது ஒரு வாலிபன் இரத்த வெள்ளத்தில் அமுக்திக் கிடந்தான். அடையாளம் தெரியாதவாறு முகத்தில் ஒரு திராவகம் கொட்டியிருந்தது. டாக்டர் பிரேத பரிசீலனை செய்து பார்த்து கொலை ஓர் கத்தியால் இரவு சுமார் இரண்டரை மணிக்குச் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

"இங்கு கிடப்பது கோபாலனே என்று நிச்சயமாய்க் கூறுவீர்களா?" என்று இன்ஸ்பெக்டர் மாணவர்களை நோக்கி வினவினர்.

"நீங்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடாமணி என்பதை நிரூபிப்பீர்களா?" என்று மறு கேள்வி போட்டனர் மாணவர்கள்.

"சரி லோகநாதனே குற்றவாளி என்பதைக் கண்டு பிடித்து விட்டேன். அடே, 148, இவரைக் கொண்டு லாக்கப்பில் வை" என்று இன்ஸ்பெக்டர் புன்னகையுடன் கூறினர்.

'அதற்கான சாக்ஷியங்களைக் கூறும்' என்று லோகநாதன் என்னும் வாலிபன் அதிகாரத் தொனியுடன் கேட்டான்.

"முதன் முதலாக, உனக்கும் கோபாலனுக்கும் கொஞ்ச காலமாக மனஸ்தாபம் என்பதை நான் அறியாதவனன்று. இரண்டாவதாக, கொலைக் குற்றமன்றி களவுக் குற்றமும் உன்னைச் சாரும். கோபாலன் பெட்டியிலிருந்த நூறு ரூபா உன் பெட்டியி லிருக்கிறது. மூன்றாவதாக, நீ நேற்று இரவு நடுநிசியில், சுமார் இரண்டு மணிக்கு நடமாடிக் கொண்டிருந்தாய். மேலும், உன் டைரியில் 'கோபாலன் தள்ளுகிறான்; அவனைக் கொலை செய்ய வேண்டும்' என்று நீ எழுதியிருப்பது; இச் சாக்ஷியங்கள் போதாவோ?" என்று முகத்தில் ஐயக்குறி விளங்கக் கூறினர் இன்ஸ்பெக்டர்.

"எனக்கும் அவனுக்கும் மனஸ்தாபமிருந்தது உண்மையே; நேற்றிரவு நான் சென்றது முண்மையே; ஆனல் இரவு மலஜலங் கழித்தற்காகச் சென்றேன். நீங்கள் 'சடக்' கென்று ஒன்றை நிர்ணயிப்பது போற்றத் தக்கதன்று. நான் நூறு ரூபாயைக் களவாட வில்லை; இது சத்தியம். நான் டைரியில் குறித் திருந்தது படிப்பின் விஷயமாக. மனஸ்தாபமும் இக் காரணத்தாற் றான் பிறந்தது. நான் நிரபராதி. நீர் ஒன்றையும் நீர் ஆராயாது பேசுகிறீர்" என்று பதிலளித்தான் லோகநாதன்.

"ஓகோ, அப்படியானல் இக் கொலை விடியுமட்டும் உமக்குத் தெரியாதோ!" என்று கேட்டார் வெங்கடாமணி.

"ஆம்"

"'ஆம்' என்றால் என்ன அர்த்தம்?"

"எனக்கு விடியுமட்டும் அக் கொலையைப் பற்றிய விடயமே தெரியாது."

"எப்படியும் நீர் குற்றவாளி என்பது புலப்பட்டு விட்டது. ஆதலால்—"

"எனக்குப் புலப்பட வில்லை" என்று முறைத்தான் லோகநாதன்.

"ஆமாம், தன் குற்றம் எப்படி விளங்கும்?"

இதற்குள் வெளியிற் சென்றிருந்த ஓர் மாணவன் துப்பறியும் சோமசுந்திரத்தை யழைத்து வந்தான். இவரைப் பார்த்தவுடன் இன்ஸ்பெக்டருக்குப் பொறாமையும் ஆத்திரமும் இருந்த போதிலும், அதை வெளிக்குக் காட்டாது, "ஹல்லோ மிஸ்டர், நீங்கள் இங்கு வரவேண்டிய அவசியமே யில்லை; இருந்தாலும் நீங்கள் உங்கள் முறையைப் பின் பற்றுங்கள்; நான் என் வழியில் போகிறேன். நான் குற்றவாளியைக் கைது செய்து விட்டேன்; இந்த முறை யுமக்குத் தோல்வி தான்" என்று தான் கண்டு பிடித்த விவரங்களைக் கூறினர். இவற்றைப் பேசாது கேட்டுக் கொண்டிருந்து விட்டு துப்பறிபவர் தாம் ஹாஸ்டலை ஒரு முறை சுற்றிப் பார்க்க விரும்புவதாகக் கூறிச் சென்று, சுமார் இருபத்தைந்து நிமிடங்கட் கெல்

லாம் யோசனை பொதிந்த முகத்துடன் திரும்பி வந்தார். ஒன்றும் சொல்லாமல் வெளிச் சென்ற பின் இன்ஸ்பெக்டரும் ஹாஸ்டலை விட்டுச் சென்றார். இன்ஸ்பெக்டர் மறைந்ததுதான் தாமதம். சோமசுந்திரம் 123-ம் நெம்பர் அறையைச் சோதிக்க வாரம்பித்தார். சுமார் ஒரு மணி நேரம் இவ்வாறு ஆராய்ந்த பின் வெளி வந்து தாம் ஹாஸ்டலின் சேவகர்களைக் காண விரும்புவதாகக் கூறினார்.

வந்த நான்கு பேர்களில் ஒருவனைத் தனியாயழைத்து, "உன் பெயர் என்ன?" என்று வினவினார். "என் பெயரா!........ கோ..........கோவிந்தன்; இல்லை, இல்லை கண்ணன்..........." என்று ஏதோ உளறி

னான். "கோவிந்தன் என்ற என் நண்பனொருவன் மிகக் கஷ்டநிசையி லிருக்கிறான. அந்த நினைவிலே கோவிந்தன் என்ற பெயர் என் வாயில் வந்து விட்டது" என்று கண்ணன் சாக்குச் சொன்னான். "ஐயோ, பாவம்! அது இயற்கை தான். இந்தா, இந்த பத்து ரூபாயை அவனுக்கு அனுப்பு" என்று அவனிடம் ரூபாய் கொடுக்கும் போது, அவரிடத்திருந்த ஓர் கடிதம் காற்றில் பறந்து சென்றது. அதை கண்ணன் எடுத்து அவரிடத்துக் கொடுத்தான். பின் அவர் மாணவர்களிடத்துத் தாம் இன்னும் மூன்று நாட் கழித்து வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றார்.

கோபாலனது தாய் தந்தையர்க்குந் தந்தி யடிக்கப்பட்டு, அவர்கள் வந்து ஆற்றி காரியம் யாவும் முடிந்தது. பெற்ற மனம் பித்து என்பதற்கேற்ப அவர்கள் கொலையாளி என்னப்பட்ட லோகநாதனைத் தம் மனதார வைதனர். லோகநாதனோ வென்னில் ஒன்றும் கூறாது, தான் நிரபராதி என்று மாத்திரம் உறுதி கூறிக் கொண்டிருந்தான்.

கொலை நடந்து மூன்று நாட்களுக்குப் பின் சோமசுந்திரம் இரு போலீஸ் வீரர்களுடனும் இன்ஸ்பெக்டர் வெங்கடரமணியுடனும் வில்ஸன் ஹாஸ்டலுக்கு வந்தார். இவர்களை மாணவர்கள் சுற்றிக் கொண்டு வெகு ஆவலுடன் துப்பறிபவர் வாயை நோக்கிக் கொண்டிருந்தனர். இன்ஸ்பெக்டர் வெகு பட படப்புடன், "லோகநாதன் கொலையாளி யல்ல வென்றும், உண்மைக் குற்றவாளி ஹாஸ்டலிலேயே இருக்கிறானென்றுங் கூறி மிஸ்டர் சோமசுந்திரம் எங்களை இங்கு அழைத்துவந்தார்" என்று இரைந்தார். சோமசுந்திரத்தை நோக்கி, "காண்பியும் சார்; குற்றவாளியை சாக்ஷியங்களுடன்" என்றார். துப்பறிபவர் ஒரு புகைப்படத்தை அவர்களெதிரே காண்பித்து "அது யாருடைய" தென்று கேட்டார் அதைக் கண்டதும் மாணவர்கள் திடுக்கிட்டனர். "ஆ, அது கோபாலனன்றோ?..........ஆம்........ கோபாலனே; அப்பா! அவன் விழிகள் பயங்கரமாக இருக்கின்றனவே!" என்று ஆச்சரியப்பட்டனர்.

பின் சேவகர்கள் வரவழைக்கப் பட்டனர். அவர்களுள் கண்ணன் என்பவனைத் தம் அருகினழைத்துச் சோமசுந்திரம் அவனது மீசை மயிரைப் பற்றி இழுத்தார்; அது கையோடு வந்து விட்டது. எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். கண்ணனது தலைப்பாகையும் கீழே தள்ளப்பட்டது. உடனே மாணவர்கள் அவனைச் சுற்றிக் கொண்டு, "கோபாலா, கோபாலா இது நினைவா, கனவா! கொலையுண்ட

கோபாலனா? அதிசயம்; உயிர் பெற்றெழுந்தனையா?'' என்று திகைத்தனர். ஆம், அவன் கோபாலனே. சோமசுந்திரத்தின் மீது பாய்ந்தான். இதை எதிர் பார்த்தவர் போல் தப்பறிபவர் ஒரு புறமாக ஒதுங்கினர். கோபாலன் விழுந்தான். சோமசுந்திரம் இன்ஸ்பெக்டரை நோக்கிக் கண்ணடித்தார். மறு விநாடி கோபாலன் கைகளில் விலங்கு பூட்டப் பட்டது.

"ஆகா, கோபாலா, கோவிந்தா, கண்ணா—இன்னும் என்ன? கோவிந்தனுக்கு நான் கொடுத்த பத்து ரூபாயை யனுப்பினயோ?'' என்று புன் முறுவலுடன் வினவினர் சோமசுந்திரம். இன்ஸ்பெக்டர் முகத்தில் நாணம், அச்சம், பொறுமை, திகைப்பு, ஆச்சர்யம் முதலியன வழிந்தன. பின் மாணவர்கள் வேண்டுகோளின் பேரில் தப்பறிபவர் தாம் துப்புதுலக்கின விவரத்தைப் பின் வருமாறு விளக்கலானர்.

"கொலை நடந்த இரவன்று மழை தூறிக் கொண்டிருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது எனக்கு மிக்க உதவியாயிருந்தது; ஏனெனில் காலடிகள் மிகத் தெளிவாகப் புலப்பட்டன. நீங்கள் யாவரும் இங்கு வந்த பிறகு நான் வந்தேனாயினும்; ஒரு தொடர்ச்சி மட்டில் மங்கலாக இருந்ததைக் கொண்டு, அவையே முதன் முதலில் ஹாஸ்டலுக்குச் சென்றதாக ஊகித்தேன். நன்கு கவனித்ததில் அவை ஹாஸ்டலுக்கு வெளியே ஒரு பர்லாங்கு தூரம் சென்று விட்டுத் திரும்பி ஹாஸ்டலுக்கே வந்தன. இவை சில இடங்களில் ஆழமாயும் அகலமாயும் இருந்ததால் அச் சமயங்களில் அம் மனிதன் மன வெழுச்சியால் ஓடியிருக்க வேண்டுமென்று தோன்றிற்று. என்னை யறியாமல் நான் இவற்றை மிக முக்கியமாகக் கருதினேன். நான் உள்ளே வந்த பின் ஹாஸ்டலைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று கூறி, முன் கண்ட காலடிகளையே தொடர்ந்து சென்றதில் அவை சேவகன் கண்ணன் அறைக்குக் கொண்டு விட்டன. அச் சமயம் அவ் வறையினுள் ஒருவரும் இல்லை; ஆதலால் மெல்ல உட் சென்று பரிசோதித்தேன். ஓர் பெட்டியின் பின்னல் இரத்தம் இறுகிப் போயிருந்த ஓர் பிச்சாங்கத்தி அகப்பட்டது. அதில் "கோபாலன்'' என்று பொறித்திருந்தது. இதைப் பத்திரப்படுத்திக் கொண்டும் இன்னும் பரிசோதிக்கையில் மயிர் கூடிய ஓர் காகிதச் சுருளும் அகப்பட்டது. இதுவும் உபயோகமாகுமோ வென்று இதையும் எடுத்துக் கொண்டு வந்தேன்.

"பிறகு, இன்ஸ்பெக்டர் சென்றபின் கொலை நடந்த வறையை ஆராயத் தொடங்கினேன். (இன்ஸ்பெக்டர் இங்கு உறுமினர்.) அவ் வறையைக் கூர்ந்து நோக்குகையில் ஒரு மூலையில் இரண்டு மூன்று வில்லைப் போல கொஞ்சமும் கோணவில்லாத மயிர்கள் கிடந்தன. இவை தலை மயிரல்ல; மீசை மயிரா? ஹாஸ்டலில் எனக்கு எல்லோரையும் தெரியும்; யாருக்கும் இவ்வளவு நீண்ட மீசை மயிர் கிடையாது. ஆம்; கண்ணனுக்கு நீண்ட மீசை உண்டல்லவா? நான் கண்ணனறையிற் கண்டெடுத்த மயிரையும் கொலையறையிலகப்பட்ட மயிரையும் ஒத்திட்டுப் பார்க்கையில் இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தன; நிறமும் ஒன்றே. இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? கண்ணன் மீசை மயிரை எடுத்து விட்டானா? பிரேதத்தை நன்கு பரிசோதித்தேன். பிரேதம் கண்ணனே! அவன் மீசை மயிர் க்ஷவரம் செய்யப் பெற்றிருந்தது. கொலையாளி மீசை மயிரை க்ஷவரம் செய்து விட்டு, மயிரைப் பத்திரப்படுத்தி யிருக்கிறான். கொலையாளி யார்? நான் வெளியிற் கண்ட காலடிகளின் மர்மம் என்ன? வெளியே நான் அளந்த காலடிகளின் அளவும், உள்ளே யிருந்த கோபாலனது செருப்பளவும் ஒத்திருந்தன. கோபாலனே கொலை புரிந்து விட்டு வெளிச் சென்று உள்ளே வந்திருக்கிறான். இது தப்பறிபவர்களை ஏமாற்றுதற் கென்று செய்து அதில் பிசகி விட்டான். கொலையுண்டவன் இறக்கும் சமயம் எந்த வஸ்

துலைவப் பார்க்கிறானோ அவ் வுருவம் அவன் கண்களிற் பதிந்து விடும் என்று கேட்டிருக்கிறேன். ஆதலால் அவன் கண்ணைத் திறந்து போட்டோ பிடித்துக் கொண்டேன். லோகநாதன் பெட்டியிலிருந்த ஐந்து ரூபாய் நோட்டுகளைப் பரிசோதித்ததில், அவைகளு ளொன்றில் கட்டை விரல் பதிந்திருந்தது கண்டு, இதையும் போட்டோ எடுத்துக் கொண்டேன். இன்ஸ்பெக்டர் இதைச் சரியாக கவனிக்காது விட்டது வருந்தத் தக்கது. (இன்ஸ்பெக்டர் இருமுகிறார்.)

“கொலை யுண்டவன் கண்ணனாகில் கோபாலன் எங்கே? கண்ணனும் கோபாலனும் சற்றேறக் குறைய ஒரே உயரமுள்ளவர்கள். இது ஒரு விதத்தில் நல்லதென்று தேறி கோபாலன் தானும் மீசை வைத்துக் கொண்டு கண்ணன் ஸ்தானத்தில் இருக்கலாமல்லவா? இதன் உண்மையை யறிதற் பொருட்டே நான் கண்ணனென்னுங் கோபாலனைச் சந்தித்தேன். அவனறியாதபடி அவன் முகத்தை நன்கு கவனித்துக் கொண்டதில் கோபாலனே யவன் என எனக்குத் தெற்றெனத் தோற்றிற்று. நான் கேள்விகள் போட்டதற்கு விழித்தான். அப்போது நான் வேண்டுமென்றே ஓர் காகிதத்தைக் காற்றில் விட்டு அவனை எடுத்து வரச் செய்தேன், (கோபாலன் இங்கு திமிறினான்) அதில் அவன் கட்டை விரல் பதிந்திருந்தது.

“ரூபாய் நோட்டில் பதிந்திருந்த கைரேகையும் ஒரே மாதிரி யிருந்ததால், கோபாலனே வேண்டுமென்று ரூபாயை லோகநாதன் பெட்டியில் வைத்தானென்றும் விளங்குகிறது. பிச்சாங்கத்தியிலிருந்த ரேகையும் இதனை யொத்திருந்தது, மற்றும் அவனே பிரேதத்தின் முகத்தில் அடையாளந் தெரியாதவாறு திராவகம் கொட்டினான். கண் போட்டோவில் கோபாலன் பயங்கர உருவமிருந்ததால் அவனே கொலையாளி என அறியக் கிடக்கின்றது. இன்னும் என்ன வேண்டும்?”

“ஆம், இது மிக்க அதிசயம்; என் கோபாலன் கண்ணனைக் கொலை செய்ய வேண்டும்? இருவருக்கும் சம்பந்தமிருக்க வேண்டிய அவசியமே யில்லையே” என்றனர் மாணவர்கள்.

“ஆமாம், அது சரியான கேள்வி தான். அதிருஷ்ட வசமாக இக் கடிதம் என் கையில் சிக்கியிராவிடில் நான் இப்போது விழிக்க நேரிடும். (கோபாலன் இங்கு ‘ஆகா, என்ன மூடம்’ என்று மெதுவாகச் சொன்னது துப்பறிபவரே யறிந்தார்.) நான் ஹாஸ்டலுக்கு வெளியே செல்லுகையில் ஓர் மரப்பொந்தில் ஏதோ வெண்மையாகத் தெரிந்து எடுத்ததில், அது ஒரு கசங்கிய கடிதமாக இருந்தது. இவ்வாறு அலக்ஷ்யமாகத் தப்பிதமாய் அக் கடிதத்தை மறைத்து வைத்ததற்காகத் தான் கோபாலன் இப்போது தன்னைத் திட்டிக் கொண்டான். அக் கடிதத்தைப் படிக்கிறேன் கேளுங்கள்” என்று ஒரு கசங்கிய காகிதத்தை எடுத்துப் பின் வருமாறு படிக்கலானார்.

“ ‘கோபாலனுக்கு,

ஜாக்கிரதை, அதை நீ கண்டுபிடித்தாலென்ன, நானே எழுதினாலென்ன! எப்படியும் என் அதிர்ஷ்டத்தால் பரிசுப் பணம் என் கையில் வந்து விட்டது. அதை நீ கேட்க உனக்கு உரிமையில்லை. நாம் செய்து கொண்ட உடன்படிக்கைப் படி நான் நடக்கப் போகிறதுமில்லை; உன்னால் என்னை ஒன்றும் செய்ய முடியாது; எதற்கும் இன்றிரவு 2 மணிக்கு நான் உன்னைச் சந்திக்கிறேன்—கண்ணன்’

இதிலிருந்து கோபாலன் கண்ணனுக்குப் போட்டிப் பந்தயத்துக்கேற்ற விடைகள் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்; பரிசுப்பணம் வந்த பின், அவர்கள் அதனைப் பாகம் பிரித்துக் கொள்வார்கள் என்ற இத்தகைய உடன்படிக்கைப் படி நடக்க கண்ணன் மறுத்திருக்கிறான். பின்பு அன்றிரவு ஏதோ சச்சரவு நடந்து கோபாலன் கொலை செய்திருக்கிறான்—இவைநன்கு விளங்குகின்றன. கோபால,

உண்மை என்ன?" என்று புன்னகையுடன் நோக்கினார் கோபாலனை.

கோபாலன் "ஆம்" என்று தலையசைத்து விட்டு மெதுவாக "அன்றிரவு எனக்குச் சிறிது பணமும் கொடுக்க மறுத்து என்னைக் கொலை செய்யவும் யத்தனித்தான்; அப்போது எனக்குப் பொங்கின ஆத்திரத்தில் அவனைக் கொலை செய்து விட்டு அனேக தவறுகள் செய்து விட்டேன். நீர் இவற்றைக் கண்டு பிடித்த முறை எனக்கு மிக்க ஆச்சர்யத்தை விளைவிக்கிறது." என்று கூறிப் பேசாதிருந்தான்.

கோர்ட்டில் விசாரணை நடக்கையில், தன் பெற்றோருக்கு பெரிய அவமானத்தை விளைத்து விட்டதை யெண்ணி வருந்தியவனாய் கோபாலன் ஓர் விஷமாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு இறந்தான். பெற்றோர் மனம் எவ்வாறிருக்கும்!

லோகநாதன் பரீக்ஷையில் முதலாவதாகத் தேறினான்.

துப்பறிபவர் இன்ஸ்பெக்டரை மற்றொரு முறை சந்தித்த போது, "ஹல்லோ இன்ஸ்பெக்டர்வாள்! லோகநாதன் கோபாலனைக் கொலை செய்து விட்டானே" என்று சிரித்துக் கொண்டு கூறினார். இதை இருவிதமாகப் பொருள் கொள்ளலாம்!

நூதன தமிழ் நாவல்கள்.

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், B. A. எழுதியவை.

திகம்பர சாமியார்	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பால்ய லீலை	5	0	துரைக்கண்ணம்மாள்	2	4	மிஸ்டர் பூச்சாண்டி		
மிஸிஸ் லைலா மோகினி	3	0	லக்ஷ்மீகாந்தம்	2	0	எம்மே!	1	2
மன்மதபுரியின் மூடு			திரிபுரசுந்தரி	2	0	சோமசுந்தரம்	1	2
மந்திரம்	2	12	இராஜேந்திர மோகனா	2	0	டாக்டர் சோணாசலம்	1	2
கனகாம்புஜம்	2	12	வசந்தகோகிலம்	1	4	பச்சைக்காளி	1	2
தில்லைநாயகி	2	4	முத்துலக்ஷ்மி	1	4	சமயசஞ்சீவி	1	2
ஸதானந்த போதக			நீலலோசனி	1	2	சொக்கன் செட்டி	1	2
சாமியார்	2	4	கலியாண சுந்தரம்	1	2	பூஞ்சோலையம்மாள்	1	2
பன்னியூர் படாடோப			நங்கை மடவன்னம்	1	2	சிவராமகிருஷ்ணன்	1	2
சர்மா	2	4	சிங்கார சூர்யோதயம்	1	2	மாயசுந்தரி	0	12

செய்யூர்-எஸ். சாரநாயகி அம்மாள் எழுதியவை. / எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
சிவபாக்யம்	1	8	நித்யகல்யாணி	0	12	கனகமணி	2	4
அபரஞ்சி	0	12	சண்முகவடிவு	0	5	பத்மாட்சி	2	0
ஞானக்கொழுந்து	0	12	மன்மத விஜயம்	0	4	வசந்தா	1	8
சம்பத்குமார்	0	12				வீரகேசரி	1	8

ரமாமணி ரூ. 2 0 0 | சுந்தரி மனோகரன் ரூ. 1 4 0

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

நாகரிக மோகினி மிஸ். லீலா

(ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை.)

திவான்பகதூர்-தாமோதர முதலியார், திருச்சினாப் பள்ளியில் செல்வாக்கு மிகுந்த பிரபுக்களில் ஒருவர். அவருக்குப் போதுமான செல்வமிருந்ததால், அரசாங்க உத்தியோகம் வகிக்கும் கௌரவத்தை அவர் விரும்பாவிடினும், இரவும் பகலும் அரசாங்கத்தின் அநுக்ரஹத்தையே எதிர்பார்த்துத் தவங்கிடக்கும் அரசாங்கத்தின் அடியார்க்கடியார்களுள் தாமும் ஒருவராக இருந்து வந்தார், அரசாங்கத்தின் அநுக்ரஹத்தினால் தமக்குக் கிடைத்த 'திவான்பகதூர்' எனும் ஒரு பட்டத்துடன் திருப்தியடையாத அவர், அப்பட்டத்தைக் காட்டிலும் உயர்ந்த பட்டங்களைப் பெறவேண்டி இடைவிடாத ஊக்கத்துடன் பல வழிகளிலும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வந்தார். நவீன நாகரிகம் மிகுந்த கனவான்களுடனும் அரசாங்க உத்தியோகத்தினருடனும் அடிக்கடி கலந்து பழகும் அவர், தமிழ்மொழியே தமது தாய்மொழியாக இருந்தும், மற்றவர்களுடன் உரையாடும்போது 'வெறும் கர்நாடகத் தமிழ்' பேசுவது அநாகரிகமென்று எண்ணியவராய், அடிக்கடி ஆங்கிலச் சொற்கள் கலக்கும்படி மணிப்பிரவாள 'நடை'யிலேயே பேசும் இயல்புடையவரானார். அப்படிப்பட்ட கனவானின் அருமருந்தனைய செல்வப் புதல்வியே, கதாநாயகியாகிய மிஸ். லீலா.

பொருட்செல்வம் மிகுந்தவரான மிஸ்டர். தாமோதர முதலியாருக்கு, மிஸ். லீலா ஒருத்தியைத் தவிர வேறு சந்ததி கிடையாது. எனவே, அவர் தமது அருமைத் திருமகளாரை எவ்வளவு செல்வமாக வளர்த்து வந்திருப்பாரென்பதை விரித்துரைக்க வேண்டியதில்லை. முதலியார் வீட்டில், லீலா வைத்ததே சட்டம். அவளது விருப்பத்திற்கு மாறாக நடக்கத் துணியும் எவரும், முதலியாரின் கடுங் கோபத்திற்கு ஆளாகாமலிருக்க முடியாது. இளம்பருவத்திலேயே கிறிஸ்தவக் கலாசாலையில் படிக்கத் தொடங்கிய லீலா, நவீன நாகரிக அலங்காரங்களிலும் நவீன நாகரிக நடவடிக்கைகளிலும் மிகுந்த மோகமுடையவளாக இருந்து வந்தது இயல்பே; வயது முதிர முதிர, இந்திய நாகரிகத்திலும் தமிழர்களின் நடை உடை பாவனைகளிலும் அவள் மனத்தில் மகத்தான வெறுப்பு முதிர்ந்துகொண்டே வந்தது.

திருக்காட்டுப் பள்ளி-சுந்தரேச முதலியார், செல்வச் சீமான்களுள் ஒருவர்; வளம் மிகுந்த இருநூறு வேலி நிலங்களுக்குச் சொந்தக்காரர். "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது"; "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம், தொழுது உண்டு பின் செல்பவர்"—எனும் முதுமொழிகளின் உண்மையை உணர்ந்த அவர், அரசாங்கத்தின் அநுக்கிரகத்தை அடைய முயற்சிக்கும் நோக்கமில்லாதவராய், பயிர்த் தொழில் ஒன்றிலேயே தமது முழுகவனத்தையும் செலுத்தலானார். அவரது செல்வப் பிள்ளைகள் மூவருள் மூத்தவனாகிய சந்திரசேகரன், தனது தந்தையின் கருத்துக் கிசைந்த நற்குண சீலன். திருமணப் பருவமடைந்த அவனுக்கு, விரைவில் திருமணம் செய்து கண் குளிரக் கண்டுகளிக்க வேண்டுமென்னும் ஆர்வம், சுந்தரேச முதலியாரின் மனத்தில் தினந்தோறும் மேன்மேலும்

வளர்ந்து வரலாயிற்று. பல விடங்களிலும் பெண் பார்த்தும் எவ்விடத்திலும் திருப்தி கொள்ளாத அவர், முடிவில் திருச்சினாப்பள்ளியில் பிரபல கனவானும் தனவந்தருமாகிய தாமோதர முதலியாரின் வீட்டில் சம்பந்தம் செய்துகொள்ள விரும்பலானார்.

தாமோதர முதலியார் நாகரிகம் மிகுந்த சீமானாதலின், அவர் தமது பெண்ணை நன்கு படிக்க வைத்திருப்பாரென்பது சுந்தரேச முதலியாரின் நம்பிக்கை. அவர் திருச்சிக்குச் சென்று தாமோதர முதலியாரிடம் தமது உத்தேசத்தைத் தெரிவிக்கவே, தம்மைப்போன்ற தனவந்தராகிய சுந்தரேச முதலியாரின் மகனுக்குத் தமது அருமைத் திருமகளைத் திருமணம் செய்து கொடுத்தால் தமது மகள் எவ்விதத்திலும் கஷ்டப்படவேண்டிவராதென்னும் எண்ணங்கொண்ட தாமோதர முதலியாரும், சுந்தரேச முதலியாரின் விருப்பத்திற்கு உடனே இசைந்துவிட்டார். சில தினங்கள் சென்றபின், திருச்சினாப்பள்ளி-புத்தூர்-திவான்பகதூர் தி. க. தாமோதர முதலியாரின் செல்வப் புதல்வி சௌபாக்கியவதி. மிஸ். லீலா. B. A. க்கும்; திருக்காட்டுப்பள்ளி-பெரிய பண்ணை திருவாளர். சுந்தரேச முதலியாரின் ஜேஷ்ட குமாரன் சிரஞ்சீவி. சந்திரசேகரனுக்கும் பலவகைப்பட்ட ஆடம்பரச் சிறப்புகளுடன் திருச்சியைச் சேர்ந்த புத்தூரில் திருமணம் இனிது நிறைவேறியது.

திருமணத்திற்குப் பின் ஆறுமாத காலம் வரையில், மிஸஸ். லீலா தனது தாய் வீட்டிலேயே தங்கியிருந்தாள். அதன்பின் சந்திரசேகரன் தனது மாமனார் வீட்டுக்குச் சென்று, தனது மனைவியைத் தனது சொந்த ஊருக்குத் தன்னுடன் கூட்டிச் சென்றான். பிறந்தது முதல் நகரத்திலேயே காலங்கழித்தவளான மிஸஸ். லீலாவுக்கு, கிராம வாழ்க்கை மிக விரைவில் கசந்து போய்விட்டது. மேலும், தனது கணவனேனும் வீட்டிலுள்ள மற்றவர்களேனும் நவீன நாகரிகப் பழக்க வழக்கங்களில் சிறிதும் விருப்பம் இல்லாதவர்களாகவும் இருப்பதை உணர்ந்த மிஸஸ். லீலா, பெரிதும் வருந்தலானாள். தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களில் பற்று மிகுந்தவளும் சந்திரசேகரனின் தாயாருமாகிய மங்களம்மாள், தனக்கு வாய்த்த மருமகளின் மனப்போக்கை நினைத்து நினைத்து மிகவும் மனம் நொந்தாள்.

மிஸஸ். லீலாவின் புக்கக வாழ்க்கையில் அடிக்கடி நடைபெற்ற சம்பவங்களிலிருந்து, இங்கு இரண்டொரு காட்சிகளை எடுத்துக் காட்டுவோம்:—

மாலை ஐந்து மணி இருக்கலாம். மிஸஸ். லீலா தனது கட்டிலில் படுத்துக்கொண்டு புரண்டு கொண்டிருக்கிறாள். அப்பொழுது அங்கு வந்து அவளைப் பன்முறை தட்டி எழுப்பிய அவளது மாமியாகிய மங்களம்மாளுக்கும் அவளுக்குமிடையில் பின்வருமாறு சம்பாஷணை தொடங்குகிறது:—

மங்களம்:—"என்டியம்மா லீலா! மணி அஞ்சடிச்சிட்டுதே! இன்னுமா தூக்க மயக்கக் தெளியலே? அந்தி வேளையிலே, குடித்தனம் பண்ற பொண்ணு, மூஞ்சி கழுவி மஞ்சள் பூசி நெத்தியிலே குங்குமப்பொட்டு இட்டுக்கிட்டு, வாசல்லே தண்ணி தெளிச்சிக் கோலம் போட்டு, மஞ்சள் வெய்யில் மறையறத்துக்கு முன்னியே தெருவாசல்லே தீபம் ஏத்தி வச்சிக் கும்பிட வாணுமா? என் காலம் எப்படியோ கழிஞ்சிட்டுது. இன்னுமே, இந்த வீட்டுக்கு நீதானே சொந்தக்காரி. இந்நேரத்திலே, நீ இந்த மாதிரி படுக்கையிலே புரண்டு கிட்டிருந்தால், நம்ம வீட்டுக்குள்ளே லட்சுமி காலடி எடுத்து வைப்பாளா? ரொம்பப் படிச்சவளாகிய உனக்கு, நானா புத்தி சொல்றது?"

லீலா:—"போதும், போதும்! உன் ஊத்தை வாயை அடக்கு! உன் அதிகாரத்தை யெல்லாம் கூலிக்கு வேலை செய்கிற வேலைக்காரியிடம் காட்டு. உன் மிரட்டலுக்கு அடங்கி பயந்து நடக்க, நான் ஒரு காட்டு மிராண்டிப் பெண்ணில்லை. மூஞ்சியில் மஞ்சள் பூசிக்கொள்ள, நான் ஒரு பட்டிக்காட்டு முண்டமல்ல. தெருவிலே கோலம் போடறதும் விளக்கு வைக்

றதும் யார் வேலை? மஞ்சள் வெய்யி லிருக்கும்போதே தெருவாசலிலே விளக் கேத்தி வச்சிவிட்டால், லட்சுமி நம்ம வீட்டுக்குள்ளே நுழைஞ்சுடுவாளா என் ன? வெள்ளைக்காரர் தேசத்திலே, சாயங் காலத்திலே வீட்டு வாசலிலே விளக்கேத்தி வச்சி யார் கும்பிடரு? அந்த தேசத் திலே, லட்சுமி நடமாடலையா என்ன? படிப்பு வாசனையில்லாத கர்நாடகக் கிழட் டுப் பிணங்களுக்கு, எவ்வளவுதான் எடுத் துச் சொன்னாலும் புத்தி வரப்போறதா என்ன?"

மங்களம்:—"எவ்வளவோ தங்கக் கட்டியான பெண்களெல்லாம் சொந்தத் திலே இருந்தும், படிச்ச பெண்ணுச் சென்று உன்னைக்கொண்டு வந்ததுக்கு இதுதானு பலன்! நீ என்ன செய்வாய்? ஈசுபீசென்னு என்னென்னமோ கொட் டிக் கொளறுகிற மிலேச்ச பாஷை படிச்ச திமிரும் பணக் கொழுப்புந்தானே உன்னை இப்படிப் பேசச் செய்யறது! இதெல்லாம் குடித்தனம் பண்ற பெண்ணுக்கு அழகா என்ன? குடித்தனம் பண்றதுக்கு உத வாத படிப்பு என்ன படிப்பு? அதைக் குப்பையில்தான் கொட்டவேண்டும். என் னமோ என் தலையெழுத்து—இந்த குடும் பத்தைப் பிடித்த கிரகசாரம்-இந்த வீட் டுக்கு நீ வந்து சேர்ந்தாய்! ஆண்ட வன், உனக்கு என்னக்கித்தான் நல்ல புத்தி கொடுப்பானே தெரியலையே!"

* * *

நண்பகல் சுமார் ஒரு மணி இருக் கலாம். மிஸஸ். லீலா ஒரு சாய்வு நாற் காலியில் படுத்துக்கொண்டு ஒரு ஆங்கில நாவலை மிகுந்த ஆர்வத்துடன், படித்துக் கொண்டிருக்கிருள். வயலில் வேலையாட் களின் வேலைகளைக் கவனித்துக் கொண் டிருந்த சந்திரசேகரன், நெற்றியிலும் உடம்பிலும் வியர்வை வழிந்தொழுகு மிகுந்த களைப்புடன் வீட்டுக்குத் திரும்பி யிருக்கிருன். லீலா எதிரில் சில நிமிஷங் கள் நின்று பார்த்தும், அவள் அவனைக் கவனித்தபாடில்லை. எனவே, அவளிடம் மிகுந்த வெறுப்படைந்த அவன், அவள் காலடியில் வந்து நிற்கிருன். பின்னர்,

அந்த சதிபதிகளுக்குள் நடைபெறும் சம் பாஷணையைக் கவனிப்போம்:—

சேகரன்:—"நெருப்பைப்போல் எரி யற வெய்யிலில் இவ்வளவு நேரம் பொசுங் கிட்டு வந்தா, அந்த கவலையை ஆத்தற துக்குக்கூட இங்கே ஒருத்தரு மில்லே. கொஞ்சம் எழுந்திருந்து உள்ளேபோய், சாதம் போடேன்!"

லீலா:—"பசியா யிருந்தால், வேலைக் காரியை எடுத்துப் போடச்சொல்லிச் சாப் பிடறதுதானே! என் கையாலே பரிமாறி ஞல்தான், சாதம் உள்ளே போகுமாக் கும்! இருக்கிற சொத்தை அனுபவிக் கிறதுக்குத் தெரியாமே, சக்கான் செட்டி யாட்டமா வீணு வெய்யில்லே பொசுங்கிக் கஷ்டப்பட்டால், அதுக்கு நானென்ன பண்றது? பணமிருந்து என்ன பிரயோ ஜனம்? அதை நாகரிகமான வழியிலே செலவிட்டு 'ஜாலி'யாய்க் காலங் கழிக் கிறதுக்குத் தெரியாட்டா, காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் முள்ளிலும் எருமை மாடாட்டமா உழைக்க வேண்டியது தான்! இந்தக் காலத்திலே, நாகரீகமா வாழத் தெரியாத மனுஷனும் ஒரு மனு ஷனு என்ன?"

சேகரன்:—"போதும், போதும்! இந்த மாதிரி பேசறதுக்குத்தானு நீ இங் கிலீஷ் படிச்சது? கொண்ட புருஷனின் கவலையை அறியாத பெண்ணும் ஒரு பெண்ணு? உழைத்துச் சாப்பிடாத சோறும் ஒரு சோறு? கொண்ட புருஷன் வேகிற வெய்யிலில் கிடந்து வாடி வதங்கி வயிறு பசிக்கக் கால் கடுக்க நிற்கும்போது, அவனுக்குச் சோறு போடக்கூட மன மிரங்காமல் நாற்காலியில் படுத்துக்கிட்டு படிக்கிற படிப்பும் ஒரு படிப்பா? குடும்ப காரியத்தைக் கவனிக்காமல் சாப்பிடற தும் தூங்கறதுமா உன்னேடு காலங்கழிச் சிக் கிட்டிருந்தால், இந்த குடித்தனம் விடிஞ்சாப் போல்தான்! இப்படிப்பட்ட திறக்கு பிடிச்ச ராங்கிக்காரியைக் கட்டிக் கிட்டதைவிட, படிப்பில்லா விட்டாலும் பய—பக்தி—விச்வாசத்தில் குறையாதவ ளாய், ஒரு பட்டிக் காட்டு ஏழைப் பெண்

குருட்டு ஜோஸியம்

—:(o):—

(கி. ரெகுநாதன்.)

ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி இருக்கும். அன்றையதினம் லீவுநாளானகையால் என் ஆபீஸ் ரூமில் ஈஸிச்சேரில் படுத்துக்கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனைவி அங்கே வந்தாள்.

நான்:—என்ன? இதற்குள் சமையல் ஆகிவிட்டதா?

அவள்:—இல்லை. இன்னிக்கு லீவு தானே. ஒரு காரியம் செய்யவேண்டும்.

நான்:-ஸினிமாவிற்குத் தானே! இப்ப வந்திருக்கும் படங்களெல்லாம் ஒன்றும் நன்றாக விருக்காது. அடுத்த நடவை போகலாம்.

அவள்:—நான் சொல்லுவதற்குள் ஏன் அவசரப் படவேண்டும். அதற்கெல்லாம் ஒன்றுமில்லை. வேறொன்று உங்களால் செய்ய முடியுமா?

நான்:—என்னால் முடிந்தால் செய்கிறேன்.

அவள்:—நிச்சயமா?

நான்:—நிச்சயமாக.

அவள்:—இந்த ஊருக்கு 'ஜகந்நாதன்' என்று புதிதாக ஒரு ஜோஸியர் வந்திருக்காராம். ரொம்ப நன்றாக ஜோஸியம் சொல்கிறாராம். ஜாதகம்கூடப் பார்ப்பாராம். இன்னிக்கு லீவுதானே! அவரைப் போய் அழைத்துக்கொண்டு...................

நான்:—எனக்கு இன்னிக்கு லீவாக விருந்தாலும் ரொம்ப வேலை யிருக்கிறது.

அவள்:—இதுதான் 'நிச்சயமாகச் செய்கிறேன்' என்று சொன்னதோ.

'ஏதடா மாட்டிக்கொண்டு விட்டோமே' என்று மத்தியானம் இரண்டு மணிக்கு அழைத்துக்கொண்டு வருவதாகச் சொன்னேன். எனக்கு ஜகந்நாதரைப்பற்றி முன்னமேயே தெரியும். அவர் வந்துவிட்டால் பெரிய தொல்லை என்றும் தெரியும். அவளை ஏமாற்றிவிடலாம் என்று பன்னிரண்டு மணிக்கே படுக்கையைப் போட்டுக்கொண்டு தூங்கிப் போய்விட்டேன். நான் எதிர்பார்த்ததற்குமாறாக அவள் என்னை $1\frac{1}{2}$ மணிக்கே எழுப்பி, காப்பியைக் கொடுத்து சௌக்கியம் பண்ணி என்னை அவரை அழைத்து வரும்படிச் செய்துவிட்டாள். நான் அவரை அழைத்துக்கொண்டு வந்தபொழுது, கூடத்தில் மணப்பலகையைப் போட்டு அதற்கெதிரில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் முதலியவைகளை ஒரு தட்டில் வைத்திருந்தாள். அவர் உள்ளே வந்ததும் அவருக்கு உபசார வார்த்தைகள் கூறி அவரைப் பலகையில் உட்காரச் சொல்லி, முதலில் தன் ஜாதகத்தை நீட்டினாள். நான் அவருக்கு எதிரில் சற்று தூரத்தில் உட்காருமோம். அவள் ஒரு தூணைக் கட்டிக்கொண்டு நின்றாள்.

ஜோஸியர் தன் வலது கையில் ஜாதகத்தை வைத்துக்கொண்டு, இடது கையால்

னைக் கட்டிக் கிட்டிருந்தாலும் சந்தோஷமா காலங் கழிக்கலாம்! என்ன பண்றது? உன்னைக் கோபிச்சிக்கிறதில், என்ன பலன்? எல்லாம் என் தலைவிதி!

தனது இருகண்களையும் மூடிக்கொண்டு, விரல்களின் இடுக்குகளின் வழியாக ஜாதகத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

அவர்:—அஷ்டமாதி திசையில் சனி உட்கார்ந் திருப்பதினாலேயும், குரு, சூரியனை 8-ஆம் மடத்தில் பார்ப்பதினாலேயும் தனலாபம் உண்டு.



"ரொம்ப ஸந்தோஷம்.'

அவர்:—"குரு[illegible]ம் சனியும் ஒருவரையொருவர் பார்ப்பதால், உங்களிருவருக்கும் பிதுர்தோஷ மிருக்கிறது."

அவள் (திடுக்கிட்டு):—அதற்கென்ன பரிஹாரம் பண்ணவேண்டுமோ?

அவர்:—இராமேஸ்வரத்திற்குப் போய்த் திலஹோமம் செய்தால் போரும்.

நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். "நல்லவேளையாய் அஸ்வமேத யாகம் பண்ணச் சொல்லவில்லை' என்று என் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

"மத்ததிற் கெல்லாம் பாதகமில்லை" என்று சொல்லிவிட்டு ஜாதகத்தைக் கீழே வைத்தார். நான், 'பிழைத்தேண்டாப்பா' என்று நினைத்துக்கொண்டு, "உங்களுக்கு ரொம்ப சிரமம்-" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்தேன். அதற்குள் அவள், "உங்கள் ஜாதகத்தைக் காண்பிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை; அது கெட்டுப் போய்விட்டது."

"இல்லையே! நான் நேற்று இதுப்பைச் சட்டி எடுக்கப் பரண்மேல் ஏறிய பொழுது, அது அங்கே கிடந்தது. நல்லவேளையாக எலி கடிக்கவில்லை. இதோ கொண்டு வருகிறேன்" என்று உள்ளே ஓடினாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. முன்னமேயே அவள் ஒரு நாளைக்கு இந்தப் பிராமணனைக் கூப்பிடுவாளென்று தெரியுமாதலால், நான் இரண்டுநாள் முந்தித்தான் அதைச் சிரமப்பட்டுத் தேடிப் பரண்மேல் போட்டிருந்தேன். அவளுக்கு எப்படியோ அகப்பட்டுவிட்டது.

ஜாதகமும் ஜோஸியர் கைக்கு வந்து சேர்ந்துவிட்டது. அவர் என்னமோ விரல்களை விட்டு எண்ணி, கடைசியில் நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி என்றும், பெரிய உத்தியோகத்திற்கு வருவேன் என்றும் சொல்லி ஜாதகத்தைக் கீழே வைத்தார். எனக்குச் சட்டென்று ஒரு யோஜனை தோன்றிற்று. உடனே நான் அவரைப் பார்த்து, "இன்னும் ஒரு ஜாதகம் பார்க்க வேண்டுமே. என்னை க்ஷமிக்கவேண்டும்" என்றேன். அவரும் அதைக் கொண்டு வரும்படிச் சொல்ல நான் உடனே உள் ஓடி பீரோவைத் திறந்து ஒரு பழைய ஜாதகத்தைக் கொண்டுவந்து," இதை என் சினேகிதர் உங்களிடம் காண்பித்துப் பலன் கேட்டு எழுதும்படி அனுப்பியிருக்கிறார். சிரமம் கொடுப்பதற்காக மன்னிக்க வேண்டும்" என்று பணிவாகச் சொன்னேன். அவர், "அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் ஜாதகம் பார்ப்பதற்குத் தானே இங்கு வந்திருக்கேன்" என்றார்.

அவள் என்னைச் சந்தேகத்துடன் பார்த்தாள். நான் அவளைச் சந்தோஷத்துடன் பார்த்தேன்.

அவர் வழக்கம்போல் ஒரு கையால் கண்களை மூடிக்கொண்டு பார்க்க ஆரம்பித்தார்.

அவர்:—இவருக்கு இப்பொழுது சுக்கிர தசை அடிக்கின்றது. அடுத்த மாஸம் லாட்டரியில் இவருக்குப் பணம் விழும். புத்திரலாபம் ஏற்படும்..........................

இந்த சமயத்தில் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. கதை முடிந்ததும் உங்களுக்கும் எனக்குமேல் தூக்கி வாரிப் போடும்.

"ஒரு பெரிய வீடு வாங்குவார்."

"ஆமாம், அப்படித்தான் உத்தேசம் பண்ணியிருக்கிறார்" என்று சிரித்துக்கொண்டே கூறினேன். அவர்தான் ரொம்ப சரியாகச் சொல்லிவிட்டோமென்று புன் சிரிப்புடன்,

"இப்பொழுது இவர் சின்ன உத்தியோகத்திலிருந்த போதிலும் அடுத்த வருஷம் பெரிய உத்தியோகத்திற்கு வருவார்" என்றார்.

நான்:—ரொம்ப சந்தோஷம். அவரது ஆயுட் பாவத்தைப் பாருங்கள். அதுதான் ரொம்ப முக்கியம்.

அவர் ஏதோ சற்று நேரம் கட்டங்களை எண்ணிவிட்டு, "என்ன விருந்தாலும் அறுபத்தைந்திற்குக் குறைவில்லை" என்று சொல்லி ஜாதகத்தைக் கீழே வைத்தார்.

நான்:—"ரொம்ப ரொம்ப சந்தோஷம். தங்களுக்கு ரொம்ப சிரமம்" என்று சொல்லிவிட்டு அவருக்குக் கொடுக்க வேண்டியதிற்குமேல் நான்கணா சேர்த்துக் கொடுத்து அவரை வீட்டிற்கு அனுப்பினேன்.

வாசலிலிருந்து உள்ளே இடி இடி என்று சிரித்துக்கொண்டே வந்தேன். அவள், "இப்ப என்ன அவ்வளவு சந்தோஷம்," என்று கேட்டாள். நான், "எல்லாம் இதுதான் காரணம்" என்று சொல்லி என் சிநேகிதன் ஜாதகத்தைக் காண்பித்தேன். அவளும் அதைப் படித்துவிட்டு சிரித்துக்கொண்டே, "பாவம், அவருக்கு என்ன தெரியும்." என்று ஜாதகத்தைக் கீழே போட்டாள். நான், "போரும், போரும், அவர் ஜோஸியத் திறமையை நீதான் மெச்சிக்கவேண்டும். இன்னொரு தடவை அவரைக் கூப்பிடுவாயா?" என்று கேட்க அவள் தலையை ஆட்டிக்கொண்டே உள்ளே போய்விட்டாள்.

நீங்கள் எல்லாரும் உங்கள் ஜாதகங்களுடன் இங்கே கட்டாயம் வந்து, ஜோஸியர் ஜகந்நாதரிடம் காண்பித்துப் பலன்களைத் தெரிந்து போங்கள்.

என்ன இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா? சரி நானே சொல்லிவிடுகிறேன். நான் 'என் சிநேகிதனுடையது' என்று காண்பித்த மூன்றும் ஜாதகம் கலக்டர் உத்தியோகத்தில் இருந்து தனது எழுபதாம் பிராயத்தில் சென்ற வருடம் காலம் சென்ற என தாத்தாவின் ஜாதகம்தான்!! ஜோஸியர் ஜகந்நாதருக்கு நான் நான்கணா சேர்த்துக் கொடுத்தது நியாயம் தானே?

தேவலோகத் தபால்

("ராஜாமணி")

1

க்ஷீராப்தி

க்ஷேமம். 111௵ வைகாசி 17.

என் அன்பார்ந்த மதனி பார்வதி தேவிக்கு,

அண்ணி லக்ஷ்மி எழுதிக்கொண்ட லிகிதம். இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடம் நீ, அத்திம்பேர், நந்திதேவர், மற்றும் குழந்தைகள் முதலியோருடைய க்ஷேமத்திற்கு கடிதம் எழுதவும். இங்கு அவர் செய்யும் காரியங்கள் ஒன்றும் சரியாக இல்லை. திடீரென்று எங்கெங்கோ சொல்லிக்கூடக் கொள்ளாமல் போய்விடுகிறார். திரும்பி வரும்போது 'காலை வலிக்கிறது, கையை வலிக்கிறது'-என்று சதா சர்வகாலமும் ஆதிசேஷனின்மேல் படுத்துக் கொண்டிருக்கிறார். எனக்கு வர வர இவருடன் ரொம்ப வெறுத்துப் போய் விட்டது. 'காலைப் பிடித்து விடு, கையைப் பிடித்து விடு—' என்று காலை முதல் இரவு வரை என்னைத் தொந்தரவு செய்தால் யாருக்குத்தான் வெறுப்பு வராது? என்னமோ! நாம் பெண் ஜன்மம் எடுத்துவிட்டோம். இனிமேல் அவர்களைக் கண்டிக்க நமக்கு வாயேது?

ஏதோ வந்தோம், கல்யாணம் செய்து கொண்டோம், பெண்ணுடன் தன் வீடு போய்ச் சேர்ந்து குடித்தனம் நடத்தினோமென்றில்லை! சதா சர்வகாலமும் மாமனார் வீட்டில் இருந்துகொண்டு குட்டிச்சுவராக்குகிறார். அவர் என்னை மணம் செய்து கொண்டதும் போதும்! இந்த க்ஷீராப்தியின் பாடு ஆபத்துதான்!

ஏதோ நம் வீடு என்ற மட்டில் சரியாய்ப் போய் விடுகிறது. இப்படி மாப்பிள்ளைகள், கங்கணம் கட்டிக்கொண்டு மாமனார் வீட்டில் 'டிகாணா'—போடுவதென்றால், மறுநாளே மாமனார் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு வெளியேற வேண்டியதுதான்! என்னமோ மதனி! நான் படும் கஷ்டங்களை இங்கு எழுத சாத்தியமில்லை. உன் பதிலை சீக்கிரம் எதிர்பார்க்கும்,

உன் பிரியமுள்ள அண்ணி

லக்ஷ்மிதேவி.

2

க்ஷேமம். கைலாசம்,

111௵ ஆனி, 2.

அண்ணி லக்ஷ்மிக்கு,

பார்வதி அநேக நமஸ்காரம். உன் லிகிதம் கிடைத்தது. பார்த்துக் கொண்டேன். உன் கடிதத்தை கொண்டு வந்த கருடாழ்வார் கொஞ்சமும் விவேகம் தெரியாதவன்போலிருக்கிறது; மத்தியானம் அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நான் பரிமாறிக் கொண்டிருந்தேன். யாரையும் கேளாமல் உள்ளே வந்து, கடிதத்தைக் கொடுத்து விட்டு வெளியே போய் விட்டான். அவர் 'அது என்ன?'—என்று விசாரித்தார். எனக்கு ரொம்ப பயமாய் விட்டது! அந்த எளவு மூன்றும் கண் இருக்கிறதே, அதற்குத்தான் எனக்கு ரொம்ப பயம்.

நேற்றுத்தான்! அவர் வெளித் தாழ்வாரத்தில் தூங்கிக் கொண்டிருந்தார். அந்த நெற்றிக்கண் என்னமாய்த்தான் இருக்கிறது, பார்ப்போமென்று மெல்ல பக்கத்தில் போனேன். திடீரென்று விழித்துக் கொண்டார்!

சமாளித்துக்கொண்டு வந்த வழியே விலகிப் போய்விட்டேன்.

என்னைவிட உன் பாடு ரொம்பத் தேவலை. அவர் மாமனார் வீட்டில் கௌரவமாய் இருந்து நடந்துகொள்ள கொடுத்து வைக்கவில்லை. காலையில் எழுந்தவுடன் கையில் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு பிச்சாடனம் செய்யப் புறப்பட்டு விடுகிறார். நாணுக்காய் இருக்கத் தெரியவில்லை. இது விஷயத்தில் நீ ரொம்பக் கொடுத்து வைத்தவள்தான்! சதா சாம்பலைப் பூசிக்கொண்டு, கழுத்திலும் உடம்பிலும் பாம்புகளைச் சுற்றிக்கொண்டு திரிகிறார். ஏதோ இரண்டு நிமிஷம் என்னோடு பிரியமாய்ப் பேசினாரென்றில்லை. மூக்குக்குமேல் கோபம் வந்து விடுகிறது. அப்பா சென்ற தீபாவளிக்கு அவருக்கு இரண்டு ஜோடி பட்டுக்கரை வேஷ்டி வாங்கிக் கொடுத்தார். அவர் அதைக் கையால் கூடத் தொடவில்லை. புலித்தோலை உடுத்துக்கொண்டு அவர் பாட்டுக்குப் புறப்பட்டு விட்டார்!

இந்த வாண்டுப்பயல் கணபதியும், மணியும் ஆத்தில் செய்கிற தொந்தரவு சகிக்க முடியவில்லை. வேறு விசேஷமில்லை.

உன் பிரியமுள்ள,

பார்வதி.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

பாரத புத்திரி

அல்லது

அனாதைகள் சேவை.

(அதியுன்னத சமூக சீர்திருத்த தமிழ்பேசும் படம்)

கோலாப்பூர் பிரதிபா ஸ்டூடியோவில்

* * தயாராகின்றது. * *

தயாரிப்பவர்கள்:—Super Pictures Syndicate, Devakottah.

சத்தியசீலன்
அல்லது
தந்தைசொல் மறவாத்தனயன்

பயங்கரமான கத்திச் சண்டைகள்
குடல் நடுங்கும் குதிரைச் சவாரிகள்
உடல் மயிர் சிலிர்க்கும் குத்துச் சண்டைகள்
இன்னும் திடுக்கிடக் கூடிய அநேக
பயங்கரச் சம்பவங்களுடன்
தோன்றப்போகும் தமிழ் சமூகப் படம்.

நடிக ரத்தினங்கள்.	நடிக ரத்தினங்கள்.
M. K. தியாகராஜ பாகவதர்	**M. S. தேவசேனா**
M. L. நாராயண ராவ்	K. R. காந்தாமணி
எம். பி. மோஹன்	சி. பத்மாவதி
முகவை–ராஜமாணிக்கம்	கே. கெ. மீனலோசனி
எம். ஆர். சாமி	ஹம்ஸத்துவனி
பி. எஸ். காசிலிங்கம்	டி. வி. காந்திமதி பாய்
டி. எ. சோமசுந்திரம்	எம். வி. முத்துராமன்

டைரக்டர்:— B. சம்பத்குமார்.

தயாராகுமிடம் — வாடியா மூவிடோன், பம்பாய்.

For Booking apply to:-

தியாகராஜ டாக்கீஸ், திருச்சி.



ஜன்னிப் பிதற்றல்

('வசீகரன்.')

இரவு பதினொன்று அல்லது பதினொன்றரை மணியிருக்கலாம். அன்று பௌர்ணமியாதலால் களங்கமற்ற நீலவானத்தில் பூர்ணசந்திரன் விளங்கி காதலர்களுக்குக் குதூகலத்தையும், காதலைப் பிரிந்திருப்பவர்களுக்கும், காமுகர்களுக்கும் கடுந்துயரையும் அளித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வீதி அமைதியாக இருந்தது.

அந்த வீதியில் ஒரு பெரியமாளிகை. அந்த மாளிகையிலே ஒரு விசாலமான அறை. அந்த அறையில் ஒரு உயர்ந்த கட்டில் போடப்பட்டிருந்தது. அந்த கட்டிலின்மேல் ஒரு சுந்தரவதனி படுத்திருந்தாள். அவளுக்குப் பதினாறு அல்லது பதினேழு வயதுக்கு மேலிருக்காது. அவளுடைய கேசங்கள் கலைந்திருந்தன. அவளுடைய ஆடைகளில் அழுக்குப் படிந்திருந்தது. அவளுடைய தேகம் மெலிந்திருந்தது. இவ்வாறிருந்த போதிலும் அவளுடைய மாசு மருவற்ற முகம் கொஞ்சங்கூட வாடாது அதனுடைய இயற்கையான பிரிக்க முடியாத தேஜசுடன் விளங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய சுருசுருப்பான கூரிய கருவிழிகள் கொஞ்சங்கூட ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பாமல் இங்கும் அங்கும் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தன. அப்பொழுது அவளிருந்த கோலம் அவளை யொரு நோயாளி யென்று தெளிவு படுத்திக் காட்டியது.

அவளருகே ஒரு வாலிபனும் ஒரு யுவதியும் நின்று கொண்டிருந்தார்கள். வாலிபனுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதிருக்கலாம். யுவதிக்கு பத்தொன்பது அல்லது இருபது வயதிருக்கும். அவள் அந்த வாலிபரின் மனைவி போல் தோன்றினாள். அவர்களிருவர் முகத்திலும் துக்கம் தாண்டவமாடியது. அவர்களுடைய விழிகள் மிகுந்த கவலையோடும், சிரத்தையோடும் அப்பெண்மணியைக் கவனித்துக் கொண்டிருந்தன.

பெண்மணி அப்படியும் இப்படியும் புரண்டாள். எதையோ நினைத்தாள். பைத்தியம் பிடித்தவள்போல் கல கலவென்று கை கொட்டிச் சிரித்தாள். "கண்ணா! என்னை ஏமாற்றப் பார்க்கி

ருயா! ஹூம், ஹூம், நான் உன்னை விட்டு விடுவேனு! வா! வா! பேசாமல் என்னிடம் வந்து விடு. இல்லாவிட்டால்.......?"

(துயாத்துடன் கூடிய பெருமூச்சு)

"இல்லாவிட்டால் நான் உன்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்து விடுவேன். ஏன் சிரிக்கிறுய்? என்னுல் எழுந்து நடக்க முடியாதென்று! இதோ எழுந்திருக்கப் போகிறேன். ஆம். அப்புறம் உன்னைப் பிடித்து விடுவேன். பேசாமல் வந்துவிடு" (அசட்டுச் சிரிப்பு)

* * *

"கண்ணு! இது உனக்குத் தர்மமா? என்னை இச் சமயத்தில் கைவிடலாமோ! மன்னு! நான் உனக்காகவே வாழ்கிறேன். வா. வா. உனது மோகன வடிவை என் முன் கொண்டுவா. உனது புன்னகை பூத்த முகத்தை என்னருகே கொண்டுவா. உன்னுடைய திரண்ட தோள்களை என் சமீபத்தில் கொண்டு வா. நான் அவைகளின் அழகை மற்ருெரு முறை பார்க்கிறேன்."

* * *

"கண்ணு! உன் மனமென்ன இரும்பா, கல்லா, மரமா! ஏன் பேசாதிருக்கிறுய்? ஆ! தெரிந்து கொண்டேன் உன் குறை; "பிராமண ரல்லாதானுகிய நான் எவ்வாறு உன் காதலுக்கு உட்பட முடியும்?" என்று கூறி என்னைத் தட்டிக் கழித்து விடலாம் என்று நினைக்கிறுய் போலும்! உம். உம் உன்னை விடேன். ஆம். அன்று நாம் செய்துகொண்ட உடன்படிக்கை; அதை மறந்து விடாதே."

* * *

இவ்வாறு அப் பெண்மணி அவளெதிரே தோற்ற மளித்துக்கொண்டிருந்த சுவற்றை உற்று நோக்கி நீண்ட நேரம் பிதற்றிக் கொண்டிருந்தாள். அவளுடைய காதலன் உருவம் அவள் புறக் கண்களின் முன் தோன்றி அவளுக்குக் காக்ஷி யளித்துக் கொண்டிருந்தது. அவ்வாறு தோன்றி காக்ஷி யளித்துக் கொண்டிருந்த அந்த உருவம் பொய்மையான தென்றும், தனது காதலன் மீது கொண்டிருக்கும் ஏக்கத்தால் தனது மனக்கண்களில் தோன்றும் பொய்யுருவென்றும், அவள் உணரவில்லை. ஆதலால் தான் அவளுடைய காதலன் அங்கு நிற்பது போலவும், அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்காது அவன் மௌனம் சாதித்துக்கொண்டு இருப்பது போலவும் எண்ணி நாம் முற்கூறியவாறு பிதற்றிக் கொண்டிருந்தாள்.

பொய்யுருவம் பதில் பேசாதிருந்ததைக் கண்ட அப் பெண்மணிக்கு அழுகை வந்து விட்டது.

"கண்ணு! என்மீது உனக்கென்ன கோபம்? என்னேடு பேசமாட்டாயா? ஏன், நான் உனக்கேதாவது அபசாரம் செய்து விட்டேனே! அப்படியானுல் கண்ணு, அதை மறந்து என்னை மன்னித்து விடு. அந்தோ! அதற்காக என்னை இவ்வளவு பெரிய நரகவேதனையை அனுபவிக்கும்படிச் செய்வது நியாயமா? கண்ணு, வேண்டாம், வேண்டாம். ஏன் நிற்கிறுய்! வா, வா." (கைகளை நீட்டுகிறுள்.)

* * *

"கண்ணு, இன்னும் ஏன் நிற்கிறுய்? ஏன் என்னேடு பேசமாட்டேனென்கிறுய்? ஒரு சில வஞ்சகர்கள்போல் என்னைக் காதலிப்பதாய் சொல்லி கைவிட்டு விட்டாயோ!............ஆ! என்ன பேசி விட்டேன்! கண்ணு, என்னை க்ஷமித்து விடு. எனது மூடப் பேச்சுகளை மனதில் வைக்காதே. கண்ணு! உன் வாயைத் திறந்து என்னை மன்னித்து விட்டதாக ஒரு வார்த்தை சொல்லேன்."

* * *

"என் ஆசை நேசனே, இதோ பார்! நீ என்னேடு பேசாவிட்டால் என்னுயிரை இந்த நிமிஷத்திலேயே போக்கி விடுவேன். உன்மீது நான் கொண்டிருக்கும் புனிதமான காதலுக்கு இதைக்கூட அர்ப்பணம் செய்யாவிட்டால் என் ஜென்மத்தின் பயன்தான் என்ன!"

பேதைப் பெண்மணி இவ்வாறு பற்பல கூறிப் பிதற்றினாள். அந்த பொய்யுருவம் பதில் பேசவில்லை. அழுதழுது அவள் கன்னங்கள் சிவந்து விட்டன. அவள் உள்ளத்திலிருந்த சிறிது நம்பிக்கையும் போய்விட்டது. மூர்ச்சையுற்று அந்தக் கட்டிலிலேயே சாய்ந்தாள்.

பெண்மணி மூர்ச்சையானதைக் கண்டதும் அவளருகே நின்று கொண்டிருந்த யுவதியும், யுவகனும் திடுக்கிட்டனர். யுவதி பெண்மணியை அணைத்துக்கொண்டு "கண்ணே! என்னைப் பாரம்மா! ஒரு வார்த்தை சொல்லம்மா!" என்று கெஞ்சினாள். யுவகன் "தங்காய்! என்னம்மணி! என்னோடு பேசமாட்டாயா? ஏன் நான் உன்னுடைய மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வித்து வைக்கவில்லையென்றா? அம்மா, உறுதியாய்—சத்தியமாய்—சொல்லுகிறேன். இனி ஒரு நிமிஷமும் தாமதிக்க மாட்டேன். உன்னை உனதிஷ்டம்போல் கண்ணனுக்கே மணஞ்செய்து கொடுக்கிறேனம்மா. அம்மா! என்மீது கிருபை கூர்ந்து என்னைப் பார்த்து ஒருவார்த்தை பேசம்மா" என்று நாத்தழுதழுக்கச் சிறு குழந்தைபோல் அலறினான்.

ஐந்து நிமிஷமாயிற்று. பெண்மணி மெல்ல கண்ணைத் திறந்தாள்.

"அம்மா, உனக்கு உடம்புக்கு என்ன செய்கிறது? ஏனம்மா என்னென்னவோ உளறினாய்!" என்று வாஞ்சையோடு வினவினாள் யுவதி.

"அந்த விஷயம் வேறு. அதை நான் அப்புறம் சொல்கிறேன்" என்று கூறினான் இளைஞன்.

அதே சமயம் அவர்களிருந்த அந்த அறையை நோக்கி ஒரு வயோதிகர் வந்தார். அவருக்கு வயது ஐம்பதிருக்கும். அவர் நெற்றியை அலங்கரித்துக் கொண்டிருந்த திருநாமமும், மார்பை அலங்கரித்துக் கொண்டிருந்த துளவமணி மாலைகளும், தலையை அலங்கரித்துக் கொண்டிருந்த உச்சிக்குடுமியும், அவரையொரு பழுத்த வைதீகர் என்பதைக் காட்டியது. அவரைக் கண்டதும் இளைஞன் "தந்தையே! வா வா சந்திராவின் நிலை மோசமாகிக் கொண்டே வருகிறது. அவள்

சுய நினைவின்றி எதை எதையோ பிதற்றிக் கொண்டிருக்கிறாள். எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. டாக்டருக்கும் போன் செய்திருக்கிறேன். ஆனால் அவரால் சந்திராவைப் பிழைக்க வைக்க முடியாதென்று நினைக்கிறேன். அவள் உயிர் உங்கள் கையிலிருக்கிறது. நீங்கள் அவளை அவளிஷ்டப்படியே கண்ணனுக்கு மணம் செய்து கொடுக்க இசைந்தால் அவள் நிச்சயம் உயிர் பிழைத்து எழுந்து விடுவாள் என்று நம்புகிறேன்' என்று பணிவுடன் கூறினான்.

அதைக் கேட்டதும் வயோதிகரின் முகம் அகோரமாய் மாறியது. அவர் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. "அடேய்! என்ன சொன்னாய்? அந்த சூத்திரப்பயல் கண்ணனுக்கு சந்திராவை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமோ! நன்று, நன்று! சந்திரா கெட்டுப் போனதற்கு மூலகாரணம் நீதான். மகாநாடுகளுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும், சினிமா கொட்டகைகளுக்கும் அவளை அழைத்துச் சென்று அவள் புத்தியைக் கெடுத்து விட்டாய். அம்மட்டோடல்லாமல் அவளை கண்ணன் என்ற அந்த அயோக்கிய சூத்திரப் பையனுக்கு அறி

முகம் செய்து வைத்தாய். அவ்வளவோடு தில்லாமல் இப்பொழுது சந்திராவை அவனுக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டும்! அப்பொழுதுதான் அவள் பிழைப்பாளென்று கூறுகிருய்! வெட்கம், வெட்கம். உயர்ந்த உன்னத குலத்தில் பிறந்த பிராமணனுகிய நான் ஒரு சூத்திரனுக்கு எனது மகளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமோ! பேஷ், பேஷ். வேறு எவனுவது இவ்வாறு கூறியிருந்தால் அவன் நாக்கை அறுத்திருப்பேன். அப்படி ஒரு சூத்திரனை "விவாகம் செய்து கொள்வேன்" என்று பிடிவாதம் செய்யும் அவள் இறந்துதான் போகட்டுமே. அதைப் பற்றி உனக்கேன் கவலை?" என்று கர்ஜனை செய்தார்.

"அப்பா, என்னை வேண்டுமானல் திட்டுங்கள். அவர் குற்றமற்றவர். அவரை "சூத்திரன்" என்று அழைக்கிறீர்கள். அந்தோ! சூத்திரன்(சூத்திரன்-தேவடியாள் மகன்) என்ன கொடுமையான பெயர்! அந்த இழி சொல்லை இன்னெருமுறை உச்சரிக்காதீர்கள். எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது" என்று மெல்லிய குரலில் கூறினள் கோதை சந்திரா.

யுவனின் வார்த்தைகளால் கோபமடைந்திருந்த வயோதிகர் சந்திராவின் வார்த்தைகளால் விவரித்துக் கூற முடியாத கோபத்தை யடைந்தார். எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது போலிருந்து அவருக்கு. அந்த ஆவேசத்தால் அவர் பிசாசு போலாகி விட்டார். பக்கத்திலிருந்த கழியை எடுத்துக்கொண்டு முன் பின் யோசியாது பெண்மணி சந்திராவைத் தாக்க அக்கழியை உயர்த்தினர்.

வாலிபரும் அவர் மனைவியும் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் ஆவேசத்தோடு துடித்துக் கொண்டிருந்த அவர் கரத்தைப் பிடித்து நிறுத்தினர்கள்.

"என்ன இருந்தாலும் உங்களுக்கு இந்த புத்தி கூடாது. சற்று கோத்திறத்துள் குழந்தையை கொன்றுவிடப் பார்த்தீர்களே; உங்கள் வேதம் மத வைராக்கியத்தின் போரால் இந்த சண்டாளத்தொழிலைத் தான் செய்யச் சொல்லுகிறது போலும்!" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் வாலிபரின் மனைவி.

வைதிக ஆச்சாரியாரின் எண்சாணுடம்பும் ஒரு சாணுகக் குறுகி விட்டது.

"அப்பா, நீங்கள் என்னைக் கொன்று போடுவதை நான் ஆவலோடு வரவேற்கிறேன். தங்கள் கையால் மாள்வதற்கு நான் எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். ஆனல் அந்த சூத்திரன் என்ற பதத்தை மட்டும் மற்றெரு முறை பிரயோகிக்காதீர்கள். சூத்திரர் என்போருக்கும் நமக்கும் எல்லா விஷயங்களிலும் ஒற்றுமை இருக்கிறது. சூத்திருடைய அங்கங்களும் நம்முடைய அங்கங்களும் ஒரே விதமாகத்தா னிருக்கின்றன. அவர்களுடைய ரத்தமும் நம்முடைய ரத்தமும் ஒரே நிறமாகத்தா னிருக்கின்றன. ஆண்டவன் கொடுத்த பகுத்தறிவு அவர்களுக்கும் இருக்கிறது. நமக்கும் இருக்கிறது. இவ்வித நமக்குள் எவ்வாறு உயர்வு தாழ்வு இருக்க முடியும்? அருமைத் தந்தையே! ஒரு நிமிஷம் சிந்தனை செய்து பாருங்கள். பிறப்பினல் மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லை. அறிவினுலும், குணத்தினுலுமே மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு உண்டு. இன்றைய தினம் "சூத்திரன்" என்று நாம் கேவலமாக அழைத்தவரும் இனத்தவர் பலர் குணத்திலும் அறிவிலும் சிறந்து இணையின்றிப் பிரகாசிப்பதைக் காண்கின்ருேம். "ஜாதியில் உயர்ந்தவர்கள்" என்று கூறிப் பெருமை பாராட்டிக்கொள்ளும் நாம் நம் மதத்தில் பலர் குடிகாரர்களாகவும், கொலைகாரர்களாகவும், நயவஞ்சகர்களாகவும், தாசி லோலர்களாகவும், நன்றி கெட்டவர்களாகவும் இருந்து வருவதை இன்றைய தினமும் கண்கூடாகக் காணுகின்ருேம்.

இந்த இரு வகுப்பினருள் மேன்மையான குலத்தைச் சேர்ந்தவர்கள் யார்? குடிகாரர்களும்—நயவஞ்சகர்களும்—நன்றி கெட்டவர்களும்—தாசிப் பிரியர்களுமா?"

என்று ஆக்ரோஷத்தோடு கேட்டாள் சந்திரா.

ஆச்சாரியார் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக அவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்குள் அந்த அறையினுள் யாரோ நடந்துவரும் சப்தம் கேட்டு அவர்கள் சம்பாஷணை முற்றுப் பெற்றது. டாக்டர் வந்து சந்திராவைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "குழந்தைக்கு ஜன்னி பிறந்து விட்டது. இனி என்ன சிகிச்சை செய்தாலும் பிழைப்பதற்கில்லை. கடைசிக் காலத்தில் குழந்தை விரும்பும் பண்டங்களை வாங்கிக் கொடுத்து திருப்தி செய்யுங்கள். குழந்தை மன அமைதியுடனாவது சாகட்டும்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஜன்னியினால் பீடிக்கப்பட்டு பிதற்றியபோதுகூட அவள் அவ்வளவு நுணுக்கமாகப் பேசியது ஆச்சாரியாருக்கு வியப்பாயிருந்தது. அவர் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே கோவிலுக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு வெளியே போனார்.

* * *

அன்றையதினம் ஏகாதசி. கோவிலில் பெருத்த உற்சவம். ஆதலால் ஆச்சாரியார் காலை ஆறுமணிக்குத் தான் திரும்பி வருவாரென்பது வாலிபனுக்குத் தெரியும். ஆதலால் அவன் ஒரு யோசனை செய்தான். அதை மெல்ல அந்த யுவதியிடம் கூறினான். அவளும் அவனது யோசனையை அங்கீகரித்து அவனுடைய யோசனைக்காகப் புன்னகை செய்தாள். யுவன் எங்கேயோ போய் சில நிமிஷங்களில் மற்றொரு யுவனோடு திரும்பி வந்தான். அவர்களிருவரும் சந்திராவின் கட்டிலினருகே சென்றார்கள்.

"அம்மா சந்திரா, கண்ணன் வந்திருக்கிறான். இதே பாரம்மா!" என்றான் வாலிபன்.

சிறிது கண்களை மூடிக்கொண்டிருந்த சந்திரா "கண்ணன்" என்ற வார்த்தையைக் கேட்டதும் திகைப்பும் வியப்பும் ஒருங்கே கொண்டவளாய்க் கண்களைத் திறந்து எதிரே நோக்கினாள். மோகன வடிவுடன் அளவிட்டுச் சொல்ல முடியாத ஆனந்தத்தை அடைந்தது. அதனால் அவள் தேகத்தில் ஒரு புதுபலம் உண்டாகியது. காதலின் சக்தியை என்னென்று சொல்லுவது! அக்காதல் சக்தியால் தூண்டப்பட்ட அவள், படுக்கையிலிருந்து எழுந்து நிமிர்ந்து உட்காரக் கூட முடியாதிருந்த அந்த ஸ்திதியில் கண்ணனைக் கண்டதும் கட்டிலைவிட்டுக் குதித்தோடி அவனை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டாள். கண்ணன் அவளுடைய மலர்போன்ற கரங்களைப் பிடித்து அவளைத் தன்மீது சாய்த்துக் கொண்டான்.

"கண்ணா! இப்பொழுதுதான் உன் சித்தம் இரங்கியதோ" என்றாள் சந்திரா.

"கண்ணே! நான் என்ன செய்வேன்! நமது நாட்டில் நீண்ட நாட்களாகக் குடிகொண்டிருக்கும் குருட்டுப் பழக்கமாகிய உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற ஜாதி பேதமன்றோ நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது" என்றான் கண்ணன்.

"அந்த ஜாதிப்பேயை உதறித் தள்ளியவர்களை அது என்ன செய்ய முடியும்?' என்றாள் சந்திரா.

கண்ணன் ஏதோ சொல்ல முயன்றான். "உம். உம். சீக்கிரம். கார் வெளியே காத்துக் கொண்டிருக்கிறது" என்று துரிதப்படுத்தினான் வாலிபன்.

"அண்ணா, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனது காதலரை—பிராண காந்தரை—என்னைவிட்டு போகச் சொல்லுகிறீர்களா?" என்று மங்கிய குரலில் கேட்டாள் சந்திரா.

"அம்மா, உங்களிருவரையும் என்றுமே பிரியாதிருக்கும்படி நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். வெளியே கார் நிற்கிறது. நீங்களிருவரும் இங்கிருந்து உடன் சென்று அங்கு உங்கள் விவாகத்தைப் பதிவு செய்துகொண்டு சுகமே வாழுங்கள். இதோ உங்கள் பிரயாணச் செலவிற்காக

இரண்டாயிர ரூபாய்க்கு செக்கு ஒன்று கண்ணனிடம் கொடுத்திருக்கிறேன்'' என்றான் வாலிபன்.

சந்திராவும் புன்முறுவலுடன் கண்ணன் மீது சாய்ந்தவாறே அவனுடைய கரங்களைப் பலமாகப் பற்றிக்கொண்டாள். கண்ணன் அவளை மெல்ல நடத்திச் சென்று காரிலேற்றினான். கார் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டது.

“அண்ணா! குழந்தை சந்திராவை உங்களிடம் ஒப்புவித்திருக்கிறோம். கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் யுவதி.

“அம்மா சந்திரா, எங்களை எண்ணி வருந்தாதே. உடம்பை கவனமாகப் பார்த்துக்கொள். அடிக்கடி ஆபீஸ் விலாசத்திற்குக் கடிதங்கள் போடு'' என்றான் யுவன்.

சந்திரா நன்றிப் பெருக்கோடு இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளுடைய விழிகளில் பக்தியும், மரியாதையும் பிரகாசித்தன.

* * *

கோவிலுக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டுச் சென்ற ஆச்சாரியார் கோவிலுக்குச் சென்றார். அவருடைய மனம் பக்தியிற் செல்லவேயில்லை. சந்திரா ஜன்னியிற் பிதற்றிய பிதற்றல்களில் விசேஷப் பொருள் பொதிந்திருப்பதை அவர் உணர்ந்தார். அதைப்பற்றியே எண்ணி நெடுநேரம் சிந்தனை செய்தார். அவர் மனமே ஒரு புது விதமாக மாறிவிட்டது. காலை ஆறுமணிக்கு வீடுவந்து சேர்ந்தார். சந்திராவிடம் சென்று தன்னுடைய அறியாமைக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று விரும்பி அவள் கட்டிலினருகே சென்றார். அவள் காணப்படவில்லை. அவர் மனம் என்னென்னவோ எண்ணிற்று. “சீனு! சீனு!”. என்று அழைத்தார். அந்த வாலிபன் அவர் முன் வந்து நின்றான்.

“சந்திரா எங்கே!'' என்றார் ஆச்சாரியார்.

“நீங்கள் உங்களுடைய ராக்ஷஸப் பிடியான ஜாதி வெறியால் சந்திராவை கொன்று விட்டீர்கள். ஆனால் நான் என்னுடைய “மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லை'' என்ற கொள்கையால் சந்திராவை உயிர்ப்பித்தேன். அவள் இந்நேரம் இரங்கூனில் கண்ணனுடன் சுகமேயிருப்பாள்'' என்றான் சீனிவாசன் என்ற அந்த வாலிபன்.

ஆச்சாரியார் தலை சுழன்றது. சந்திராவின் ஞாபகம் அவர் மனதில் ஊடுருவிப் பாய்ந்தது. சந்திராவை இனி எப்பொழுதும் பார்க்க முடியாதே என்றெண்ணி பெருமூச்சு விட்டார். அவர் கண்களில் கண்ணீர் நிறைந்தது. “சீனு! நான் கொடிய பாதகன். என்னை மன்னித்து விடு. சந்திராவை வரவழை. அவள் கண்ணனையே மணந்து கொள்ளட்டும்'' என்று கெஞ்சினார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதிகல்வி—அன்பு
நிறைய உடையோர் மேலோர்.

—பாரதியார்.

ராயல் டாக்கீஸ் டிஸ்டிரிபியூட்டர்ஸாரின்
மகத்தான வெளியீடு.

T. P. ராஜலக்ஷ்மி	வித்வான்-சீனிவாசன்
செருகளத்தூர்-சாமா	M. G. தண்டபாணி

நடித்த

பாமா பரிணயம்

(மஹாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஓர் உயரிய கதை)

விதூஷகன் R. நடேச ஐயர்	Miss. S. D. லக்ஷ்மி
M. R. துரைராஜ்	S. H. ராஜாமணி
K. S. ஹரிஹரன்	K. ரங்கநாயகி
T. R. நடராஜன்	M. A. ராஜாமணி

முதலியவர்களும் நடிக்கின்றனர்.

எமது அடுத்த மகத்தான படத்தை எதிர்பாருங்கள்!

K. அஸ்வத்தம்மா	வித்வான்-சீனிவாசன்
செருகளத்தூர்-சாமா	முதலியோர் நடித்த

பில்வமங்கல் அல்லது சிந்தாமணி

தயாராயிருக்கும் படங்கள் :—

கோவலன் - - T. P. ராஜலக்ஷ்மி, V. A. செல்லப்பா நடித்தது.
லலிதாங்கி - - ,, ,, ,,
தூக்கு தூக்கி- - K. T. ருக்மணி, C. V. V. பந்துலு நடித்தது.
கிருஷ்ண-அர்ஜுன பாப்பா, T A. நாகசாமி பாகவதர்.

விலாசம் :—

ராயல் டாக்கிஸ் டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை.

தயாராகிவிட்டது!

?

ஓரியண்டல்ஸ்

நளாயினி

(மகத்தான புராண புண்ணிய சரிதை)

கீழ்க்கண்ட ஊர்களில் வரும் நன்னாளை எதிர்பாருங்கள் !!

மதராஸ் - -
மதுரை - -
திருச்சி - -
கோவை - -
கும்பகோணம் -
திருவாரூர் - -
ஊர்கம் - -
புதுக்கோட்டை -
வேலூர் - -

வித்வான்-சி. எஸ். செல்வரத்னம் - -
மிஸ்டர் பி. எஸ். கோவிந்தராஜ் - -
,, ஏ. கே. வரதராஜன் - -
விதூஷகன்-ஓ. கருப்பையா - -
நடிகரத்னம்-மிஸ். சி. என். நீலாவதி -
மிஸ். பி. எஸ். கிருஷ்ணமணி - -
,, டி. பி. லக்ஷிமிகாந்தம் - -
முதலியோர் நடித்தது.

வசந்த ராவ், ஏ. பெயின்டர் டைரக்ட் செய்தது.

கோலாப்பூர் தயாரிப்பு.

விவரங்களுக்கு,

ஓரியண்டல் சௌன்ட் பிக்சர்ஸ்,

லிமிடெட், திருப்பூர்.

("இரஸிகன்.")

கலாரஸிகர்களே! நான் உங்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரஞ் சொல்லப் போகிறேன். 'அது என்ன! என்ன!' என்று ஆவலுடன் கேட்கிறீர்கள். இதோ கூறி விடுகிறேன். சென்னைமாநகரில் 'சினிமா விமர்சகர் சங்கம்' (Film Critic's Association) என்று ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது எனச் சொன்னால் நீங்கள் வியப்படையக் கூடாது. இச்சங்கத்தை ஏற்படுத்தும் முயற்சி முதன் முதலாக 'மணிக் கொடி' கோஷ்டியாரால் ஆரம்பிக்கப் பட்டது. ஒன்றிரண்டு கூட்டங்கள் நடை பெற்றன. பின்னர், என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை. மீண்டும், 'ஸில்வர் ஸ்கிரீன்' பிரமுகர்களால் இச் சங்கத்தின் ஆரம்பக் கூட்ட மொன்று நடத்தப்பட்டு, மேற்குறிப்பிட்ட பெயரோடு சங்கம் நிறுவப் பட்டது. சமீபத்தில் கோவையில் கூட, 'சினிமா ரஸிகர் சங்கம்' என்று ஒன்று ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். இவ்வித சங்கங்கள் ஏற்படுத்த வேண்டு மென்ற எண்ணமாயினும் நம்மவர்களுக்கு உதித்திருப்பதி லிருந்து, தமிழ்ப் படங்களுக்கு நல்ல கால மேற்பட்டிருக்கிற தென்று ஏற்படுகிற தல்லவா! தமிழ்ச் சினிமாக் கலையின் வளர்ச்சியை விரும்பும் கலாரஸிகர்க ளெல்லாம், இச் சங்கங்களை நல்வரவேற் பார்க ளென நம்புகிறேன்.

சென்ற மாதம் 21-ந் தேதியன்று சென்னை மவுண்ட் ரோட்டில் கூடிய 'சினிமா விமர்சகர் சங்க'த்தின் ஆரம்பக் கூட்டத்தில் பல விஷயங்கள் விவாதிக்கப் பட்டன. அதாவது முதலில், சங்கத்தின் பெயர் சினிமா இரஸிகர் சங்கம் என்றிருக்கலாமா அல்லது சினிமா விமர்சகர் சங்கம்



உலகப் பிரசித்திபெற்ற ஹாலிவுட் நடிகையான மிஸ். கிரேட்டா கார்போ "குவீன் கிறிஸ்டினா" என்ற படத்தில் ராணி கிறிஸ்டினாவாகத் தோன்றியதைக் கண்டு மகிழ்ந்திருப்பீர்கள். அத்தோற்றத்தை மேனாட்டுச் சித்திரக்காரர் ஒருவர் 'வியங்கிய சித்திர' (Caricature) மாகச் சித்திரித்திருக்கிறார்.

என்று வைக்கலாமா என்று சர்ச்சை செய்யப்பட்டது. சில பெரிய 'கிரிடிக்கு'கள் 'சினிமா விமர்சகர் சங்க' மென்றே பெயர் வைக்க வேண்டு மென்று பலமாக வாதித்தனர். 'இரண்டணா' கொடுத்து சினிமாவுக்குச் சென்று படம் பார்ப்பவனும் இரஸிகன் தான்; ஆதலால் சினிமா

இரஸிகர் சங்கம் என்று வைப்பதில் அர்த்தமில்லை; கௌரவமுமில்லை' என்று அவர்களால் எடுத்துக் கூறப்பட்டது. அவ்வாதத்தை ஒரு வகையில் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆயினும், இக் 'கிரிடிக்கு'களால் 'தரைப் பிரபு' 'தாராதிபதி' 'காலரி மகான்' என வருணிக்கப்படும் ஒருவன், ஒரு படத்தின் குண தோஷங்களை யறிந்து இரஸிக்கு மளவு கூட, ஒரு சில 'கிரிடிக்கு'களின் விசித்திர குதர்க்க மூளைக்கு ரஸனை புலப்படுவதில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. கடந்த வருஷம் நடந்த சென்னை சங்கீத மகாநாட்டைத் திறந்து

பூனா "பிரபாத் பிலிமிடோனின்" சிறந்த நடிகை ஸ்ரீமதி. சாந்தா ஆப்தே.

வைத்த மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள், ''சங்கீதத் துறையில் நான் மூன்றாம் வகுப்புப் பிரயாணியை ஒத்திருக்கிறேன். ஆயினும், சங்கீத வித்வான்கள் சங்கீதத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் நான் அதை நன்றாக அனுபவிக்கிறேன்'' என்று குறிப்பிட்டுப் பேசியதை இங்கு 'கிரிடிக்கு'களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது இந்த சினிமா விமர்சகர் சங்கத்தில் அங்கத்தினர்களாய்ச் சேருபவர்கள் எவ்வித தகுதியுடையவர்களாயிருக்க வேண்டுமென்ற விஷயம் பரிசிலனை செய்யப்பட்டது. சங்கத்தின் பெயரிலிருந்தே சினிமா படங்களை விமர்சனஞ் செய்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் மெம்பர்களாகச் சேர்க்கப்படலாம் என்பது தெளிவாக இருக்க, இதைப் பற்றி நீண்ட நேரம் பேசிக் குழப்பிக் கொண்டிருந்தனர் சிலர். கடைசியாக, பத்திரிகாலயத்தில் இருப்பவர்கள் எவரையும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது. இவ் விடத்தில் நாம் ஒன்று கவனிக்க வேண்டும். பொதுவாக, எவ் விஷயத்தையும் காய்தல் உவத்தல் இன்றி நடுவு நிலைமையாக ஆராய்ந்து குணதோஷங்களைக் கூறுவோரே விமர்சகர் என்று கூறுதற்குரியராவர். அது போன்றே சினிமா படங்களில் காணப்படும் குண தோஷங்களை யறிந்து விமர்சனம் எழுதுவோரே உண்மையான விமர்சகராவர்.

அவ்விதமின்றி, ஒரு சில தினசரிப் பத்திரிகை (ஆங்கிலப் பத்திரிகை)களும், சினிமா வாராப் பத்திரிகைகளும் வழ வழத்த பாஷையில் ஏதேதோ தமிழ்ப் படங்களைப் பற்றி எழுதுகின்றன. அவற்றைப் பார்க்கும்போது, 'இதுவும் ஒரு விமர்சனமா! கோமுட்டி சாட்சி கூறிய கதையைப்போலல்லவோ இருக்கிறது!' எனக் கருதவேண்டியிருக்கிறது. பிரசித்திபெற்ற—பொறுப்புள்ள—பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் இவைகள் எழுதுவதைக் காட்டிலும், நேற்று தோன்றிய சில பத்திரிகைகள் நல்ல முறையில் விமர்சனம் எழுதுகின்றன. விமர்சனம் எழுதுவதென்றால், பயன்படத்தக்க முறையில் யாவர்க்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

மேலும், எப் பொருளைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்கிறோமோ அதைக் குறித்து கூடுமானவரை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அது போலவே சினிமா பட விமர்சனமெழுதுவோர், கூடுமானவரை ஸ்டூடியோ அமைப்பு, படக்

தயாரிக்கும் முறை முதலியவைகளைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அப்போதுதான் சரியான முறையில் படங்களைப் பற்றி விமர்சனங்கள் எழுத முடியும்; படந் தயாரிப்போருக்கு உள்ள குறைகளை யெடுத்துக் கூறி யோசனை கூற இயலும். அவ்விதமில்லாது தற்போது பேனா பிடித்தவர்களெல்லாம் எழுதுவதென்று ஆரம்பித்து மனதிற்குத் தோன்றியபடி வரைவதனால் தான், படந் தயாரிப்போரும் அலட்சியஞ் செய்கிறார்கள்; விஷய மறிந்த பிறரும் நகையாடுகிறார்கள். எனவே, இன்னார் இனியார் என்ற பாரபக்ஷமான தன்மைக்கும், வகுப்புணர்ச்சிக்கும் இச் 'சினிமா விமர்சகர் சங்கத்'தார் இடங் கொடுக்கா திருப்பதோடு மேற்குறித்த விஷயங்களையுங் கவனித்து நடக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடி, விமர்சனம் எழுதுவது தமிழ்ப்படங்களைப்பற்றி மட்டுமா? மற்ற பாஷை படங்களைப் பற்றியுமா? என்ற கேள்வி பிறந்தது. இச் சங்கத்தின் முதல் வேலை ஆரம்ப நிலையிலுள்ள தமிழ்ப் படங்களைப்பற்றி விமர்சனம் எழுதி அவைகளைச் சீர்திருத்துவதாகவே இருக்க வேண்டும். ஹிந்தி, உருது, தெலுங்கு முதலிய பிற பாஷைப் படங்கள் சினிமாக் கலையில் வெகு தூரம் அபிவிருத்தியடைந்து விட்டன. வேண்டுமானால், அப் படங்களில் மிகச் சிறந்தவைகளைத் தமிழ்ப்படங்கள் உயர்ந்த முறையில் தயாரிக்கப் படுவதற்கு உதாரணமாக அல்லது ஆதர்சமாகக் காட்டி அவைகளைப் பின்பற்றச் செய்யலாம் என்பது என் கருத்து.

இவ் விஷயங்களி லெல்லாம் ஒருவித முடிவுக்கு வந்திருக்கும் சினிமா விமர்சகர் சங்கத்தார் சங்கத்துக்குச் சட்ட திட்டங்களை வரையறுக்கும்போது அவசியமான மாறுதலையும், திருத்தங்களையுஞ் செய்வார்களென்று நான் எதிர்பார்க்கிறேன்.

நிற்க, இச்சங்கத்துக்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் போது ஒரு சிலர்—முக்கியமாகத் தேசியவாதி என கருதப்படும் ஒருவர்—காட்டிய மனோபாவம் அத்தனை பாராட்டத் தக்கதா யில்லை என வருத்தத்தோடு கூறவேண்டி யிருக்கிறது. ஒரு பொதுநலக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமானால், ஒரு பொது சங்கத்தை நடத்த வேண்டுமானால், தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாது நேர்மையாக நடந்து கொள்பவர்களையே நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுத்து நியமிப்பது எவ்விடத்தும் அனுஷ்டிக்கும் முறை

*

வடநாட்டுச் சினிமா நட்சத்திரம்
ஸ்ரீமதி. உஷாதேவி.

என்பது யாவர்க்கும் தெரிந்ததே யாகும். இவ்வித நேரியமுறை இச்சங்க நிர்வாகஸ்தர் தேர்தலில் பின்பற்றப் படவில்லை. பூனைக்குத் தோழன் பாலுக்குக் காவலாக எப்படியிருக்க முடியும்? எப்படியோ, மற்ற சில சங்கங்களைப்போலல்லாது இச் சங்கம் உருப்பட வேண்டுமென்றும், உருப்படியான காரியங்களை இது செய்வதன் வாயிலாக, தமிழ்ச் சினிமா கலை உன்னத நிலையில் வளர்ச்சியடைய வேண்டுமென்றும் விரும்புகிறேன்.

பட்டினத்தார்

தமிழ்நாட்டில் புராணேதிகாசங்களைப் படமாக எடுப்பதில் பட முதலாளிகள் போட்டி போடுவதை நான் பல முறை கண்டித்திருக்கிறேன். அவ்விதப் போட்டி மனப்பான்மையிலும் ஏதோ ஒரு நன்மை விளைந்ததென்றால், அதற்கு வேல் பிக்சர்ஸார் தயாரித்த "பட்டினத்தார்" என்னும் புராணக் தமிழ்ப் படமொன்றே எனக் கூறலாம். ஒரு பக்திமான் சரிதையைச் சினிமாவில் வெற்றிகரமாக எடுப்பதென்றால் அது அவ்வளவு சாமானியமான காரியமன்று. வேல் பிக்சர்ஸார், இதற்கு முன் தயாரித்து வெளியிட்ட 'சீதாகலியாணம்' (தெலுங்கு) 'மார்கண்டேயர்" (தமிழ்) "கிருஷ்ணலீலா" (தெலுங்கு முதலிய படங்களில் கவனஞ் செலுத்தியிருப்பதைக் காட்டிலும், இப் "பட்டினத்தார்" படத்தைச் சிறந்த முறையில் தயாரிக்கும் விஷயத்தில் மிகவுங் கவனஞ் செலுத்தியிருக்கிறார்கள்.

ஒரு படம் உன்னத முறையில் வெளிவருவதற்கு மிகவும் இன்றியமையாததான சிறந்த கதையமைப்பு, நல்ல நடிகர்கள் தேர்வு, இனிமையான சங்கீதம், நயமான சம்பாஷணை முதலிய அம்சங்கள் கூடுமானவரை இப் படத்தில் பொருந்தியிருக்கின்றன.

இப்படத்தில் பட்டினத்தாராக வேடம் பூண்ட ஸ்ரீ. தண்டபாணி தேசிகர் சைவ உலகில் தேவார திருவாசகங்களைப் பண்முறையில் பாடுவதில் பேர் பெற்றவர். அவர் சினிமா உலகில் அடியெடுத்து வைத்தது இதுவே முதன்முறையாக இருந்தும், சிறிதும் ஆபாசத்துக்கிடமின்றித் தாம் பூண்ட பாத்திரத்திற்கேற்ப நடித்திருக்கிறார். பட்டினத்தார் தமது புதல்வனாக வந்த மருதவாணன் இறைவனே என்பதை யறியுமிடத்தில் அவர் இன்னும் சிறிது உணர்ச்சியை வெளிப்படுத்தி நடித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

ஸ்ரீமதி டி. ஆர். முத்துலட்சுமி பட்டினத்தாரின் மனைவி சிவகலையாக நடிக்கிறார். அவரது நடிப்பு என்ன காரணத்தாலோ அவ்வளவாகச் சோபிக்கவில்லை. இவர் நாடகத்துறையில் நல்ல பயிற்சி பெற்றவர். இதற்கு முன் "இந்திர சபா" போன்ற இரண்டொரு தமிழ்ப் படங்களில்கூட நடித்ததாகக் கேள்வி. அப்பேர்ப்பட்டவர் இப்படத்தில் சந்தர்ப்பத்திற்கேற்ப முகபாவத்தை மாற்றி நடிக்காதது வருந்தத்தக்கது. மற்றெங்கு இல்லாவிடினும் தான் அருமையாக வளர்த்த மகன் எல்லோரையும் விட்டுப் பிரிந்து போகிறான் எனக் கண்டதும் சிவகலையாக நடிக்கும் ஸ்ரீமதி முத்துலட்சுமி தம் நடிப்பை வெளிப்படுத்தவாவது முயன்றிருக்கலாம்.

இவரைக் காட்டிலும், பட்டினத்தாரின் தமக்கையாக நடித்த பெண்மணி திறமையாக நடிக்கிறார். பட்டினத்தாரின் தாய் ஞானகலையாக நடித்த பாட்டிக்கு வேஷப் பொருத்தம் மிகவும் நன்கு பொருந்தியிருக்கிறது.

"மார்கண்டேயர்" படத்தில் பிரசித்திபெற்ற ஸ்ரீ. வி. என். சுந்தரம், நடுவே "சந்திரஹாஸா" என்னும் படத்தில் நடித்து, தனது புகழுக்கு ஏற்படுத்திக் கொண்ட களங்கத்தை இப்படத்தின் வாயிலாகப் போக்கிக் கொண்டான் என்றால் மிகையாகாது. மருதவாணனாக நடிக்கும் அச்சிறுவன் கூடுமானவளவு கம்பீரமாகவும் திறமையாகவுமே நடித்திருக்கிறான்.

பத்திரகிரியார், பட்டினத்தாரின் காரியஸ்தர், வேலையாள் முதலிய சில்லறை வேடந் தரித்தவர்கள் கூட குற்றங் குறைகள் அவ்வளவாக இல்லாதபடி நடித்திருக்கிறார்கள்.

பெரும்பாலும், நமது தமிழ்ப்படங்களில் அவ்வப் பாத்திரத்திற்குரிய வேடப் பொருத்தம், கதை நிகழ்ந்த காலத்தையொட்டி நடை யுடை பாவனை, மற்ற விஷயங்கள் கவனிக்கப்படுவதேயில்லை. ஆனால், "பட்டினத்தார்" படத்தில் இவை மிக ஊக்கத்தோடு கவனிக்கப்பட்டிருக்கின்றன. பண்டைக்காலச் செட்டி வகுப்

பார் பழக்க வழக்கங்கள், தலைப்பாகை, உடை, ஆபரணம் முதலியவைகள் தத்ரூபமாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

இப் படத்தில் என்ன இருந்தாலும் கொஞ்சம் பாட்டு அதிகந்தான். 51 பாடல்கள் பாடப்பட்டன. என்ன இனிமையாகப் பாடினாலும் இவ்வளவு பாடல்களையும் கேட்டு அனுபவிப்பதற்குச் சிறிது பொறுமை இருக்கத்தான் வேண்டியிருக்கிறது. பட்டினத்தார் பாடல்களே இப்படத்திற்குப்போதும். அற்குமேல் வேண்டுமானால், சிவகலைக்கும், மருதவாணனுக்கும் இரண்டொரு பாடல்கள் கொடுத்திருக்கலாம். ஸ்ரீ தண்டபாணி தேசிகர் பாடுவதற்கு வேறு பாடல்களைக் கட்டிச் சேர்த்திருக்க வேண்டியதில்லை. ஸ்ரீ தண்டபாணி தேசிகர், ஸ்ரீமதி முத்துலட்சுமி, ஸ்ரீ சுந்தரம் ஆகியோரது பாடல்கள் கேட்கத் தக்கவை.

சம்பாஷணை எழுதிய திரு. வடிவேலு நாயகர் கூடுமான வரை திறமையாகவே அமைத்திருக்கிறார்.

திருவண்ணாமலை, காஞ்சி, திருக்கழுக்குன்றம், திருவிடை மருதூர், திருவொற்றியூர் முதலிய க்ஷேத்திரங்கள் போட்டோ எடுக்கப்பட்டு இப் படத்தில் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சோடிப்பு நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. பட்டினத்தாரின் தாய் இறந்தபோது அவரது பிரேதத்தை அடக்கஞ் செய்ய சுற்றத்தார் முயன்று கொண்டிருக்கையில் பட்டினத்தார் அவர்களைக் கல்லாலெறிந்து துரத்திவிட்டுத் தானாகவே வாய்க் கரிசியிட்டு, வாழைப்பட்டைகளால் அப் பிரேதத்தை மூடி பாட்டுப்பாடி தகனஞ் செய்கிறார் எனப் பட்டினத்தார் புராணத்தில் படித்ததாக எனக்கு ஞாபகம். ஆனால், இப் படத்தில் சுற்றத்தாருடனிருந்து தகனஞ் செய்வதாகக் காட்டப்பட்டிருக்கிறது.

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே," "வாளால் மகவரிந் தூட்ட வல்லே னல்லன்" ஆகிய பாடல்களைப் பாடும்போது அச்சம்பவங்கள் படமாகக் காட்டப்படுகின்றன. ஆனால், "கைப்பிடி நாயகன் தூங்கையிலே" என்ற பாட்டின் பொருளைப் படமெடுத்துக் காட்டியதுதான் மிகவும் அநுசிதமாயிருக்கிறது.

போடோகிராபி, ஸவுண்ட் டிகார்டிங் முதலியவை நன்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இப் படம் இதுவரை வெளிவந்த முதல்தா தமிழ்ப்படங்களில் ஒன்றாகும்.

ஸவுண்ட் ரிகார்டிங் இஞ்சினியர்
ஸ்ரீமதி. நாராயணன்.

"விஸ்வாமித்திரா"

இத் தமிழ்ப்பேசும் படம் சென்னை ஸவுண்ட் ஸிடியில் ஸ்ரீனிவாஸ ஸினிடோன் சொக்கக்காரர்களால் தயாரிக்கப்பட்டதாகும். இப் படத்தின் பிரத்தியேகக் காட்சி சென்றமாதம் 14-ந்தேதி காலை பாரகன் டாக்கீஸில் காட்டப்பட்டது. இப் படத்தைப் பார்த்த பிறகு, எனக்கு இப் படம் "விஸ்வாமித்திராவா? அல்லது அரிச்சந்திராவா?" என்ற சந்தேகம் உண்டாய் விட்டது. விஸ்வாமித்திரர் சரித்திரம் சினிமாவுக் கேற்றதல்ல என்ற என் அபிப்பிராயமே, இப் படத்

தைப் பார்த்தபிறகும் ஊர்ஜித மடைந்தது. அதிலும், இப்படத்தில் விஸ்வாமித்திரரது வாழ்க்கைவரலாறு தொடர்ச்சியாகவே இல்லை.

பூர்வாசிரமத்தில் கௌசிக மகாராஜனாக இருந்த அவர் வசிஷ்ட முனிவரிடத்திருந்த காமதேனுவைக் கண்டு அதைப் பெறும் பொருட்டு அம் முனிவரோடு சண்டை செய்வதும், தமது போர்த் திறமையால் அவரை வெல்ல முடியாததை யறிந்து, தவவலிமையே அவரது அரிய சக்திக்கு மூலகாரணம் என்றுணர்ந்து உடனே அரச கோலத்தை உதறித் தள்ளிவிட்டு, துறவறம் பூண்டு, பலகாலம் தவஞ்செய்து கடைசியில் ராஜரிஷி எனப் பெயர் பெறுவது விஸ்வாமித்திரரது சரித சுருக்கமாகும்.

இப் படத்தில் அவரது சரிதத்தில் சம்பந்தப்பட்ட (இவருக்கு மேனகை வாயிலாக) சகுந்தலை ஜனனம், திரிசங்கு சுவர்க்கம், அரிச்சந்திரன் சத்தியம், சீதாகல்யாணம் ஆகியவை காட்டப்படுகின்றன. ஆனால் அவை கோவையாக இல்லை. அரிச்சந்திரன் சரித்திரம் இப் படத்தில் முக்கால் பாகத்தை விழுங்கி விடுகிறது. அதை இன்னும் கொஞ்சம் சுருக்கி யெடுத்திருக்கலாம்.

இப்படத்தில் ஸ்ரீ. கோபால ஐயங்கார், ஸ்ரீ. பி. ஆர். துரைசாமி ஐயர், ஸ்ரீ. பி. டி. குமாரசாமி பிள்ளை, ஸ்ரீ. சுந்தர பாஷ்யம், ஸ்ரீமதி. ராஜசுந்தரி முதலியோர் முக்கிய பாத்திரமெடுத்து நடிக்கின்றனர். விஸ்வாமித்திரராக வேடம் பூண்டவர் நடிக்கிறாராயினும் சமயோசிதமாக நடிக்கும் ஆற்றல் இன்னும் வேண்டும். திரிசங்கு வேடம்பூண்ட ஸ்ரீ. குமாரசாமி பிள்ளை உன்மத்தனாக நடிக்கு மிடத்தில் தம் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஸ்ரீமதி. ராஜசுந்தரி சந்திரமதியாக நடிக்கிறார். ஒரு பட்ட மகிஷி வேடம் பூண்பதற்குரிய நல்ல தோற்றம் அவரிடமில்லையே யொழிய, சமயோசித நடிப்பும், இனிய சாரீரமும் அமைந்திருக்கிறது. தேவதாசன் இறந்த இடத்தில் ஸ்ரீமதி. ராஜசுந்தரி சோகபாவத்தோடு உருக்கமாகப் பாடி நடிப்பது பாராட்டத் தக்கதாகும். "வாடா என் கண்ணின் மணியே! வந்தொரு முத்தம் தாடா என் கண்ணின் மணியே!" என்ற பாட்டை ஸ்ரீ ராஜசுந்தரி பாடும்போது சோகபாவ நடிப்பில்—முக்கியமாக சந்திரமதி வேடத்தில்—பிரசித்திபெற்று காலஞ்சென்ற ஸ்ரீமதி. எஸ். ஆர். கமலத்தின் ஞாபகம் நமக்கு உண்டாகிறது. எப்பாத்திரத்தைக் கொடுத்


"அலிபாதஷா" தமிழ்ப் பேசும் படத்தில் ஒரு காட்சி.

தானும் தாம் கூடுமானவரை திறமையைக் காட்டி நடிக்க முடியும் என்று இப்படத்தின் வாயிலாக ஸ்ரீமதி. ராஜசுந்தரி காட்டி விட்டார். அரிச்சந்திரனுக வேடந்தரித்த ஸ்ரீ. சுந்தர பாஷ்யமும் சுமாராகப் பாடி நடிக்கிறார். மற்ற நடிகர்களும் இயன்றவரை நடித்திருக்கின்றனர்.

காமதேனுவின் ஜாலக் காட்சி பார்க்கத்தக்கது. தமிழ்ப் படங்களில் சாதாரணமாகக் காணப்படும் சில குற்றங் குறைகள் இப்படத்திலும் இருக்கின்றன.

இச் சினிமாத்துறையில் இவருக்கு உதவியாக இருந்தவரும் ஸ்ரீமதி. நாராயணன் இப் படத்திற்கு ஒலியைப் பதிவு செய்திருப்பது விசேஷ அம்சமாகும். இந்தியாவிலேயே ஸ்ரீமதி நாராயணன்தான் முதல் ஸவுண்ட் ரிகார்டிங் இஞ்சினீயராவார். அது தமிழ்நாட்டுக்கே ஒரு பெருமை யல்லவா! சினிமாத் துறையில் குடும்பப் பெண்களும் நுழைந்து கலையை வளர்ச்சி செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தவரும் இந்நாளில் ஸ்ரீமதி நாராய



"சத்தியசீலன்" என்னும் தமிழ்ப் பேசும் படத்தில் ஒரு காட்சி.

இப்படத்தைத் தயாரித்த டைரக்டர் ஸ்ரீ நாராயணன் ஆவர். அவர் இதற்குமுன் தயாரித்த ஸ்ரீனிவாச கலியாணம், ராஜாம்பாள், தூக்கு தூக்கி முதலிய படங்கள் எதிர்பார்த்த வெற்றியையோ லாபத்தையோ தராது பெரிய ஏமாற்றத்தையுண்டுபண்ணி வந்தும் மனந்தளராது மேலும் முயன்று இப்படத்தை இயன்றவரை சிறந்த முறையில் தயாரித்து வெளியிட்டதை யாரும் பாராட்டியே தீரவேண்டும்.

ணன் ஸவுண்ட் ரிகார்டிங் இஞ்சினீயராக முன் வந்தது போற்றிப் புகழ்தற்குரிய தொன்றன்றே! ஆகவே, சென்னை மாதர் சங்கத்தைச் சேர்ந்தவரும், பெருஞ் செல்வியுமான ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் ஸ்ரீமதி நாராயணனைப் பாராட்டி ஒரு வெள்ளிப் பேழையைப் பரிசாக அளித்ததில் ஆச்சரிய மொன்றுமில்லை.

ஸவுண்ட் ஸிடியில் இது வரையில் எடுக்கப்பட்ட படங்களைக் காட்டிலும்

"விஸ்வாமித்திரா" படம் பல வகையில் சிறந்து விளங்குவதை இங்கு குறிப்பிட வேண்டிய தவசியம்.

ஓரியண்டல் பிக்சர்ஸார் தயாரிக்கும் "ஜனாயினி" தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி.